சேவியர் அவர்கள் ஆய்வாளரும் ஆவார். குறிப்பாகத் தமிழகத்தின் தொன்மை வாய்ந்த வரலாற்று இடங்கள், சமய மரபுகள் மற்றும் பண்பாட்டு அடையாளங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அவரது ஆய்வுகளின் வாயிலாக பல்வேறு வரலாற்று உண்மைகள், இலக்கியச் சான்றுகள், நாட்டுப்புற மரபுகள் மற்றும் சமூக நினைவுகள் ஆகியவை ஒருங்கிணைந்து காணப்படுகின்றன. காவிரி நீரோவியம் என்ற நூறு தலைப்புகள் கொண்ட ஆய்வு நூலை ஆறாண்டு காலம் பயணித்து 2023 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். வைகை நதிகாசம் என்ற நூலுக்காக மூன்றாண்டு காலம் மதுரையில் வைகை நதியோடு பயணித்து அந்நூலில் இருந்து சிதறிய ஒரு நீர்த்துளியாக பரிணமித்ததே திருப்பரங்குன்றம் என்ற ஓர் மிக ஆழமான வரலாற்று ஆய்வு. 11. 8.1967ஆம் அண்டு ராமநாதபுரத்தில் பிறந்து மதுரை பரமக்குடி அருகே உள்ள பார்த்திபனூர் திருவரங்கம் மற்றும் கீழக்கரை உள்ளிட்ட ஊர்களில் ஆரம்பக் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரையும், பட்டப்படிப்பை பாளையங்கோட்டையிலும் பயின்றார். சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர். அவர் தனது ஒரே மகளுக்கு, சுயமரியாதைத் திருமணத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் செய்து வைத்தவர். கடந்த 35 ஆண்டுகளாக திருநெல்வேலியின் பாளையங்கோட்டையில் வசித்து வருபவர். கடந்த 20 ஆண்டுகளாக நாளிதழ் மற்றும் வார மாத இதழ்களில் அரசியல்,சமூகம் மற்றும் பொருளாதாரம் சார்ந்த கட்டுரைகள் எழுதி வருபவர். மதவெறியின் முகவரி, நந்தன் சிண்ட்ரோம், தாமிரபரணியின் தாகம் தீருமா? உள்ளிட்ட பல நூல்களையும் எழுதியவர். தாமிரபரணியை மையமாக வைத்து பொருநைப் பெருவனம், களப்பிரர் ஆட்சியை முன்வைத்து உக்கிரன்கோட்டை, வைகை நதிகாசம், பண்பாட்டின் அரசியல் ஆகிய நூல்களை எழுதும் பணிகளை மேற்கொண்டு இருப்பவர். அரசியல், சமூக பொருளாதாரத்தளத்தில் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொள்பவர். அவர் ஒரு சமூக செயற்பாட்டாளர் ஆவார். தொலைக்காட்சி மற்றும் சமூக வலைதளங்களில் தொடர்ந்து பேசியும் எழுதியும் வருபவர். தனது பேச்சின் மூலமும் எழுத்தின் மூலமும் சமூகத்தில் ஒரு எழுச்சிக் குரலாக வலம் வருபவர். 2021 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் சொல்லின் செல்வர் விருது பெற்ற பெருமைக்குரிய எழுத்தாளரான சூர்யா சேவியருக்கு இவர் எழுதிய காவிரி நீரோவியம் நூலுக்கு சிறந்த தொன்மம் சார் வரலாற்று நூலுக்கான விருதை தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் சங்கம் 2024ஆம் ஆண்டு வழங்கி பெருமைப்படுத்தியது.

தமிழகத்தின் தொன்மை வாய்ந்த ஆன்மீக மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க தலமாக திருப்பரங்குன்றம் விளங்குகிறது. இத்தலம் முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்றாக மட்டுமல்லாமல் தமிழர் பண்பாடு, சமய நல்லிணக்கம், கலை, கட்டிடக்கலை, இலக்கியம் மற்றும் தொல்லியல் வரலாற்றின் அடையாளமாகவும் திகழ்கிறது. இந்த ஆய்வுக் கட்டுரை சூர்யா சேவியரின் திருப்பரங்குன்றம் முழு வரலாற்று ஆய்வு என்ற நூலை மையமாகக் கொண்டு திருப்பரங்குன்றத்தின் பல்வேறு கடந்த கால வரலாற்று, சமய, சமூக மற்றும் கலாச்சார பரிமாணங்களை முழுவதுமாக ஆய்வு செய்கிறது. மதமும், அரசியலும், மதச்சார்பின்மையும் பேசும் மானுடத்தை மறு ஆய்வுக்கு உட்படுத்துகிறது. மதத்தைத் தாண்டிய மானுடத்தின் மகத்துவம் உரைக்கிறது. ஓர் சாதாரண இலக்கியப் படைப்பாக மட்டுமின்றி சநாதான சமுதாயத்தின் மறுமலர்ச்சிக் குரலாக எதிரொலிக்கிறது. இந்த ஆய்வுக் கட்டுரையின் வாயிலாக பல்லாயிரம் ஆண்டுகாலம் பின்னோக்கிப் பயணித்து மறைக்கப்பட்ட, மறுக்கப்பட்ட பல வரலாறுகளை காணலாம்.

தமிழகத்தின் தொன்மை, பண்பாடு, சமயம் மற்றும் மனிதநேய மரபுகளைத் தன்னகத்தே சுமந்து நிற்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாக திருப்பரங்குன்றம் விளங்குகிறது. சங்க இலக்கியங்களில் இருந்து சமகால சமூக வரலாறு வரை பல்வேறு அடுக்குகளைக் கொண்ட இத்தலம், தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல் அடையாளங்களில் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. முருகன் வழிபாட்டின் முக்கியத் தலமாக அறியப்படும் திருப்பரங்குன்றம், மதச்சார்பின்மை, கலாச்சார ஒற்றுமை மற்றும் மனிதநேய வாழ்வியலின் அடையாளமாகவும் திகழ்கிறது. இத்தகைய பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட திருப்பரங்குன்றத்தை ஆழமாக ஆராய்ந்து பதிவு செய்யும் முயற்சியாக இந்நூல் அமைகிறது. இந்நூலில், திருப்பரங்குன்றத்தின் வரலாற்று வளர்ச்சி, சமயப் பின்னணி, அரசியல் தாக்கங்கள், மக்கள் வாழ்வியல், பண்பாட்டு மரபுகள் மற்றும் சமூக மாற்றங்கள் ஆகியவை விரிவாக எடுத்துரைக்கப்படுகின்றன.

தொல்பொருள் ஆதாரங்கள், இலக்கியச் சான்றுகள், கல்வெட்டுகள் மற்றும் நாட்டுப்புற நினைவுகள் போன்ற பல்வேறு தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளர் தனது கருத்துகளை அமைத்துள்ளார். இதனால் இந்நூல் வெறும் தகவல் தொகுப்பாக இல்லாமல், ஆதாரபூர்வமான வரலாற்று ஆய்வாக மாறியுள்ளது. சூர்யா சேவியர் அவர்களின் எழுத்து நடை எளிமையும் ஆழமும் கலந்ததாக அமைகிறது. வாசகர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துகளை முன்வைப்பதோடு, சமூகப் பொறுப்புணர்வையும் சிந்தனையையும் உருவாக்கும் விதமாக அவரது அணுகுமுறை அமைந்துள்ளது. குறிப்பாக, மதத்தைத் தாண்டிய மனிதநேயம், சமய நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமை ஆகிய கருத்துகள் இந்நூலின் மையக் கருத்துகளாக வெளிப்படுகின்றன. திருப்பரங்குன்றம் ஒரு சமயத் தலம் மட்டுமல்லாது, பல்வேறு சமுதாயங்கள் இணைந்து வாழ்ந்த பண்பாட்டு இடமாக இருந்ததையும் ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார். மேலும், இந்நூல் கடந்த காலத்தை மட்டும் பதிவு செய்வதல்ல; இன்றைய சமூகத்திற்குத் தேவையான மனிதநேயச் சிந்தனைகளையும் முன்வைக்கிறது.

மதம், அரசியல் மற்றும் சமூக வாழ்க்கை ஆகியவை ஒன்றோடொன்று எவ்வாறு தொடர்புபட்டுள்ளன என்பதையும்,அவை மனித வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் ஆய்வாளர் விமர்சன ரீதியில் ஆராய்கிறார். இதன் மூலம் வாசகர்கள் வரலாற்றை வெறும் நிகழ்வுகளின் தொகுப்பாக அல்லாமல், சமகால வாழ்க்கையோடு தொடர்புபடுத்திப் புரிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெறுகின்றனர். தமிழ் ஆய்வுலகில் திருப்பரங்குன்றம் குறித்த விரிவான ஆய்வுகள் மிகக் குறைவாக உள்ள சூழலில், இந்நூல் ஒரு முக்கியமான பங்களிப்பாக அமைகிறது. மாணவர்கள், ஆய்வாளர்கள், தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் பொதுவாசகர்கள் அனைவருக்கும் இது பயனுள்ள வழிகாட்டி நூலாக இருக்கும். வரலாற்றை நேசிக்கும் ஒவ்வொருவரின் கைகளிலும் இந்நூல் இடம்பெற வேண்டிய அரிய படைப்பாக திகழும் என்ற நம்பிக்கையுடன், இந்த முன்னுரையை மகிழ்ச்சியுடன் வழங்குகிறேன்.

**பரங்குன்றமும் வரலாறும்**

இரண்டாயிரம் ஆண்டுகால சங்கத்தமிழ் வரலாற்றில் தமிழ் இலக்கியங்களின் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பரிபாடலில் பாடப்பட்ட 70 பாடல்களும் முழுக்க முழுக்க மதுரையையும், வைகையையும், முருகனையும் குறித்தே பாடப்பெற்றது. நல்லந்துவனார். இயற்றிய பரிபாடலின் ஆறாவது பாடல் மதுரையையும் வைகையையும் போற்றும் விதமாக பாடப்பட்டது.

நிறைகடல் முகந்து உராய், நிறைந்து, நீர் துளும்பும்
தம் பொறை தவிர்பு அசைவிடப் பொழிந்தன்று, வானம்;
நிலம் மறைவது போல் மலிர் புனல் தலைத் தலைஇ ,
மலைய இனம் கலங்க, மலைய மயில் அகவ, மலை
மாசு கழியக் கதலும் அருவி இழியும்...

மதுரையைக் கோயில் நகரம் என்று அழைப்பது பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாகக் கருதினாலும் அவ்வாறு அழைப்பது ஆதிக்கக் கூட்டத்தாரின் மனப்பான்மை எனவும் சொல்லலாம். மதுரை ஒரு நகரத்தின் பெயர் மட்டுமல்ல, அது தமிழ் நிலத்தின், தமிழ் மொழியின், தமிழ் இலக்கியத்தின் தொன்று தொட்ட வரலாறாகும். கோயில் நகரம் என்ற குறுகிய வட்டத்திற்குள் சுருக்குவதற்குப் பின் மிகப்பெரிய அரசியல் இருக்கிறது. மதுரைப் பகுதியில் வெள்ளாங்குளம், துவரிமான், கோவலன் பொட்டல் போன்ற இடங்களில் கண்டறியப்பட்டுள்ள புதிய கற்காலக் கருவிகளும் போடிக்கருகில் செலமலைப் பகுதியில் கண்டறியப்பட்டுள்ள புதிய கற்காலக் கோடாரியும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

மலையும், மனிதர்களும் தோன்றிய போது அரசு என்பது இல்லை. ஏனெனில் அப்போது இனக்குழு முறையே இருந்தது. ஆரம்பக் கால மனிதச் செயல்பாடுகள் என்ன என்பது குறித்து மானுடவியல் ஆய்வாளர்கள் பல்வேறு கருத்துகளை முன்வைத்துள்ளனர். உயிரின பரிணாம வளர்ச்சிப் படிநிலையைப் போலவே மனித குல வரலாறும் பல படிகளைக் கடந்து வந்துள்ளதை மாமேதை மார்க்ஸ் தனது ‘அரசியல் பொருளாதாரம்’ எனும் நூலில் விரிவாக எடுத்துரைத்தார்.

(**திருப்பரங்குன்றம், பக்கம்** 41)

தமிழ்நாட்டில் வேறு எந்த இடத்திற்கும் இல்லாத சிறப்பு மதுரைக்கு உண்டு. யாதெனில் காலத்தால் முந்தைய மனிதர்கள் இங்கு வாழ்ந்ததன் அடையாளமான கீழடி நம் முன் நிற்கிறது. கீழடி மட்டுமின்றி பரங்குன்றத்தின் இயற்கை வளமும் மதுரையின் அடையாளமாகத் திகழ்கிறது. திருப்பரங்குன்றத்தின் வரலாற்றின் மூலங்களை அறிய, சங்க இலக்கியங்கள் மிக முக்கியக் காரணிகளாக உள்ளன. திருப்பரங்குன்றம் என்றாலே முழுமுதற் கடவுள் ஆன முருகன் குடி கொண்டுள்ள இடமாகவே மக்களால் நம்பப்பட்டு வருகிறது.

“சேயுயர் பிணிமுகம் ஊர்ந்து அமர் உழக்கி” பரிபாடல் 5.2
“பிணிமுகம் ஊர்ந்த வெல்போர் இறைப” பரிபாடல் 461
“பிணிமுக மேற்கொண்டவுணர்” சிலப்பதிகாரம் 9
“ஓடாய் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி”திருமுருகாற்றுப்படை 247

யானை மீது ஏறி வந்த வீரன் முருகனை மயில் மீது ஏற்றியது யார்? என்ற கேள்வியோடே பயணிக்கிறது திருப்பரங்குன்றம் நோக்கிய வரலாற்று ஆய்வு. பண்டைத் தமிழர்கள் கொற்றவை வழிபாடு, வேல் வழிபாடு, முருகன் வழிபாடு, நடுகல் வழிபாடு என பல வழிபாட்டு முறையைக் கடந்து வந்தனர். பரங்குன்றம் மலையில் பிராமி எழுத்துகளால் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்று மலையில் மேற்குத் திசையில் உள்ளது. இம்மலையில் பௌத்தர்களும் தங்கி இருந்ததை பல்வேறு ஆதாரங்கள் நிரூபிக்கின்றன. சமணர்களின் வருகைக்குப் பிறகு பௌத்தர்களின் செல்வாக்கு குறைந்தபொழுது பரங்குன்றம் சமணர் வசம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறாக இயற்கையால் உருவாக்கப்பட்ட இந்த குகைத்தளம் இரண்டாம் நூற்றாண்டளவில் ஒரு சமணப் பள்ளியாக மாற்றப்பட்டது என சூர்யா சேவியரின் இவ்வரலாற்று ஆய்வில் கூறப்பட்டுள்ளது. பௌத்தமும் சமணமும் வீழத் தொடங்கியவுடன் பக்தி இயக்கம் உருவாகி, இதுவரை முருக வழிபாட்டுத் தலமான பரங்குன்றம் சிவனின் வழிபாட்டுத் தலமாக மாற்றப்பட்டது. இதனால் முருகன் கோயில், சிவன் கோயிலாக மாற்றப்பட்டது என வரலாற்று ஆதாரங்கள் நிரூபிக்கின்றன. அன்றிலிருந்து இன்று வரை பரங்குன்றத்தில் நடைபெறுவது சிவ வழிபாடாகவே உள்ளது. அதோடு மட்டுமின்றி உழைக்கும் தமிழ் மக்களின் கடவுளான முருகன் அதிகார வர்க்கத்தின் சுப்பிரமணியாக பெயர் மாற்றப்பட்டதும் ஒருவகை அரசியல் தான்.

உழைக்கும் மக்களின் முருகன், மேட்டுக்குடி மக்களின் சுப்பிரமணியனாக மாற்றப்படுகிறான். பரங்குன்றத்தின் உழைக்கும் மக்களின் கடவுளாக

கருப்பண்ண சுவாமியும், வெயிலுகந்தம்மனும், பேச்சியாத்தாளும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்துள்ளனர். எனவே இத்தெய்வங்களின் வழிபாடுகளை விழாக்காலத்தில் சுப்பிரமணிய சுவாமியின் திருவிழாவோடு இணைக்கிறார்கள். எல்லோரும் இணைந்திருப்பது தவறல்ல. ஆனால் உன் தெய்வம் சிறு தெய்வம், என் தெய்வம் பெருந்தெய்வம் என்று பிரிப்பது தான் பிரச்சனைக்குக் காரணமாக இருக்கிறது.

(**திருப்பரங்குன்றம்,பக்கம்** 71)

அதிகாரமும் ஆட்சியும் காலமாற்றத்திற்கு உட்பட கடவுளும் மாற்றப்பட்டுள்ளனர். இவ்வாறாகக் கடவுளை மாற்றுவதற்கு பக்தி என்றே பெயரிட்டனர். கடவுளை கடவுளின் பெயர் சொல்லியே களவாடிக் கொண்டிருந்தனர். இருப்பினும் தமிழ் முருகனை ஆரிய கடவுளாக்கியதற்கு பெரும் எதிர்ப்புக் குரலும் எழுந்துள்ளதை வரலாற்றின் வழி அறியலாம். பரங்குன்றம் சுப்பிரமணியனை வழிபட இன்றுவரை பிறமலைக்கள்ளர்கள் புறக்கணித்தே வந்துள்ளனர் என்பது வரலாறு நமக்கு உணர்த்தும் பாடம்.

**மதச்சார்பின்மையும், அரசியலும், மதமும்**

சூர்யா சேவியர் அவர்களின் “திருப்பரங்குன்றம் – முழு வரலாற்று ஆய்வு” என்னும் நூல், திருப்பரங்குன்றத்தின் வரலாற்றை மட்டும் பதிவு செய்யாமல், மதம், அரசியல் மற்றும் மதச்சார்பின்மை ஆகியவை சமூக வாழ்வில் எவ்வாறு ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ளன என்பதையும் ஆழமாக ஆராய்கிறது. குறிப்பாக, தமிழக சமூகத்தில் மதத்தின் தாக்கமும் அரசியலின் செல்வாக்கும் மனித வாழ்வை எவ்வாறு வடிவமைத்துள்ளன என்பதைக் கருத்தியல் அடிப்படையில் இந்த நூல் வெளிப்படுத்துகிறது.

திருப்பரங்குன்றம் தொன்மை வாய்ந்த சமயத் தலமாக அறியப்பட்டாலும், அது வெறும் மத அடையாளமாக மட்டும் இல்லாமல் பல்வேறு கலாச்சாரங்களும் சமூகங்களும் இணைந்து வாழ்ந்த இடமாகவும் திகழ்கிறது. இந்த வரலாற்றுப் பின்னணியை ஆசிரியர் மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார். முருகன் கோயிலை மையமாகக் கொண்ட சமய மரபுகள், மக்கள் நம்பிக்கைகள், திருவிழாக்கள் மற்றும் ஆன்மிகச் சடங்குகள் சமூக வாழ்க்கையில் முக்கிய பங்காற்றியுள்ளன என்பதை நூல் விளக்குகிறது. அதே சமயம், மதம் மனித ஒற்றுமைக்கு வழிவகுக்க வேண்டுமே அன்றி பிரிவினைக்குக் காரணமாக மாறக்கூடாது என்ற மனிதநேயக் கருத்தும் நூலில் வலியுறுத்தப்படுகிறது.

மதச்சார்பின்மை குறித்து ஆசிரியர் முன்வைக்கும் சிந்தனைகள் இந்நூலின் முக்கிய அம்சமாகும். இந்திய அரசியலமைப்பில் கூறப்படும் மதச்சார்பின்மை என்பது மதமின்மையல்ல; அனைத்து மதங்களையும் சமமாக மதிக்கும் ஜனநாயகக் கொள்கையாகும் என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார். திருப்பரங்குன்றம் போன்ற இடங்களில் இந்த மத நல்லிணக்கத்தின் அடையாளங்களைக் காண முடிகிறது. பல சமயங்களைச் சேர்ந்த மக்கள் ஒரே இடத்தில் இணைந்து வாழ்ந்த வரலாறு, தமிழகத்தின் பண்பாட்டுச் சகிப்புத்தன்மையை வெளிப்படுத்துகிறது என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

அரசியலும் மதமும் இணையும் போது சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களையும் நூல் ஆராய்கிறது. அரசியல் சக்திகள் மத உணர்வுகளைப் பயன்படுத்தி மக்களைக் கட்டுப்படுத்த முயன்ற நிகழ்வுகளையும், அதனால் உருவான சமூகப் பிரச்சினைகளையும் ஆசிரியர் விமர்சனப் பார்வையில் அணுகுகிறார். மதம் மனிதனின் ஆன்மீக முன்னேற்றத்திற்கானக் கருவியாக இருக்க வேண்டும்; அரசியல் ஆதிக்கத்திற்கான ஆயுதமாக மாறக்கூடாது என்ற கருத்து நூலின் அடிநாதமாக உள்ளது. இதன் மூலம் ஆசிரியர் சமகால அரசியல் சூழலையும் மறைமுகமாக சிந்திக்க வைக்கிறார்.

இந்த நூல் மனிதநேயத்தை மையமாகக் கொண்ட அணுகுமுறையை வலியுறுத்துகிறது. சாதி, மதம், அரசியல் வேறுபாடுகளைத் தாண்டி மனித ஒற்றுமை நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதே ஆசிரியரின் அடிப்படைச்

சிந்தனை. வரலாற்றை வெறும் நிகழ்வுகளின் தொகுப்பாக அல்லாமல், சமகால சமூக விழிப்புணர்வை உருவாக்கும் கருவியாக பயன்படுத்தியிருப்பது இந்நூலின் சிறப்பாகும். இதனால், திருப்பரங்குன்றம் – முழு வரலாற்று ஆய்வு ஒரு சாதாரண வரலாற்று நூலாக இல்லாமல், மதச்சார்பின்மை, மத நல்லிணக்கம் மற்றும் சமூக மனிதநேயம் குறித்து சிந்திக்க வைக்கும் முக்கியமான ஆய்வு நூலாக திகழ்கிறது.

சூர்யா சேவியரின் திருப்பரங்குன்றம் குறித்த வரலாற்று ஆய்வு பல்வேறு பரிமாணங்களை படம் பிடித்துக் காட்டுகிறது. குறிப்பாக மதச்சார்பின்மை, அரசியல் மற்றும் மதம் ஆகிய மூன்று முக்கியமான இயக்கத்திற்கான உறவை ஆழ்ந்து ஆராய்கிறது. மதம் என்பது ஒரு மனிதனின் அல்லது ஒரு இனத்தின் நம்பிக்கை, வாழ்க்கை முறைகள் மற்றும் பண்பாட்டுடன் தொடர்புடையது. திருப்பரங்குன்றத்திலும் இந்த மதம் சார்ந்த அடையாளங்கள் காணப்படுகின்றன. இங்கு இந்துமதம் மட்டுமின்றி இஸ்லாம் மற்றும் சமண மதத்திற்கான தடயங்களும் காணப்படுகின்றன. சூர்யா சேவியர் தனது ஆராய்ச்சியில் மதம் வெறும் ஆன்மீக நம்பிக்கையோடு மட்டுமின்றி திருப்பரங்குன்றத்தில் சமூக-அரசியல் போக்கை தீர்மானிக்கும் மிக முக்கிய அம்சமாக விளங்குவதை விளக்கியுள்ளார். அரசர்கள் கோயில்களை பராமரித்தலின் மூலம் தங்கள் செல்வாக்கை நிலை நிறுத்தினர். கோயில்கள் வெறும் வழிபாட்டுத்தலமாக மட்டுமின்றி பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடி அரசியல் செல்வாக்கை நிலை நாட்டும் இடமாகவும் விளங்கியது. அரசியல் மற்றும் மதம் இணைந்ததற்குச் சான்றாக பாண்டியர் மற்றும் நாயக்கர் காலங்களில் திருப்பரங்குன்றத்திற்கு வழங்கப்பட்ட உதவிகளைக் கூறலாம். மதம் மற்றும் அரசியலுக்கான தொடர்பு நவீன காலத்தில் புதிய விதத்தில் தொடர்கிறது. அரசியலில் மதம் சார்ந்த கோயில்கள், திருவிழாக்கள் மற்றும் மத உணர்வுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அரசியல் கட்சிகளின் ஆயுதமாக மக்களின் மத உணர்வுகள் கையில் எடுக்கப்படுகின்றன.

> இங்கு இந்து மதத்தை மட்டுமே விமர்சிக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். எங்கு எது பெரும்பான்மையாக இருக்கிறதோ, எம்மதம் அங்குள்ள மக்களின் வாழ்க்கைக் கூறுகளைத் தீர்மானிக்கிறதோ, அங்கு அம்மதம் விமர்சிக்கப்பட்டே வந்துள்ளது. ஐரோப்பாவில் கிறிஸ்தவமும், அரேபியாவில் இஸ்லாமும், ஆசியாவில் பௌத்தமும் விமர்சிக்கப்படுகின்றன.... எந்த ஒரு சமூகம், அரசையும், மதத்தையும் விமர்சிக்கத் தொடங்குகிறதோ அந்தச் சமூகம் முன்னேறத்துடிக்கிறது என்று பொருள். உலகில் ஏற்பட்ட அறிவியல் முன்னேற்றங்களும், கண்டுபிடிப்புகளும் மத அதிகாரங்களை எதிர்த்து உருவானவை தான் என்பதை மறந்து விடக்கூடாது.
>
> (**திருப்பரங்குன்றம், பக்கம்** 151)

இந்தியாவில் ஏற்பட்ட மிகப்பெரிய புரட்சிக்குக் காரணமாக அம்பேத்கர், பெரியார் போன்ற மாபெரும் தலைவர்களின் கேள்விகள் தான் இருந்தன. இவர்கள் மட்டும் இன்றி பல புரட்சியாளர்களையும் போராளிகளையும் இந்தியச் சமூகம் கண்டிருக்கிறது. சூர்யா சேவியரின் கூற்றுப்படி இந்து என்பது ஒரு மதம் அல்ல, அது சில சட்டங்களின் தொகுப்பாகும். மதம் என்ற பெயரில் மக்களால் மக்களுக்கே விளைகின்ற கேடுகள் பல அவற்றுள் திணிக்கப்படும் விதிகளை அடிமைத்தனமாக ஏற்றுக் கொண்டு வாழ்தல், அநியாயம்- அநீதி, கட்டளைகளுக்கு கீழ்ப்படிதல் போன்ற பல தீயச் செய்கைகள் அடங்கும். மதம் மனிதனை பண்படுத்துவதற்குப் பதிலாக புண்படுத்துகிறது. மதம் என்ற பெயரில் நிகழும் மனித உரிமை அத்துமீறல்களும் ஆங்காங்கே நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

> மக்கள் மனதில் பதிந்திருக்கும் இந்த 'மதம்' என்ற தவறான கருத்தை நீக்குங்கள். மதம் என்று தங்களுக்குக் கூறப்பட்டது மதமே அல்ல; சட்ட விதிகளே என்ற உண்மையை அவர்கள் உணர்ந்து கொள்ளச் செய்யுங்கள். இந்தப் பணியைச் செய்து முடித்ததுமே, மதம் எனக் கூறப்படும் இச்சட்ட விதிகளை சீர்திருத்தியாக வேண்டும்

அல்லது அடியோடு அழித்துவிட வேண்டும் என்று வலியுறுத்துவதற்கான தார்மீக பலம் உங்களுக்குத் தானாகவே எழும்.

**(பாபாசாகேப் டாக்டர்.அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு: 1, பக்கம் 66)**

வெள்ளை ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் கொள்கை என்ற சூழ்ச்சி வலையில் மாட்டிக்கொண்ட இந்த நாட்டில் மதவெறி எனும் தீய உணர்வும் தலைவிரித்தாடியது ஒரு காலம். அக்காலகட்டத்தில் தான் மதச்சார்பற்ற இந்தியாவும், மதம் சார்ந்த பாகிஸ்தானும் தோன்றின. மதம் என்ற பெயரால் மொழிகளாலும் மக்கள் பல திசைகளில் பிரிக்கப்பட்டனர். மொழியாலும் பண்பாட்டாலும் பிரிந்தவர்களை மதத்தாலும் ஏன் மனிதத்தாலும் கூட ஒன்றிணைக்க முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் இந்தியாவில் பல மொழிகள் பேசும் பல மதங்கள், பல பண்பாடுகள் இணைந்திருக்கும் காரணங்களால்தான் இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை எனும் தாரக மந்திரத்தை தரணியெங்கும் ஒலிக்கச் செய்தது. மதமும் அரசியலும் ஏற்படுத்திய அறியாமையை அழிக்க மதச்சார்பின்மை என்ற ஒரு புதிய பார்வை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவேதான் மதச்சார்பின்மை என்ற வார்த்தை, கொள்கையானது. அந்தக் கொள்கை நவீன கருத்தியலின் வெளிப்பாடாகவும் கருதப் படுகிறது. அறிவியலும் தொழில்நுட்பமும் வளர்ந்ததோடு மதச்சார்பின்மை என்ற கொள்கையும் மக்களிடத்தில் வளரத் தொடங்கியது. மதச்சார்பின்மை பற்றிய சூர்யா சேவியரின் பார்வை இன்னும் சற்று வித்தியாசமானது.

மதச்சார்பின்மை என்பது சூதுவாது இல்லாத எல்லோரையும் அரவணைத்துத் தாஜா பண்ணுகிற மங்கினித்தனமான மனநிலை அல்ல. சக்தியும் வீரியமும் போர்க்குணமும் படைப்பூக்கமும் கொண்டு இயங்குகிற பண்பாட்டுச் செயல்முறை. ஆனால், இந்த அதி உன்னதமான நிலையிலிருந்து விலகியதன் பிரதான காரணம் யாதெனில், பெரு முதலாளிகள் மற்றும் கார்ப்பரேட்டுகள் சார்ந்த பொருளாதாரக் கொள்கையால் பெரும்பான்மை மக்களின் பொருளியல் தேவைகள் நிறைவேறாமல் போனதன் நெருக்கடியிலிருந்து திசை திருப்பவே. மீண்டும் ஒரு வரலாற்று உக்கிரங்கள் மனதில் ஏற்றி, அதில் மானுட ரத்தம் குடித்து, மேலும் மிருகமாய் தன்னை ஊதிப் பெருக்கி, தன் ஆயுளை சிலகாலம் நீட்டித்துச் செல்லும் அணுகுமுறையே தற்போதைய இலக்கு.

**(திருப்பரங்குன்றம், பக்கம் 187)**

சூர்யா சேவியர் என்ற வரலாற்று ஆய்வாளரால் பல மதத்தினர் வாழும் இந்திய நாட்டில் மத அடையாளம் முன்னிறுத்திப் பார்க்கப்படும் சிறுபான்மை மதவாதமும் வாதத்திற்கு உட்படுத்தப்படுகிறது.

### மதத்தைத் தாண்டிய மானுடம்

இந்தியாவில் எழுந்துள்ள மதவாதத்தின் மைய நாயகனாக வெள்ளையர்கள் இருந்தார்கள். ஆங்கில ஏகாதிபத்தியம், தனது இருத்தலை நிலைநிறுத்த உருவாக்கிய இடைக்கால ஏற்பாட்டின் நீட்சியே இன்றைய இந்திய மதவாதமாகும். இங்குள்ள மக்களிடம் இருந்த மதங்களை மதமரபில் தான் இனி இந்திய அரசியல் என்ற நாசகார வேலையைத் தொடங்கி வைத்தனர்.

**(திருப்பரங்குன்றம், பக்கம் 161)**

மதத்தைத் தாண்டிய மானுடம் என்பது மத வேறுபாடுகளை விட மனிதநேயம் மிகவும் மகத்தானது என்பதைக் குறிக்கும் மிக உயர்ந்த கருத்தாகும். மனிதன் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் மனிதப் பண்புகள் அனைவருக்கும் பொதுவானவை. மதம் மனிதனை நல்வழிப்படுத்த வேண்டுமே தவிர, சமூகத்தில் பிளவை ஏற்படுத்தி மனிதநேயம் இல்லாத சமூகத்தை உருவாக்க வழி வகுக்கக் கூடாது. மதத்தைத் தாண்டிய மானுடம் என்ற உயரிய சிந்தனை உலகத்தில் தழைத்தோங்க வேண்டும். இந்த உயரிய சிந்தனை மனிதனை மனிதனாக மதிக்க வழிவகை செய்கிறது. ஆதலால் மத அடையாளங்களை விடவும் மனிதாபிமானம் முக்கியம் என்பதை பல்வேறு எழுத்தாளர்கள் தங்கள் எழுத்தின் மூலம் வலியுறுத்தி வருகின்றனர். திருவள்ளுவர், பாரதியார், அப்துல் கலாம் போன்ற பல

சிந்தனையாளர்கள் மனித ஒற்றுமையை பலப்படுத்தியுள்ளனர். இன்றைய நவீன உலகில் மத மோதல்கள் அதிகரிக்கும் சூழலில் மதத்தைத் தாண்டிய மானுடப் பார்வை மிகவும் முக்கியமாகிறது. இன்றைய நவீன யுகத்தில் வேற்றுமைகள் பலவிதங்களில் உருவாகி இருக்கின்றன. வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையை நிலை நாட்டுவது சமூக அமைதிக்கும், ஒருமைப்பாட்டிற்கும், சகோதரத்துவத்திற்கும், உலக சமாதானத் திற்கும் மிக முக்கிய அடிப்படை அம்சமாக விளங்குகிறது. சூர்யா சேவியரின் திருப்பரங்குன்றம் என்ற இந்த வரலாற்று ஆய்வும் மனிதத்தை தான் எடுத்துரைக்கிறது.

மனித சமூகம் காலந்தோறும் பல்வேறு மாற்றங்களை எதிர்கொண்டு வளர்ந்து வந்துள்ளது. அறிவியல், தொழில்நுட்பம், அரசியல் மற்றும் பொருளாதார முன்னேற்றங்கள் மனித வாழ்க்கையை மேம்படுத்தியுள்ள போதிலும், மனிதநேயம் மற்றும் மானுட மதிப்புகள் பல இடங்களில் சிதைவடைந்து வருகின்றன. இந்நிலையில், “மனிதத்தை தாண்டிய மானுடப் பார்வை” என்பது வெறும் தனிநபர் வாழ்வை மட்டுமல்லாது, அனைத்து உயிர்களையும் சமூகங்களையும் சமமாகக் கருதும் உயர்ந்த சிந்தனையாகப் பார்க்கப்படுகிறது. மனிதன் தனக்காக மட்டுமே வாழாமல், பிற உயிர்களின் துன்பங்களையும் சமூகத்தின் தேவைகளையும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதே இந்தக் கருத்தின் அடிப்படை ஆகும்.

மானுடப் பார்வை என்பது மனிதர்களுக் கிடையேயான அன்பு, சமத்துவம், இரக்கம் மற்றும் ஒற்றுமையை வலியுறுத்துகிறது. ஆனால் மனிதத்தைத் தாண்டிய மானுடப் பார்வை, மனிதர்களுக்கு மட்டும் கட்டுப்பட்ட தல்ல. அது இயற்கை, விலங்குகள், சுற்றுச்சூழல் மற்றும் எதிர்கால தலைமுறைகளின் நலனையும் உள்ளடக்கிய விரிவான சிந்தனையாக அமைகிறது. உலகம் முழுவதும் நடைபெறும் போர்கள், மத மோதல்கள், சாதி அடக்கு முறைகள் மற்றும் சுற்றுச்சூழல் அழிவுகள் மனிதனின் சுயநல மனப்பான்மையை வெளிப்படுத்துகின்றன. இத்தகையச் சூழலில், மனிதன் தனது சுயநலத்தைத் தாண்டி உலக நலனை நோக்கிச் சிந்திக்க வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது.

தமிழ் இலக்கியங்கள் தொன்மை காலத்திலிருந்தே மனிதநேயச் சிந்தனைகளை வலியுறுத்துகின்றன. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற கணியன் பூங்குன்றனாரின் வரிகள் உலகச் சகோதரத்துவத்தை எடுத்துரைக் கின்றன. அதேபோல், திருவள்ளுவர் அன்பையும் அறத்தையும் மனித வாழ்வின் அடிப்படையாகக் கூறுகிறார். இந்த சிந்தனைகள் மனிதத்தைத் தாண்டிய மானுடப் பார்வையின் அடித்தளமாக விளங்குகின்றன. மனிதன் தனது சாதி, மதம், மொழி மற்றும் இன அடையாளங்களைத் தாண்டி அனைத்து உயிர்களையும் சமமாகக் கருதும் போது தான் உண்மையான மனிதநேயம் உருவாகிறது.

இன்றைய உலகில் தொழில்நுட்ப வளர்ச்சி மனிதர்களை ஒருபுறம் இணைத்தாலும், மறுபுறம் தனிமையையும் மன அழுத்தத்தையும் அதிகரித்துள்ளது. பொருளாதார வெற்றியே வாழ்க்கையின் குறிக்கோளாக மாறியதால், அன்பு, உறவு மற்றும் சமூகப் பொறுப்பு போன்ற மதிப்புகள் குறைந்து வருகின்றன. இதனால் மனித உறவுகள் பலவீனமடைந்து வருகின்றன. மனிதத்தைத் தாண்டிய மானுடப் பார்வை, இந்த நிலையை மாற்றக்கூடிய ஆழமான சிந்தனையாகும். இது மனிதர்களுக் கிடையேயான அக்கறையையும் சமூக நீதியையும் வலியுறுத்துகிறது.

மேலும், மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ வேண்டும் என்பதையும் இந்தப் பார்வை உணர்த்துகிறது. இயற்கை வளங்களை அளவுக்கு மீறிப் பயன்படுத்துவதால் சுற்றுச்சூழல் பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. இதனால் மனித வாழ்வே ஆபத்துக்குள்ளாகிறது. ஆகவே, மனிதன் தனது தேவைகளை மட்டுமல்லாது, பிற உயிர்களின் வாழ்வுரிமையையும் பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது.

முடிவாக, மனிதத்தைத் தாண்டிய மானுடப் பார்வை என்பது உலக ஒற்றுமை, சமத்துவம், அன்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மையமாகக் கொண்ட உயர்ந்த மனிதநேய சிந்தனையாகும். மனிதன் தனது சுயநல எல்லைகளைத் தாண்டி, அனைத்து உயிர்களையும் மதித்து வாழும் போது தான் உலகில் உண்மையான அமைதியும் நல்லிணக்கமும் உருவாகும்.

**முடிவுரை**

> வன்முறைகள் மூலம் எந்த ஒரு அரசும் தங்களை நீடிக்கச் செய்ய இயலாது. அதே போல் வன்முறை மூலம் அதிகாரவர்க்க அரசை அகற்றிவிடவும் முடியாது. ஏனெனில், வன்முறை எப்போதும் வாழ்க்கைமுறை ஆகாது.
> வாழ்க்கை முறை எப்போதும் வன்முறைக்கு எதிரானது. வாழ்க்கை முறையின் மீது நம்பிக்கை இல்லாததால் ஆட்சியாளர்கள் வன்முறையைக் கையிலெடுக்கிறார்கள்.
> வன்முறையை விட நிலைத்த வலுவான ஆயுதம் வாழ்க்கை முறையிலிருந்து எழும் போராட்டங்கள் தான். வன்முறை என்பது கும்பல் மனநிலை சார்ந்தது. கூடும், கலவரம் செய்யும், அழிந்து போகும். வாழ்க்கைமுறை கொள்கை சார்ந்தது. அதன் வேர் ஆழமானது. எளிதில் அசைத்து விட முடியாதது. ஏனெனில் வாழ்க்கைமுறை என்பது இறை சார்ந்ததல்ல. இயற்கை சார்ந்தது.
>
> ( **திருப்பரங்குன்றம், பக்கம்** 161)

சூர்யா சேவியர் அவர்களின் "திருப்பரங்குன்றம் - மதத்தைத் தாண்டிய மானுடம்" என்ற உயரிய சிந்தனையை, மத எல்லைகளைக் கடந்த மனிதநேயம் என்ற தலைசிறந்த கொள்கைகளை சமூகத்தில் வலியுறுத்துகிறது. இந்தக் கருத்துக்கள் அனைத்தும் திருப்பரங்குன்றத்தை குறுகிய அடையாளம் எனும் வட்டத்திற்குள் திணிக்காமல் ஒரு பரந்து விரிந்த பார்வையை உலகிற்கு அளிக்கிறது. திருப்பரங்குன்றம் மதத்தையும் தாண்டி மனிதர்களை ஒன்றிணைத்து வாழ்ந்த ஒரு வரலாற்றுச் சின்னமாகும். முருகன் கோயில், இஸ்லாமிய தர்கா, சமண மரபுகள் போன்றவை ஒருங்கே ஓரிடத்தில் அமைந்த இடம் இந்த பரங்குன்றம் ஆகும்.

சூர்யா சேவியர் இந்த இடத்தை ஒரு மனித ஒற்றுமையின் சான்றாகப் பார்க்கிறார். அவரது பார்வையில் மதத்தால் மனிதன் வேறுபட்டு நிற்கக்கூடாது. அவர் மத அரசியலை பெரிதும் விமர்சிக்கிறார். மதத்தைத் தாண்டிய மானுடம் என்பது மத மறுப்பு அல்ல, அது ஒரு மனிதநேய சாரத்தை ஏற்றுக்கொள்ளும் அணுகுமுறை என்பதை அவரது எழுத்துக்கள் எடுத்துரைக்கின்றன. மானிடம் பறைசாற்றும் முக்கிய இடங்களில் ஒன்றான திருப்பரங்குன்றம் மனித வாழ்வியல் அடையாளச் சின்னமாகும். மனிதம் நோக்கிய ஒரு மறுமலர்ச்சிக் குரலாக சூர்யா சேவியரின் இப்படைப்பு காலம் கடந்தும் நிலைத்து நிற்கும், அதன் சமுதாயம் நோக்கியப் பார்வையும், மனிதத்தை நோக்கியக் குரலும் ஒலித்துக் கொண்டிருக்கும்.

**நூல் குறிப்புகள்**


சூர்யா சேவியர். திருப்பரங்குன்றம் – முழு வரலாற்று ஆய்வு. சென்னை: பாரதி புத்தகாலயம், 2026.

மு. வரதராசனார். தமிழ் இலக்கிய வரலாறு. சென்னை: சாகித்ய அகாடெமி, 2000.

திருக்குறள். திருவள்ளுவர். சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2010.

புறநானூறு. சென்னை: தமிழ்ப் பல்கலைக்கழகம், 2003.

சிலப்பதிகாரம். இளங்கோவடிகள். சென்னை: கழக வெளியீடு, 2008.


**சுயவிவரக் குறிப்பு**


*முனைவர் பட்ட ஆய்வாளர்* **ச.உஷா** *ஆங்கில இலக்கியத்தில் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றவர். இவர் தனது இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பை தஞ்சையில் உள்ள மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரியில் பயின்றார். பின்னர் திருச்சி*

*அரசு கலைக் கல்லூரியில் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றார். கடந்த ஒன்றரை ஆண்டுகளாக ஆங்கிலத்துறையில் உதவிப் பேராசிரியராக பணியாற்றிய இவர் தற்போது பேராசிரியர் பி.இரா.வீரமணி அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆங்கில இலக்கியத்தில் முனைவர் பட்ட ஆய்வை தஞ்சை பெரியார் மணியம்மை நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு வருகிறார். இவரது முனைவர் பட்ட ஆய்வு பிரிட்டிஷ் பெண்ணிய எழுத்தாளர் சாராமாஸ் அவர்களின் நாவல்களையும், அதன் உளவியல், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த சமூகப் பிரச்சனைகளையும் மையப்படுத்தியது.*

*இவர் 5 ஆங்கில ஆய்வுக்கட்டுரைகளையும் 3 தமிழ் ஆய்வுக்கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். இவரின் கவித்திறமைக்கு கவிதைக்களம் கவிப்பாவை குழுமத்தின் சார்பாக தங்கத்தாரகை விருது பெற்றார். தஞ்சையில் ஏடகம் மகளிர் முற்றம் சார்பில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் பங்கேற்றார். இவர் சுமார் 50 ஆராய்ச்சி மற்றும் கற்பித்தல் தொடர்பான ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொண்டுள்ளார். பெரியார் பன்னாட்டமைப்பு - அமெரிக்கா நடத்திய திராவிடப் பொழில் இதழின் ஆய்வரங்கில் ஆங்கிலத்தில் மதிப்புரை ஆற்றியுள்ளார்.*

**நா**ஸ்திகம் என்பது அறிவு வளர்ச்சியினாலும், ஆராய்ச்சித் திறத்தினாலும், சுதந்திர உணர்ச்சியாலும் ஏற்பட வேண்டிய விஷயமே ஒழிய; கடவுள் சொன்னார் என்று எழுதப்பட்ட புஸ்தகங்களில் என்ன சொல்லி இருக்கிறது என்றும்; தங்களை கடவுள் அவதாரமாகவோ, தூதர்களாகவோ, குமாரர்களாகவோ சொல்லிக் கொண்டவர்கள் என்ன சொன்னார்கள் என்றும், பெரியோர்கள், ரிஷிகள் நபிமார்கள், நாயன்மார்கள், தீர்க்கதரிசிகள், ஆழ்வார்கள், சித்தர்கள், ஞானிகள் ,மகாத்மாக்கள் என்று சொல்லப்பட்டவர்கள் என்ன சொன்னார்கள் என்றும், அவர்கள் சொன்னதாக ஏற்பாடு செய்து ஏடுகளிலும் புத்தகத்திலும் என்ன எழுதியிருக்கின்றது என்றும் கவனித்து அவைகளுக்கு எல்லாம் அடிமையாகி இருக்கும் அது விஷயத்தில் சுதந்திரமும், சுய அறிவும் இல்லாத மக்களுக்கு விளங்கக்கூடிய காரியம் அல்ல.

**பெரியார்,** குடிஅரசு தலையங்கம்,10.09.1933.

**மே**தினியெங்கும் மே தினவிழா கொண்டாடப்படுகிறது. எதன் பொருட்டு? பாட்டாளி மக்களின் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு, உரிமைக்காக, உழைப்பாளிகள், குருதி கொட்டிடுவர், என்ற உண்மையை ஊராள்வோருக்கும், உதவாக்கரைத் திட்டங்களால் மக்களை உன்மத்தர்களாக்கிடும் உலுத்தர்களுக்கும் உணர்த்துவிக்கும் உன்னதத் திருநாள், மே தினம். பாடுபட்டால், பலன் உண்டு, என்ற பாடத்தைப் பாரிலே, பஞ்சையும் பராரியும், பகல் பட்டினியும், உணரத் தொடங்கினால், உலகில் ஓடப்பர், எப்படி இருக்க முடியும்? கதிரோன் கிளம்பிய பிறகு, மூடுபனி நிற்குமா! மே தின விழா, மக்களின் மேன்மைக்குரிய, சுகவாழ்வுக்குரிய, இன்பத்துக்குத் தேவையான, வசதிகள் நிரம்பிய இவ் உலகிலே, இல்லாமை இருப்பது ஏன்? என்ற புரட்சிப் பொறிக் கேள்வியைத் தோழர்களின் உள்ளத்திலே உலவ வைக்கும் பெருநாள். இயற்கையின் கோபத்தை அடக்கி, இன்பம் வழியச் செய்யும் பாட்டாளிகளின் கண்களிலே நீர்வழியச்செய்து, முதலாளிக் கூட்டம், இலாபமெனும் கோட்டை கட்டிப், போகமெனும் உப்பரிகை அமைத்து, செருக்கெனும் சிங்காரியுடன் சரசமாடிக்கொண்டு, முன் வாயிற்படியிலே மதமெனும் கரியைக் கட்டிவைத்து, மற்ற வாயிற்படியிலே அரசியல் அதிகாரமெனும் சூலாயுதக்காரரை நிறுத்திவைத்து, வெளியே வேதாந்தி எனும் வேவுகாரரை ஏவி மக்கள் மனதில், மாய்கை, மறு உலகு, கர்மம், என்ற விதைகளைத்தூவி கோழைத்தனம் எனும் பாசக்கொடி படரச்செய்து, தமது குதூகல வாழ்க்கையை நடத்துகின்றனர், என்ற அறிவுரையை, உழைப்பவர் உணரச் செய்து உறுதி தரும் நாள், மே விழா.

**அறிஞர் அண்ணா**, மே தின முழக்கம் என்னும் கட்டுரையில்..9.5.1943.

# திருக்குறளும் திராவிட இயக்கக் கருத்தியலும்

எழுத்தாளர் **ந. முருகேசபாண்டியன்**



**கட்டுரைச் சுருக்கம்:**

*இன்று உலகமெங்கும் வாழ்கின்ற தமிழரின் அடையாளமாகக் கருதப்படுவது திருக்குறள். திருக்குறள் என்ற இலக்கியப்பிரதியின் பின்னர் பொதிந்திருக்கிற அரசியலையும் அதன் காரணமாகவே திராவிட இயக்கத்தினர் கடந்து நூறாண்டுகளுக்கும் மேலாக திருக்குறளைப் பரப்பும் பணியை மேற்கொண்டதையும் அதில் குறிப்பாகப் பெரியாரின் பங்களிப்பையும் இந்தக் கட்டுரை விவரிக்கிறது.திருக்குறளை ஒரு புனித நூலாகக் கருதாமல் வாழ்வியல் இலக்கியமாகக் கருதிய பெரியார் எப்படித் திருக்குறளின் சில கருத்துகளை கட்டுடைக்கிறார் என்பதையும் சுவைபட விளக்குகிறது.*

## முன்னுரை:

இன்று உலகமெங்கும் வாழ்கின்ற தமிழரின் அடையாளமாகக் கருதப்படுகிற திருக்குறள் நூல், திருவள்ளுவரால் எழுதப்பட்டு ஏறக்குறைய 1700 ஆண்டுகள் கடந்துவிட்டன. சங்க காலத்திற்குப் பிந்தைய நூலான திருக்குறள், பல்வேறு அரசியல், சமூகம், பொருளாதாரச் சூழல்களைக் கடந்த நிலையில் தமிழர் வாழ்க்கையில் முதன்மை இடம் வகிப்பது கவனத்திற்குரியது. சமய அடையாளம் வெளிப்படையாக இல்லாதத் திருக்குறள் சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்த நிலையில் தமிழ்நாட்டுச் சமூகச் சிந்தனையாளர்களிடம் காலந்தோறும் செல்வாக்குப் பெற்றுள்ளது. உலகமயமாக்கல் காலகட்டத்தில் பல்வேறு மாற்றங்களை எதிர்கொண்டிருக்கிற நவீனத் தமிழரின் வாழ்க்கைச் சூழலில் திருக்குறள் செம்மையான வாழ்க்கை வாழ்வதற்கு வாழ்ந்திட அடிப்படையாக விளங்குகிறது. திருவள்ளுவர், குறள்கள்மூலம் வலியுறுத்துகிற கருத்துகள், சராசரி மனிதனைச் செழுமைப்படுத்தும் ஆற்றல் மிக்கனவாகும். திருக்குறள், சமூகமாகக் கூடி வாழ்கின்ற மனிதர்களுக்கிடையில் தோன்றுகிற முரண்களைச் சீராக்கிடவும், நெறியான வாழ்க்கை வாழ்வதற்கான பின்புலத்தையும் முன்னிறுத்தியுள்ளது. திருவள்ளுவர் நீதி, சட்டம் என விதிகளைவிட, தனிமனித மனதில் ஏற்பட வேண்டிய மாற்றங்களை வலியுறுத்துகின்றார். திருக்குறள் என்ற இலக்கியப் பிரதியின் பின்னர் பொதிந்திருக்கிற அரசியல் காரணமாகவே திராவிட இயக்கத்தினர் கடந்த நூறாண்டுகளுக்கும் கூடுதலாகத் தமிழரின் மறையாகத் திருக்குறளை முன்வைத்துப் பேச்சுகளை உருவாக்கியுள்ளனர். அவை, திருக்குறளுக்குத் தனிச் சிறப்பினை அளிக்கின்றன.

இரண்டாயிரமாண்டுத் தொன்மையான தமிழ்க் கவிதை வரலாற்றில் தமிழ்க்

கவிஞர்கள் யாருக்கும் இல்லாத பெருமை, திருவள்ளுவருக்கு மட்டும் உண்டு. குமரிமுனையில் 133 அடி உயரத்தில் பிரமாண்டமான சிலையாகத் திருவள்ளுவர் நிற்பதற்குக் காரணம், திருக்குறள் என்ற அறநூலைப் படைத்ததுதான் முதன்மைக் காரணம். என்றாலும் பெரியார், கலைஞர் உள்ளிட்ட திராவிட இயக்கத்தினரின் தொடர்ச்சியான திருக்குறளை முன்வைத்திடும் செயல்பாடுகளின் பின்னர் காத்திரமான திராவிட இயக்க அரசியல் பொதிந்துள்ளது.

திருக்குறள் ஏதோ ஒருவகையில் தமிழர் வாழ்க்கையில் தொடர்ந்து செல்வாக்குப் பெற்றிருக்கிறது. பக்தி இயக்கக் காலகட்டத்தில் முக்கியத்துவம் இல்லாமலிருந்த திருக்குறள், இருபதாம் நூற்றாண்டில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதலாகக் கடவுளர்களின் கதைகளை உள்ளடக்கிய அதியற்புதப் புராணங்கள், சமயம் சார்ந்த பக்திப் படைப்புகளைப் போற்றிய தமிழரின் சமூக, அரசியல் வரலாற்றில், எந்தவொரு சமயமும் சார்ந்திடாமல் திருக்குறள் தனித்துப் பயணித்திருப்பது, சிறப்பானதாகும்.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அச்சு வடிவம் பெற்ற திருக்குறள், கருத்தியல் வளம் காரணமாகக் கல்வியறிவு பெற்றிருந்த தமிழர்களின் கவனத்தைக் கவர்ந்தது; ஜி.யு.போப். ஆல்பர்ட் சுவைட்சர் போன்ற ஐரோப்பியர்களிடமும் செல்வாக்குடன் விளங்கியது. குறிப்பிட்ட கடவுள் அடையாளம் வெளிப்படையாக இல்லாதத் திருக்குறள், சமூகச் சிந்தனையாளர்களிடம் காலந்தோறும் செல்வாக்குடன் விளங்குகின்றது. மநு தருமம், வைதிக சநாதன சமயத்தின் அற நூலாகக் கருதப்பட்ட சமூகச் சூழலில், அதற்கு எதிராகத் தமிழர்களின் அறநூலாகத் திருக்குறள் நூலை உயர்த்திப் பிடித்திடத் தமிழறிஞர்கள் முயன்றனர். வைதிக சநாதனத்தின் ஆதிக்கம் காரணமாக வருணாசிரம மேலாதிக்கம் நிலவிய தமிழ்நாட்டில் அதற்கு மாற்றாகத் திராவிட இயக்கத்தினர் திருக்குறளை முன்னிறுத்தி உருவாக்கிய சொல்லாடல்கள், அரசியல் பின்புலமுடையன. இன்னொருபுறம் தேவாரம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம், புராணங்கள் போன்ற படைப்புக்களை மட்டும் இலக்கியமாகக் கருதிய பண்டித மனநிலைக்கு எதிராகத் திராவிட இயக்கத்தினர் திருக்குறளை முன்னிறுத்திப் புதிய பேச்சுக்களை உருவாக்கினர், காலப்போக்கில் மத நம்பிக்கைக்கு எதிரான அரசியலில் திருக்குறளின் அறிவுப்பூர்வமான கருத்துகள், தமிழ்நாட்டில் முதன்மையிடம் பெற்றன. நாளடைவில் திருக்குறள் தமிழர் மறை அல்லது தமிழர் வேதம் எனப் போற்றப்பட்டது.

திராவிட இயக்கத்தைத் தோற்றுவித்த தந்தை பெரியார், தொடக்கத்தில் திருக்குறள், சிலப்பதிகாரம் உள்ளிட்ட பழந்தமிழ் இலக்கியப் படைப்புகளைக் கடுமையாக விமர்சித்தார். பின்னர் அவர் பா.வே.மாணிக்க நாயக்கரின் தொடர்பினால் திருக்குறள் நூலை தன்னுடைய சுயமரியாதைக் கருத்துகளுக்குச் சார்பாகக் கருதினார். காங்கிரசிலிருந்து விலகி, 1925ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்த பெரியார், திருக்குறளைப் பரப்பும் பணியைத் தொடங்கினார். திருக்குறள் மன்றங்கள் நடத்துகின்ற கூட்டங்களில் பங்கேற்றுத் திருக்குறள் பற்றிப் பேசிய பெரியார், குறள் மாநாடுகளையும் நடத்தினார்.

தந்தை பெரியார் நடத்திய திருக்குறள் மாநாடு – 'வள்ளுவர் குறள் மாநாடு (தமிழர் நெறி விளக்க மாநாடு)' என்னும் பெயரில், 15.01.1949, 16.01.1949 ஆகிய இரு நாள்கள் சென்னையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் தந்தை பெரியார் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள்:

"நம் பண்டைத் திராவிடர் மக்களிடையே இரண்டு பெரியார்களைக் குறிப்பிட வேண்டுமானால் ஆண்களில் திருவள்ளுவரையும் பெண்களில் அவ்வையாரையும் நாம் சிறந்த அறிவாளியாகக் குறிப்பிட முடியும்."

"ஆரியரல்லாத இந்நாட்டு மக்கள் அனைவர்க்கும், சிறப்பாக இந்நாட்டுப் பழங்குடிப் பெருமக்களின் திராவிடர்கள்

அனைவர்க்கும் வள்ளுவர் அருளிய திருக்குறள் ஒரு பெரிய செல்வமேயாகும். நமது பெருமைக்கும், நெறிக்கும், நாகரிகத்துக்கும், வாழ்க்கை முறைக்கும் எடுத்துக்காட்டாக அதில் பல விவரங்களை நாம் காணலாம். திருக்குறளின் பேரால் திராவிட மக்களின் பெருமையை, திராவிட அல்லாத மக்களுக்கும் உணரச் செய்ய முடிகிறது."

பெரியாரின் திருக்குறள் குறித்த சிந்தனை ஆரியம்-திராவிடம் என்ற எதிரிணைப் பார்வையில் இருந்து உருவாகியுள்ளது. மேலும் அவர் ஆரிய தர்மமாகிய மநுதர்மத்தை ஒழித்துக் கட்டுவதற்காகவே திருவள்ளுவர் திருக்குறளை எழுதியதாகக் கருதினார்.

"திருக்குறள் ஆரிய தர்மத்தை-மநுதர்மத்தை-அடியோடு கண்டிப்பதற்காகவே ஏற்பட்ட நூல் என்பதையும் நீங்கள் உணர வேண்டும். அதுவும் மக்களுக்கு வெறும் தர்மங்களை மட்டும் உபதேசிக்க எழுதப்பட்ட நூல் என்று என்னால் கொள்ள முடியவில்லை. மக்கள் நல்வாழ்க்கைக்குக் கேடாக வந்து சேர்ந்த ஆரிய அதர்மத்தை ஒழிப்பதை நோக்கமாகக்கொண்டு ஒரு மறுப்பு நூலாகவே திருக்குறள் எழுதப்பட்டதாகவே என்னால் கருத முடிகிறது. திருக்குறள் ஆரியக் கொள்கைகளை மறுக்க அவைகளை மடியச் செய்ய அக்கொள்கைகளில் இருந்து மக்களைத் திருப்ப எழுதப்பட்ட நூல் என்றுதான் நான் கருதுகிறேன்."

பெரியாருக்குத் திருக்குறள் மிகவும் இணக்கமான பிரதியானதற்குக் காரணம் திருவள்ளுவர் மதம் கடந்தவராகவும் எந்தவொரு கடவுளையும் போற்றாதவராகவும் வைதிக சநாதனத்திற்கு எதிரானவராகவும் விளங்குகிறார் என்பதுதான். வைதிக சநாதன நெறிக்கு மாற்றாகத் தமிழர்களின் அறவியல் சிந்தனையின் வெளிப்பாடாகத் திருக்குறளைப் பெரியார் முன்னிறுத்தியதில் நுண்ணரசியல் பொதிந்துள்ளது. திராவிட இயக்கத்தினர், வைதிக சநாதனப் பின்புலத்திலான மநு தருமம் உள்ளிட்ட நூல்களுக்கு மாற்றாகத் திருக்குறள் நூலை முன்வைத்தனர். அந்த நிலை இன்றளவும் தொடர்கின்றது.

1950களில் 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை' எனத் தொடங்கும் திருக்குறள், தமிழர்களின் திருமண அழைப்பிதழ்களில் அச்சடிக்கப்பட்டது தற்செயலானது அல்ல. தமிழரின் அன்றாட வாழ்க்கையில் திருக்குறள் இடம் பெறத்தொடங்கிய நிகழ்வு, இன்றளவும் வெவ்வேறு வழிகளில் தொடர்கிறது. தமிழில் இருந்து உலக மொழிகளில் அதிக எண்ணிக்கையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள திருக்குறள், இன்று உலகத் தமிழரின் அடையாளமாக மாறியுள்ளது. திருவள்ளுவர், குறள்கள்மூலம் வலியுறுத்துகிற கருத்துகள், சராசரி மனிதனைச் செழுமைப்படுத்தும் ஆற்றல் மிக்கனவாகும்.

திருவள்ளுவருக்கென்று சிறப்பு நாளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாட வேண்டும் என்பது பெரியாரின் விருப்பம். அதற்கானத் தீர்மானம் ஒன்றைத் தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் புலவர் கோவிந்தன் சட்டப் பேரவையில் கொண்டு வந்தார். அதனை முதலமைச்சராக இருந்த கலைஞர் மு.கருணாநிதி ஏற்றுக்கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் தைப்பொங்கலுக்கு மறுநாள் திருவள்ளுவர் நாளாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்து, பெரியாரின் விருப்பத்தை நிறைவேற்றினார். . பின்னர் முதலமைச்சரான எம்.ஜி.ஆர். அரசு அலுவலகங்களிலும் திருவள்ளுவர் நாளைக் கொண்டாட ஆணையிட்டார்.

தமிழறிஞர் மறைமலை அடிகள் தலைமை யிலான குழு வள்ளுவருக்கான காலத்தைக் கி.மு.31 என்று வரையறுத்து அறிவித்திருந்தது. அதனை ஏற்றுக்கொண்ட திமு.க. அரசு 1971 முதல் அரசு நாட்குறிப்புகளிலும் 1972 முதல் அரசிதழிலும், 1981 முதல் அரசு அலுவலகங்களிலும் திருவள்ளுவராண்டு பயன்படுத்திட ஆணையிட்டு நடைமுறைப் படுத்தியது.

இன்று காட்சியளிக்கிற திருவள்ளுவரின் உருவப் படம் கற்பனையானது. திருவள்ளுவருக்கு உருவம் கொடுக்கவேண்டும் என்று கவிஞர் பாரதிதாசன், அறிஞர் அண்ணா உள்ளிட்ட பலரின் விருப்பத்தை நிறைவேற்றிட அன்றைய முதலமைச்சர் காமராஜர் ஏற்றுக்கொண்டார். அவருடைய உத்தரவின்படி ஓவியர் வேணுகோபால் சர்மா வரைந்த திருவள்ளுவர் ஓவியம் அதிகாரபூர்வமான திருவள்ளுவர் ஓவியமாக 1959-ம் ஆண்டு அரசினால் அறிவிக்கப்பட்டது.

திருவள்ளுவருக்குச் சிலை வைக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தி.மு.க. வின் சார்பில் கலைஞர் மு. கருணாநிதி முன்வைத்தார். அதை ஏற்றுக்கொண்ட சென்னை மாநகராட்சி, திருவள்ளுவர் பிறந்த ஊராகக் கருதப்படும் மயிலாப்பூரில் திருவள்ளுவருக்குச் சிலை அமைத்தது. தி.மு.க ஆட்சிக்கு வந்த பின்னர் தமிழ்நாடு சட்டப்பேரவை ஒவ்வொரு நாள் தொடங்கும்போதும் ஒரு திருக்குறளை வாசித்துப் பேரவையைத் தொடங்கிவைக்கும் மரபை அப்போதையப் பேரவைத் தலைவர் சி.பா.ஆதித்தனார் தொடங்கிவைத்தார். அந்த மரபு இன்றும் தொடர்கிறது. இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது நடிகர் சிவாஜி கணேசன் அன்பளிப்பு கொடுத்த வள்ளுவர் சிலை சென்னையில் திறக்கப்பட்டது.

திருக்குறள் விளிம்புநிலையினருக்கும் சென்றுசேர வேண்டும் என்ற நோக்கத்தில் முதல்வர் அறிஞர் அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன் தமிழ்நாடு அரசுப் பேருந்துகளில் திருவள்ளுவர் படமும் திருக்குறளும் பொறிக்கப்பட்டன. இதனால் திருக்குறள் நூல் பரவலாகக் கவனம் பெற்றது. பின்னர் அரசினர் தங்கும் விடுதிகளிலும் திருக்குறள் பொறிக்கப்பட்டது. கலைஞரின் ஆட்சிக்காலத்தில் திருவள்ளுவருக்கும் திருக்குறளுக்கும் பெருமை சேர்க்கும் செயல்கள் தொடர்ந்து நடைபெற்றன. அவற்றில் சென்னையில் உருவாக்கப்பட்ட வள்ளுவர் கோட்டமும் கன்னியாகுமரியில் அமைக்கப்பட்ட வள்ளுவர் சிலையும் முக்கியமானவை.

1976ஆம் ஆண்டு கழக ஆட்சியின்போது முதல்வர் கலைஞரின் முயற்சியினால் சென்னை, நுங்கம்பாக்கத்தில் கட்டப்பட்ட திருவள்ளுவர் கோட்டம், திருவள்ளுவரின் புகழுக்குச் சான்றாக விளங்குகிறது. சென்னை, நுங்கம்பாக்கம் பகுதியில் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் முதலமைச்சர் மு. கருணாநிதியின் நேரடி மேற்பார்வையில் தோரண வாயில், அரங்க மண்டபம், கருங்கல் தேர், குறள் மணி மாடம், மாடித்தோட்டம், ஆராய்ச்சி நிலையம். தேர்க்கோபுரம், தேர்க்கலசம் ஆகியவற்றைக்கொண்ட வள்ளுவர் கோட்டம் உருவானது. நெருக்கடி நிலைக்கு முன்னர் கட்டிமுடிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டம், நாட்டில் நெருக்கடி நிலை அமலில் இருந்தபோது திறந்து வைக்கப்பட்டது. 1989ஆம் ஆண்டு கலைஞர் முதலமைச்சரானபோது பதவியேற்பு விழாவை வள்ளுவர் கோட்டத்தில் நடத்தினார்.

வள்ளுவர் கோட்டம் போல வள்ளுவருக்குக் குமரி முனையில் பிரம்மாண்டமான சிலை அமைக்க வேண்டும் என்ற விருப்பத்தை முதலமைச்சர் கருணாநிதி அதிகாரப்பூர்வமாக 1975 ஆம் ஆண்டு அறிவித்தார். கலைஞரின் சீரிய முயற்சியினால் கன்னியாகுமரிக் கடலின் நடுவில் 2000 ஆம் ஆண்டில் பெரிய பாறையில் நிறுவப்பட்டுள்ள திருவள்ளுவரின் சிலை, திராவிடக் கட்டடக் கலைக்குச் சான்றாக விளங்குகிறது; திருக்குறளின் பெருமையை உலகுக்கு அறிவிக்கின்றது.

ஜைன சமயச் சார்புடையவராகக் கருதப்படுகின்ற திருவள்ளுவர், மனிதர்கள் தங்களுக்குள் பின்பற்றவேண்டிய ஒழுங்குகளை அறங்களாக 1330 குறள்களில் பதிவாக்கியுள்ளார். அவருடைய சொந்த வாழ்க்கை பற்றிய செவிவழிக் கதைகள், அவரைக் கடவுள் நிலைக்கு உயர்த்துகின்றன. ஒப்பற்ற ஞானியாகவும், மாபெரும் தீர்க்கதரிசியாகவும், தெய்வப் புலவராகவும், அய்யனாகவும்

திருவள்ளுவரைப் போற்றித் துதிபாடுதலும் வணங்குதலும் பிரபலமடைந்து வருகின்றன. இறைவனுக்கு நிகராகத் திருவள்ளுவருக்குத் தரப்படும் போற்றுதல்கள், ஒருவகையில் திருக்குறளுக்குப் பிரச்சினையைத் தரக்கூடியன. திருக்குறளை 'வேத நூல்' என்று வழிபட்டுப் பூசைப் பொருளாக்குவது, மக்கள் அந்நூலை வாசிப்பதைத் தடுத்துவிடும். 'நடைமுறை இல்லாத தத்துவம் மலட்டுத்தனம்' என்ற நோக்கில் அணுகிடும்போது, திருக்குறள் முன்னிறுத்தும் அறக்கருத்துகளைச் சராசரி மனிதரால் பின்பற்ற முடியுமா? என்பதுதான் முக்கியமான கேள்வி.

தகவல் தொடர்பு, போக்குவரத்து, வேலை வாய்ப்புக் காரணமாக இன்று உலகமெங்கும் வாழ்கிற தமிழர்கள் எதிர்கொள்கிற பிரச்சினைகள் அளவற்றவை. தமிழ் அடையாளமும் கேள்விக்குள்ளாகிடும் நிலையில், தமிழால் இணைந்திட, திருக்குறள் முக்கியப் பங்காற்றுகிறது. திருக்குறள் நூலைப் புனிதப் பிரதியாக்கிடாமல் ஒவ்வொருவரும் அன்றாட வாழ்வில் பின்பற்ற வேண்டிய கருத்துகள் அடங்கிய வாழ்வியல் நூலாகக் கருத வேண்டும். திருக்குறளில் இடம் பெற்றுள்ள காமத்துப் பால், பூமியில் பெண்ணும் ஆணும் சேர்ந்து துய்த்திடும் பாலியலைக் கொண்டாட்டமாக்கியுள்ளது திருக்குறள் என்ற பிரதியானது, மறுவாசிப்பில் தோற்றுவிக்கும் புதிய வகைப்பட்ட சொல்லாடல்கள், நவீனத் தமிழர் வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

என்ற வள்ளுவரின் குரலில், வைதிக சமயம் புனைந்திட்ட பிறப்பு, பால் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுக்கு எதிரான கருத்து அழுத்தமாக வெளிப்பட்டுள்ளது. இந்துத்துவா வலியுறுத்துகின்ற மத அடிப்படைவாதத்திற்கு எதிரான கருத்து, நுட்பமாக வெளிப்பட்டுள்ளது. இன்னொருபுறம் இன்றளவும் சாதியத்தின் விளைவான தீண்டாமையின் அழுத்தம் காரணமாக நடைபெறுகிற ஆணவக் கொலைகள் குறித்தும், பெண்ணுடல் காரணமாக அத்துமீறப்படும் பாலியல் வன்முறைகள் குறித்தும் உருவாகியுள்ள பொதுப்புத்திக்கு எதிரான மனோபாவத்தை இளைய தலைமுறையினரிடம் உருவாக்கிடப் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற திருக்குறள் வரிகள், அடித்தளமாக விளங்குகின்றன.

கல்வி என்பது இரு பிறப்பாளராகக் கருதப்படுகின்ற பிறப்பினால் உயர் சாதியில் பிறந்த பார்ப்பனர்களுக்கு மட்டும்தான் உரித்தானது என்று மநு தருமம் நுட்பமாக வலியுறுத்துகின்றது. வருணத்தால் தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள் போன்றோரின் கல்வி குறித்து, மநுவிற்கு அக்கறை இல்லை. பார்ப்பனர் வருணத்தைச் சார்ந்த இளைஞர்களின் குருகுலக் கல்வி குறித்து மநு விரிவாக விளக்கியுள்ளார். கல்வியைப் பிறப்பு, பால் அடிப்படையில் அளித்திடுவதற்கு விதிகள் செய்த மநுவிற்கு முற்றிலும் எதிரான நிலையினைத் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். பால், பிறப்பின் அடிப்படையை மறுத்து எல்லோருக்கும் கல்வியை வழங்கிட விழைகின்றார் திருவள்ளுவர்,

மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு (குறள்:409)

கல்லாதார் உயர்சாதியில் பிறந்திருந்தாலும், கீழான சாதியில் பிறந்தவர் கற்றவர் எனில் அவருடன் ஒப்பிடுமளவு பெருமை இல்லாதவர் என்று வள்ளுவர் பிறப்பினால் உருவாக்கப்படும் உயர்ஜாதி- கீழ்ஜாதி பற்றிய புனைவைக் கல்வியை முன்வைத்துக் கேள்விக்குள்ளாக்கியுள்ளார். மனிதன் கல்வியினால் மட்டும் முழுமை அடைவான் என்ற நோக்கத்துடன் கல்வியின் சிறப்பினைக் குறிப்பிட்டுள்ள வள்ளுவர், சநாதன தருமத்திற்கு எதிரானவராக விளங்குகிறார். யார் சொன்னாலும் அவருடைய பேச்சில் உண்மையான பொருளைக் கண்டறிதல்தான் அறிவு என இலக்கணம் வகுக்கின்ற திருவள்ளுவர், பிறப்பு அடிப்படையிலான

பேதங்களை மறுக்கின்றார். தெய்வத்தால் ஆகாத செயல் என்றாலும், முயற்சியினால் அடைய முடியுமென்ற குறளின் கருத்து, மனிதமையத் தன்மையுடையது. கல்வி, கல்லாமை பற்றிய இரு அதிகாரங்களிலும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ள கருத்துகள், இன்றையச் சமூக வளர்ச்சிக்கு அடிப்படை யானவை.

சமூகமாக வாழும் மக்கள், தங்களுக்குள் ஒருங்கிணைந்து வாழ்வதற்காக வள்ளுவர் குறிப்பிடும் அறங்கள் குறிப்பிடத்தக்கன. அவ்வகையில் வள்ளுவரின் இன்னொரு முகம் எளிமையானது; சராசரி மனிதனாகக் காட்சியளிக்கின்றார். கல்வியின் சிறப்பைக் குறிப்பிடும்போது, அதன் தேவையை எதிர்மறையாக்குகின்றார். கல்லாதவனின் முகத்திலிருப்பவை கண்கள் அல்ல, புண்கள் எனத் திட்டுகிறவர், மேலும் கல்லாதவனை 'விலங்கு' எனப் பழிக்கின்றார். கற்றோர் முன்னால் கல்லாதவன் பேச முயலுவது, 'முலை வளராத இளம் சிறுமி காம வயப்பட்டதுபோல' எனக் கண்டிக்கிறார். 'பிறரிடம் அரிய விஷயங்களைக் கேட்டு ஆராய்ந்திடும் மனநிலை இல்லாதவன் செத்தாலும், வாழ்ந்தாலும் என்ன' என்று கோபத்துடன் கேள்வி கேட்கிறார். பல்லாண்டுகளாகக் கல்வி கற்பது உயர் ஜாதியினருக்கு மட்டும் உரித்தானது என்ற சநாதன தர்மம் நிலவிய தமிழகத்தில் வள்ளுவர் தனது எதிர்மறைக் கருத்துகள் மூலம் கெட்டி தட்டிப்போன சராசரி மனிதனின் பிரக்ஞையில் பாதிப்பை ஏற்படுத்திட முயன்ற செயல், இன்றைக்கும் பொருந்துகிறது.

அன்பில்லாதவர் உடம்பானது எலும்பின் மேல் தோல் போர்த்தப்பட்டது, 'கண்ணோட்டம் இல்லாத கண்கள் வெறும் புண்கள்; 'கண்ணோட்டமில்லாதவர் மரத்திற்கு ஒப்பாவர்' எனக் கண்டனங்களை வீசும் வள்ளுவர், 'மானம் இழந்தவர் மயிரணையர்' எனக் குறிப்பிடுவது தற்செயலானது அல்ல. மானம் என்பதற்குப் பொதுவாக வரையறை இல்லாத நிலையில், ஓர் அரசியல் கட்சியிலிருந்து சில மூத்தத் தலைவர்கள் பிரிந்தபோது, அக்கட்சியின் செயலாளர் அவர்களை 'உதிர்ந்த மயிர்கள்' என வருணித்தது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

திருக்குறள் முன்னிறுத்தும் சமூக அறங்களில் தேவையானவற்றை நவீன வாழ்க்கையில் பயன்படுத்தலாம். மரத்தின் நுனிக்கொம்பில் ஏறியவர், இன்னும் ஏற முயன்றால், அச்செயல் உயிரைப் பறித்துவிடும் என்ற எளிய உவமைமூலம் ஒரு கருத்தைப் பதிவாக்கிட முயலும் வள்ளுவரின் முயற்சியானது மக்களிடையே கவனம் பெற்றதில் வியப்பில்லை. தொடர்ந்து திருக்குறள் நூலை வாசிக்கிறவர்களுக்கு திடீரெனப் பிரச்சினையை எதிர்கொள்ளும்போது, அதிலிருந்து விடுபடும் மனத்தெளிவைத் திருக்குறள் ஏற்படுத்தக்கூடியது. திருக்குறளை வெறுமனே அறங்களைப் போதிக்கிற நூல் எனக் கருதாமல், வாழ்வியல் சிக்கல்களுக்கு வழிகாட்டி என வாசிக்க வேண்டியது அவசியம். திருக்குறள் கருத்துகளைச் சரியாக உள்வாங்கியவர், திடீரெனப் பிரச்சினையை எதிர்கொள்ளும்போது, அதிலிருந்து விடுபட திருக்குறளின் கருத்துகள் உதவுகின்றன. 'நீரின்றி அமையாது உலகு', கற்க கசடறக் கற்பவை', உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு', 'அடக்கம் அமரருள் உய்க்கும்', 'அகலாது அணுகாது தீக்காய்வார்ப்போல', 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' போன்ற குறள் வரிகள், குழம்பிய மனதில் தெளிவை ஏற்படுத்தக்கூடியன. இத்தகைய வரிகளினாலேயே திருக்குறள் தொடர்ந்து தமிழர் மனங்களில் ஆளுகை செலுத்துகிறது.

உழவுத் தொழில் சமூகத்திற்கு அடிப்படை யானது என்ற புரிதல் காரணமாகத்தான் வள்ளுவர், உழவு எனத் தனியாக அதிகாரம் இயற்றியுள்ளார். மக்கள் உயிர் வாழ்வதற்குத் தேவைப்படும் உணவை உற்பத்தி செய்கின்ற உழவு, உழவர்கள் பற்றிய குறளின் விவரணைகள், இன்றைக்கும் பொருந்தும்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் (குறள்: 1033)

குறள் வரிகள், வயலில் இறங்கிச் சேற்றிலும் சேற்று நீரிலும் உழைக்கின்ற மக்களின் சிறப்பினையும் சமூக மதிப்பீட்டினையும் பதிவாக்கியுள்ளது. வைதிக சநாதனம், வயலில் உழுது விளைவிப்பதைக் கேவலமாகக் கருதிய சூழலில் 'உழுவார் உலகத்திற்கு அச்சாணி' என்று அழுத்தமாகச் சொன்ன திருவள்ளுவர் ஒருவகையில் சநாதன எதிர்ப்புப் போராளி ஆவார்.

சமூக அமைப்பின் அடிப்படை அலகாக விளங்குகின்ற குடும்பம் பற்றிய வள்ளுவரின் கருத்துகளில் அறம் பொதிந்துள்ளது. காமத்துப் பால் மூலம் வள்ளுவர் சித்தரித்துள்ள ஆண்-பெண் பாலியல் உறவு, மனநிலை, அன்பு பற்றிய பேச்சுகள், மனித இருப்பினை மையமாக்கியுள்ளன. ஆணும் பெண்ணும் சேர்ந்து துய்த்திட்ட பாலியல் உறவின் விளைவான குழந்தை பற்றிய வள்ளுவரின் விவரிப்பு, அழகியல் சார்ந்தது.

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்

குழந்தையைக் கொஞ்சிடுகின்ற ஒவ்வொரு வரின் மனதிலும் துளிர்க்கின்ற கவிதை வரிகளை வள்ளுவர் அற்புதமான குறளாக்கியுள்ளார்.

திருக்குறள் என்ற அற நூல் எழுதப்பட்டு 1700 ஆண்டுகள் கடந்த சூழலில், இன்றையக் காலகட்டத்திற்குப் பொருத்தமான கருத்துகள் பொதிந்திருப்பது, பெருமைக்குரியது. அதேவேளையில் திருக்குறள் முன்வைக்கின்ற அனைத்துக் கருத்துகளும் சமகாலத்திற்கு ஏற்புடையனவா என்று கட்டுடைத்திட வேண்டியுள்ளது. திருக்குறள் என்ற பிரதி முன்வைக்கின்ற குரல்கள், இன்றையப் பயன்பாட்டிற்கு உரியனவா என்று கண்டறிந்திட வேண்டியது அவசியம். புலால் உண்ணுதல், கள்ளுண்ணுதல், பெண் பற்றிய திருவள்ளுவரின் மதிப்பீடுகளை விசாரணைக்குட்படுத்திட வேண்டியுள்ளது. அந்தவகையில் திருக்குறள் பற்றி மறுதலையாகத் திராவிட இயக்கத் தலைவரான பெரியார் முன்வைத்திட்ட கருத்துகள் கவனத்திற்குரியன.

காட்டுமிராண்டித் தமிழ் என்று தமிழிலக்கியப் படைப்புகளைக் கடுமையாக விமர்சித்தப் பெரியார், ”உங்கள் தமிழ் ஜாதியைக் கற்பிக்கும் தமிழ், உங்கள் தமிழ் ஆரியத்தைச் சுமக்கும் தமிழ்; உங்கள் தமிழ்க் கடவுளையே பாடும் தமிழ்; உங்கள் தமிழ் புராணக் குப்பைகள் நிறைந்த தமிழ்; மூடநம்பிக்கைகளைக் கொண்டாடும் தமிழ்” என்றார். வெறுமனே உணர்ச்சி வயப்படாமல் அறிவியல் அடிப்படையில் மொழியை அணுகிடும் பெரியார் திருக்குறளைப் போற்றினாலும் சமகால அரசியல், சமூக இயக்கக் கருத்துகளுடன் மாறுபடும் திருக்குறள் சிந்தனைகளை அழுத்தமாக விமர்சித்துள்ளார். அவர், திருவள்ளுவரை எல்லாம் அறிந்த தெய்வப் புலவராகக் கொண்டாடும் மூடத்தனங்களுக்கு இடம் கொடுக்கவில்லை. ”இன்றுள்ள மனிதத்தன்மைக்கு மேற்பட்ட தெய்வத்தன்மை என்பதாக ஒரு தன்மை மக்களுக்கு இருந்திருக்கிறதென்பதையே என்னால் ஒப்புக்கொள்ள முடியாததால் நான் திருக்குறள் ஆசிரியர்க்கு அத்தகைய தெய்வத்தன்மையைக் கொடுக்க முடியவில்லை”. மேலும் அவர் தனது பகுத்தறிவுப் பார்வையைப் பின்வருமாறு பதிவு செய்கிறார்:

”மாமிச உணவு உண்பதை வள்ளுவர் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறார். கொல்லாமையின் உயர்வு குறித்து வெகுவாக எழுதியுள்ளார். குறளிலேயே அப்படிச் சொல்லப்பட்டு உள்ளதே என்பதற்காக நான் மாமிச உணவு உட்கொள்ளாமல் இருக்க முடியுமா? நான் குறள்தான் ஆதாரம் என்று சொல்லவில்லை. குறளில் இருந்து மக்களுக்கு வேண்டியதை ஏற்றுக்கொள்ளுங்கள். தேவையில்லாததைத் தள்ளிவிடுங்கள் என்றுதான் சொல்கிறேன். குறளில் ஏதோ சில குறைகள் இருக்கலாம்; இருக்க முடியும். ஏனென்றால் அது 1950 மாடல் அல்ல. திருவள்ளுவர் திரிகாலம் உணர்ந்த ஞானியென்றோ நாம் கொள்ளவில்லை. 2000 வருடத்திற்கு முன்பு ஒருவர் எவ்வளவு அறிவாளியாக இருந்தாலும் எலக்ட்ரிக் லைட், ஒலிபெருக்கி, மோட்டார் முதலியவைகளைக்

கண்டிருப்பானா? மதவாதிகள் வேண்டுமானால், ‘எல்லாக் காலத்தையும் முக்காலத்தையும் உணர்ந்த மகான் இவர்’ என்று பலரை விளம்பரப்படுத்தலாம். ஆனால், அது பகுத்தறிவுக்கு ஒவ்வாது. திருவள்ளுவர் மகான் என்றோ அவதார புருஷன் என்றோ ஒத்துக்கொள்ள மாட்டேன். திருவள்ளுவர் நல்ல அறிவாளி, ஆராய்ச்சிக்காரர். மக்களிடம் பரவி இருந்த மூட எண்ணங்களோடு போராடிய அறிஞர் என்ற அளவில்தான் வள்ளுவரை ஏற்றுக்கொள்ள முடியும். 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வள்ளுவர் சொன்னவை எல்லாம் அப்படியே இன்றைக்கு ஏற்றதாக இருக்க முடியுமா? இன்றைய நிலைக்கு நான் பேசும் கொள்கை சரி; என் திட்டங்கள் சரி. எனக்குப் பிறகும் இன்னும் 100, 200, 1000 வருடங்களுக்குப் பிறகும் என் கொள்கைகள்-நான் வகுத்தத் திட்டங்கள் கொஞ்சம்கூட மாற்றப்படாமல் அப்படியே இருக்க வேண்டும் என்பது என்ன நியாயம்?” திருவள்ளுவரின் கருத்துகளை எப்படி அணுகிச் சமகாலத்திற்குப் பொருத்திட வேண்டுமென்ற பெரியார், தக்க வழி காட்டியுள்ளார். அந்த வழிகாட்டல் திருக்குறள் பிரதியைச் சமகாலத்தியதாக்குகிறது.

திருவள்ளுவர், ‘புலால் மறுத்தல்’ அதிகாரத்தில் குறிப்பிடும் அறக்கருத்துகள் ஆய்விற்குரியன. உணவு உண்ணுதல் என்பது சமூக வாழ்க்கையுடன் தொடர்புடையது. ஆண்டு முழுவதும் பனி உறைந்திருக்கும் துருவப் பகுதியில் வாழும் எஸ்கிமோவின் உணவில் மீன், இறைச்சி முதன்மையானவை. இயற்கைச் சூழலுடன் மனிதர்கள் தங்கள் முன்னோரிடமிருந்து உணவு பற்றிய அறிவைப் பெற்றுள்ளனர். தமிழ்நாட்டுக் கடற்கரையோரம் வாழ்கின்ற மீனவர்களின் தினசரி உணவில் மீன் அல்லது கருவாடு நிச்சயம் இடம்பெறும். கிறிஸ்துவ விவிலியம், உலகத்திலுள்ள பிற உயிரினங்களை மனிதனுக்காக இறைவன் படைத்தான் என்கிறது. இஸ்லாமியரின் குர்ஆன், ஹலால் ஓதிக் கொல்லப்பட்ட விலங்கின் உடலைச் சமைத்துச் சாப்பிடலாம் என்று குறிப்பிடுகின்றது. சங்ககாலத்திலிருந்து இன்றுவரை இறைச்சியை உணவாகக் கொள்ளும் பெரும்பான்மைத் தமிழர்கள் திருவள்ளுவரின் புலால் மறுத்தல் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மாடன், இசக்கி, பாண்டி, முனி, காளி போன்ற பல்வேறு துடியான கிராமத்துத் தெய்வங்களுக்கு விலங்குகளைப் பலி கொடுத்துத்தான் வழிபாடு நடைபெறுகிறது. நாட்டார் தெய்வங்களும் குலதெய்வங்களும் நிரம்பிய தமிழரின் நடைமுறை வாழ்க்கையில் உயிர்ப்பலி கூடாது போன்ற கருத்துகளுக்கு இடமில்லை. ஆனால் திருவள்ளுவர் உணவுக்காகப் பிற உயிரினங்களைக் கொல்லுகிறவர்களைப் ‘புலையர்’ என்றும், அவ்வாறு கொல்லும்போது ஏற்படும் வெட்டினைப் ‘புண் என்றும் இழிவுபடுத்துகின்றார்.

மது குடிக்கக்கூடாது என்பதனை அறமாக வலியுறுத்தும் வள்ளுவரின் குரலும் விமர்சனத்திற்குரியது. மது குடித்தலுக்குச் சங்க காலம் முதலாகத் தமிழர்கள் பழகியுள்ளனர். மேலும் தனி மனிதச் சுதந்திரத்தை வலியுறுத்தும் மேலைநாடுகளில் ‘மது கூடாது’ என்ற பேச்சுக்கே இடமில்லை. மது குடித்தலைக் குற்றமெனக் கற்பிக்கும் குறளின் அறக்கருத்து, நவீன வாழ்க்கையுடன் முரண்படுகிறது.

தமிழ்ப் பெண் குறளின் வழி நடந்தால், வாழ்வில் சிறக்கலாம்’ என்று தமிழறிஞர்கள் வாழ்த்திக் கொண்டிருக்கின்றனர். ஆனால் பெண்ணியவாதிகள் திருவள்ளுவரின் பெண் பற்றிய மதிப்பீடுகளைக் கடுமையாக விமர்சிக்கின்றனர். ‘பெண்வழிச் சேரல்’ அதிகாரம் முன்னிறுத்தும் கருத்துகள் ஆய்விற்குரியன. பெண்ணின் பேச்சைக் கேட்டு நடத்தல், பெண்ணின் வேண்டுதலை நிறைவேற்றுதல், பெண்ணுக்குப் பணிந்து நடத்தல் ஆகிய செயல்களைச் செய்யும் ஆண்களைத் திருவள்ளுவர் கடுமையாகக் கண்டனம் செய்கிறார். ’பெண்ணுடன் தனது கருத்துகளைப் பகிர்ந்துகொள்கிற ஆணினால் அறச்செயல்களைச் செய்ய வியலாது. அவனுடைய பிறவிக்கு

நன்மை செய்ய முடியாது; அவனுக்குச் செயல்திறன் இல்லாமல் போகும்.' பெண்ணின் அறிவுத்திறனையும் ஆற்றலையும் மறுக்கும் போக்கைத் திருக்குறளில் காணமுடிகிறது. திருவள்ளுவரின் குரலில் ஆண்மைய வாதம் அழுத்தமாகப் பொதிந்துள்ளது. 'பெண் சொல் கேளேல்' என்பதை அறமாக முன்வைக்கும் திருவள்ளுவரின் கருத்தியல், சமூகத்தில் பெண்ணின் இருப்பை மறுப்பதுடன் அவளுடைய மனத்தையும் புறக்கணிக்கிறது.

சமூக மாற்றத்தில் திருக்குறளின் கருத்துகள் விமர்சனத்திற்குள்ளாக்கப்படுவது இயல்புதான். திருக்குறளில் இன்றைய வாழ்க்கைமுறைக்கு முரண்பாடான கருத்துகள் உள்ளன என்ற புரிதலுடன் அணுகிட வேண்டியுள்ளது. எல்லாக் காலத்துக்கும் பொருந்தி வருகின்ற கருத்துகள் அடங்கிய நூல் என்று எதுவும் இருக்க வாய்ப்பில்லை. எனவே திருக்குறள் நூலில் எந்தக் கருத்துகள் சமகால வாழ்க்கையை மேம்படுத்திடப் பயன்படுகின்றன என்று கண்டறிந்து பின்பற்ற வேண்டியது அவசியம்.

அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை வலியுறுத்துகிற சில திருக்குறள்கள் சான்றாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அவை இடம், மொழி, இனம், சமயம், பால் கடந்த நிலையில் உலகமக்கள் எல்லோருக்கும் பொதுவானவை. இந்த அட்டவணை இன்னும் நீளும். திருக்குறள் நூலை வாசிக்கின்ற ஒவ்வொருவரும் தங்களுடைய மனநிலைக்கு ஏற்புடைய குறள்களைக் கண்டறிந்துத் தொகுத்திட வேண்டும். அந்தக் குறள்களைத் தேவையான நேரத்தில் வாசிக்கும்போது, மனதில் தெளிவும் உறுதியும் பெருகும்.

யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியரா தலும் வேறு

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பைத் தரும்

உறங்கு வதுபோலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

திருக்குறள் வலியுறுத்துகிற வாழ்வியல் நெறிகள், ஒவ்வொரு காலகட்டத்திலும் தமிழரை நெறிப்படுத்த முயன்றுள்ளன; தமிழர் வாழ்க்கைக்குத் தத்துவப் பின்புலத்தை ஏற்படுத்தியுள்ளன. தமிழர்களுக்கும் திருக்குறளுக்குமான உறவு, என்றும் பிரிக்கவியலாத தன்மையுடையது. திராவிட இயக்கத்தினரால் கடந்த நூறாண்டுகளுக்கும் கூடுதலாக முன்னிலைப்படுத்தப்படும் திருக்குறள் பிரதியானது, சமகாலத் தமிழர் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்குகிறது. வெறுமனே அறம் அல்லது நீதி என்று திருக்குறளைக் கடந்திடாமல், வாசிப்பில் ஏற்படுகின்ற அனுபவங்கள் முக்கியமானவை. திருக்குறள், சமூகமாகக் கூடி வாழ்கின்ற மனிதர்களுக்கிடையில் தோன்றுகிற முரண்களைச் சீராக்கிடவும், செம்மையான வாழ்க்கை வாழ்வதற்கான பின்புலத்தையும் முன்னிறுத்தியுள்ளது. திருவள்ளுவர் நீதி, சட்டம்

என விதிகளைவிட, தனிமனித மனதில் ஏற்பட வேண்டிய மாற்றங்களை வலியுறுத்துகின்றார். பண்டைக் காலத் தமிழர் சமூக வாழ்க்கையில், இவைதான் மனிதன் வாழவேண்டிய நெறிமுறைகள் என்று கண்டறிந்து, ஆழமாகச் சிந்தித்து, திருவள்ளுவர் எழுதியுள்ள குறள் வரிகள், பல நூற்றாண்டுகள் கடந்த பின்னர் இன்றைய காலகட்டத்திற்கும் ஏற்புடையதாக இருக்கின்றன. அதுதான் திருக்குறள் பிரதியின் ஆகப் பெரிய பலம்.

**சான்றாதாரம்**


ஆனைமுத்து.வே, ஈ.வே.ரா.சிந்தனைகள், திருச்சி: சிந்தனையாளர் கழகம் வெளியீடு, 1974.

திருக்குறளும் பெரியாரும் (தொ). சென்னை: பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, 1983.


**சுயவிவரக் குறிப்பு:**


**ந.முருகேசபாண்டியன்** (1957) *மதுரை மாநகரில் பிறந்த ந.முருகேசபாண்டியன் இளமைக் காலத்தில் சமயநல்லூர் கிராமத்தில் வசித்தார். பள்ளிச் சிறுவனாக இருந்தபோது புத்தகம் வாசிப்பதில் இவருக்கு ஏற்பட்ட ஆர்வம், பதின்பருவத்தில் தீவிர இலக்கியம் சார்ந்து மாறியது. தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டமும் நூலகம் தகவல்அறிவியல் துறையில் முனைவர் பட்டமும் பெற்றுக் கல்லூரி நூலகராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள இவர் கடந்த முப்பதாண்டுகளுக்கும் கூடுதலாக இலக்கிய விமர்சனத்தளத்தில் தீவிரமாக இயங்கி வருகிறார். இவர் திறனாய்வாளர், கவிஞர், புனைவெழுத்தாளர், நாடகாசிரியர், மொழிபெயர்ப்பாளர், அரசியல் விமர்சகர், சமூகப் பண்பாட்டாய்வாளர் எனப் பல்வேறு பரிமாணங்கள் மிக்கவர். சமகாலத் தமிழர்களின் சமூகம், அரசியல், பண்பாட்டுப் பிரச்சினைகளை விவாதிக்கும் கட்டுரைகளைச் சமூக அக்கறையுடன் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கின்றார்.*

உலக மேதைகளில் திருவள்ளுவரே எவரெஸ்ட். அவருடைய திருக்குறள் கருத்துகள் சாதி, மத, இன, மொழி எல்லை கடந்தவை. எங்கும், எதிலும் சமத்துவந்தான் திருக்குறளின் உயிர்மூச்சு. அப்பெரும்நூல், அரும்பெருந்துறவு மேற்கொண்ட இத்தாலிய நாட்டு வீரமாமுனிவரையே ஈர்த்தது. எம்மனோரை ஈர்த்ததும், ஈர்ப்பதும் வியப்புகள் அல்ல. இத்துணை அரும்பெரும் பொற்கருவூலம் தமிழர்க்குத் திருவள்ளுவரால் இரண்டாயிரத்து முப்பத்து எட்டு ஆண்டுகளுக்கு முன்பே வாரி வழங்கப் பெற்றும், அதனைத் தமது வாழ்க்கை நடைமுறையாக்கிக் கொள்ளாத தமிழர் நிலையே வியப்பிற்குரியது; அவலம். அந்நிலை போக்கப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் பெறுகின்றன. அவற்றுள் திருக்குறள் பரவுதலும், பரப்புதலும் தலைமையானவை.

**முனைவர் க.ப.அறவாணன்,**
**முன்னாள் துணைவேந்தர். அவர்கள்**
**தனது திருக்குறள் சிறப்புரை நூலில்..**

# தந்தை பெரியாரின் மூடநம்பிக்கை ஒழிப்பில் பகுத்தறிவுச் சிந்தனை ஓர் ஆய்வு



**சு.ஆறுமுகம்**
ஆசிரியர்(ஓய்வு)

**கட்டுரைச் சுருக்கம்:**

*இந்தக் கட்டுரை, எளிய மக்கள் எப்படி அறியாமையால் மூட நம்பிக்கைக்கு ஆட்படுகிறார்கள் என்பதை விளக்குகிறது.அறியாமையின் குழந்தையான மூட நம்பிக்கை எப்படிச் சமூகத்தில் பண்டைய காலம் முதல் இன்றுவரை வளர்க்கப்படுகிறது என்பதை வரலாற்றின் அடிப்படையில் விவரிக்கிறது.மூட நம்பிக்கை எப்போதும் திறந்த மனதிற்கும் அறிவியலுக்கும் எதிரி என்பதையும் தந்தை பெரியாரின் கருத்துகள் அடிப்படையில் அதை எதிர்த்து போராடுவதைப் பற்றியும் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.*

**முன்னுரை:**

இருண்டு கிடந்த தமிழ் மக்களிடத்தில் எண்ணற்ற நம்பிக்கைகளும், மூடப்பழக்க வழக்கங்களும் வாழ்வில் அதிகம் காணப்பட்டது. இவற்றை போக்குவதற்காகவும் மக்களிடையே விழிப்புணர்வு ஊட்டுவதற்கும் அறிவுச் சிந்தனையை கையிலெடுத்து களமாடியவர்தான் தந்தை பெரியார். தனிப்பட்ட ஒன்றைப் பற்றிய கருத்தே நம்பிக்கை. ஆதாரங்கள் தர இயலாத நம்பிக்கையே மூடநம்பிக்கை. மூடநம்பிக்கைகள் ஆதாரம் இல்லாத கருத்தை பில்லி, பேய், சூனியம் என்ற போர்வையில் கொண்டது. இவற்றிலிருந்து மக்களை எவ்வாறு காப்பது என்ற வினாவிற்கு விடை காணும் நோக்கில் இக்கட்டுரை ஆராயப்படுகின்றது.

**மூடநம்பிக்கை ஓர் விளக்கம்:**

மூடநம்பிக்கை என்பது ஒரு கருத்தை, தெளிவும் விளக்கமும் இல்லாமல் ஏற்றுக் கொள்வதும் நம்புவதுமாகும். முன்னோர்கள் செய்து வருகின்றார்கள் தொன்றுதொட்டு கடைப்பிடித்து வருகின்றார்கள் என்பதற்காக காரண காரியங்களை ஆராயாமல் அறிவியல் அணுகுமுறையின்றி அணுகுவது மூடநம்பிக்கை.

தனிப்பட்ட ஒன்றைப் பற்றிய கருத்தே நம்பிக்கை. ஆதாரங்கள் தர இயலாத நம்பிக்கையே மூடநம்பிக்கை ஆகும்.

- சான்று கிடைத்தாலும் கிடைக்கா விட்டாலும் ஒன்றை நம்புவது.
- ஒரு அதிசயத்திற்கு மற்றொரு அதிசயத்தைக் காரணங்காட்டுவது.
- உலகம் அதிர்ஷ்டத்தால் ஆளப்படு வதாக நம்புவது.
- காரணத்திற்கும் காரியத்திற்கும் உள்ள தொடர்பை அலட்சியப்படுத்துவது.
- எண்ணத்தை நோக்கிக் குறிக்கோளை இயற்கைக்கு அப்பாற்பட்டதாக வைப்பது.

* பொருளை விட்டுவிட்டு ஆற்றலை மட்டும் நம்புவது அல்லது ஆற்றலை விட்டுவிட்டுப் பொருளை மட்டும் நம்புவது.
* அதிசய செயல்கள், மந்திரங்கள், சோதிடங்கள், குறிகள் ஆகியவற்றை நம்புவது.[1]

**மூடநம்பிக்கை குறித்து தந்தை பெரியாரின் கருத்து:**

மனிதன் தனக்குள் இருக்கும் மூடநம்பிக்கையால் தன் அறிவின் மூலம் அடைய வேண்டிய வளர்ச்சியை அடையாமல் இருக்கின்றான் என்றும் நாட்டின் முன்னேற்றத்திற்கு மக்களின் ஒழுக்கமே முக்கியமானது ஆனால் நமது நாட்டில் மதமும் மூடநம்பிக்கையும் ஒழுக்கத்திற்கு நிரந்தர விரோதியாயிருக்கிறது என்றும் இந்த நாட்டில் மூடநம்பிக்கையின் தொடக்கமே சோதிடம்தான். ஒவ்வொரு குழந்தையும் பிறக்கும் போது நேரத்தைக் குறித்து சோதிடம் எழுதும்போதே அந்தக் குழந்தையின் வாழ்வில் மூடநம்பிக்கை தொடங்கிவிடுகிறது. எனவே மூடநம்பிக்கை ஒழிப்பு என்பதை முதலில் சோதிட ஒழிப்பிலிருந்து தொடங்க வேண்டும் என்றும் தந்தை பெரியார் கூறுகின்றார்.

**அறியாமையின் குழந்தை மூடநம்பிக்கை:**

மூடநம்பிக்கைக்கு உண்மையான அடிப்படை அறியாமையாகும். அறியாமை என்ற அஸ்திவாரமற்ற அமைப்பின் மீது மூடநம்பிக்கை என்ற கட்டடம் எழுப்பப்படுகிறது. மூடநம்பிக்கை என்பது அறியாமையின் குழந்தையாகும் மேலும் துன்பத்தின் தாயாகும்.

**பழங்காலத் தமிழக வரலாற்றில் மூடநம்பிக்கைகள்:**

பேய் பிசாசு, ஆவிகள், ஜோதிடம், கைரேகை, குறிசொல்லுதல், மறுபிறப்பு, மந்திரம், மாந்திரீகம் போன்றவைகள் தமிழகத்தில் குறிப்பாக கிராமப்புறங்களில் புரையோடிக் காணப்பட்டன. வயிற்றுப்போக்கு (காலரா), குழந்தைப்பேறு, ஜுரம், பாம்புக்கடி போன்றவைகள் உரிய நேரத்தில் மருத்துவரிடம் கொண்டு செல்லாமல் பெண் கடவுள் சிலை முன்பு பூசாரி வேப்பிலை அடித்து குணப்படுத்துவதாகக் கூறி மாண்டு போனவர்கள் எண்ணற்றோர். அந்த வகையில் சுகாதாரமற்ற வாழ்க்கை முறை கிராமபுறங்களில் கல்வியறிவு முற்றிலும் இல்லாத நிலையில் கொள்ளைநோய், காலரா போன்ற நோய்களுக்கு மருத்துவர்கள் தடுப்பூசி போட வந்தபோது அதை போட்டுக் கொள்ளாமல் ஓடி ஒளிந்த நிலையும் அன்றைய மக்களிடம் இருந்தது. இதற்குக் காரணமாக கருதப்பட்டவை கிராமபுற மக்களிடம் கல்வி முழுமையாக இல்லை எனலாம்.

ஒரு ஆண் பல பெண்களை மணந்து கொள்ளும் நிலை நடைமுறையில் இருந்துள்ளது இதனால் பெண்கள் ஆளுமைத் திறன், பொருளாதார சுதந்திரம் அற்றவர்களாக இருந்தனர். ஒரு பெண் கணவனைச் சார்ந்தும் கணவன் இறந்த பின்னால் மகன் மற்றும் கணவன் வழி உறவினர்களான ஆண்களைச் சார்ந்தே வாழவேண்டிய நிலை இருந்தது. பெண்கள் பூப்படைந்தால் பருவ வயது அடைதல், மூடநம்பிக்கையின் பெயரால் அவர்கள் மனநலம் பாதிப்பு அடையும் வகையில் அவர்களைத் தனிமைப்படுத்தி அவர்களது உடல்நலத்திற்குக் கேடு விளைவித்தனர்.

கணவனை இழந்த பெண்களை பழங்கால மக்கள் புறந்தள்ளி சமூக நிகழ்வுகளில் ஒதுக்கி வைத்திருந்தனர். குறிப்பாக திருமணம், சுமங்கலி, பெண்களுக்கான வளைகாப்பு பிள்ளைப்பேறு போன்ற

நிகழ்வுகளில் விலக்கி வைத்தனர். விதவைப்பெண்கள் தனது மகன், மகள் திருமண நிகழ்வுகள், இல்ல விழா, ஆலய விழாக்கள், ஆலய வழிபாடு, பூமி விழா போன்ற எண்ணற்ற நிகழ்வுகளில் பெண்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். அவர்களது அனுபவங்கள் இளைய தலைமுறையினருக்கு மூடநம்பிக்கை யின் காரணமாக அளிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டது. இங்கு விதவைப் பெண் உண்டு, விதவை ஆண் உண்டா? எனப் பெரியார் கேள்விகளைத் தொடுத்தார். மன்னர்கள் ஜோதிடர்களை தம் அருகிலேயே வைத்திருந்தனர். ஜோதிடர்களின் ஆலோசனையின் படியே அரசாட்சி நடைபெற்றது. அரண்மனையில் பதவியேற்கும் நேரம், அரண்மனை விழாக்கள் குழந்தைப்பேறு ஜோதிடர்களால் கணிக்கப்பட்டது.

**இடைக்காலத்தில் தமிழக வரலாற்றில் மூடநம்பிக்கைகள்:**

தமிழக கிராமங்களில் மாடுகள் கன்று ஈன்றால், கன்று ஈன்ற பிறகு அது வெளிப்படுத்துகின்ற நஞ்சுக்கொடியினை, பால் சுரக்கும் தன்மையுள்ள ஆலம், இலுப்பை மரங்களில் வைக்கோல் பிரிக்குள் வைத்து கட்டித் தொங்க விடுகின்றனர். பால் சுரக்கும் அந்த மரங்களைப் போல தங்களது கன்றை ஈன்ற மாடும் பால் சுரக்கும் என்ற மூடநம்பிக்கையே அது. மரங்களில் கட்டப்பட்ட நஞ்சுக்கொடிகளை பறவைகள் கொத்தி துர்நாற்றத்தை ஏற்படுத்துகின்றன. இதனால் காற்று மாசுப்பட்டு சுவாசக்கோளாறு மற்றும் ஒவ்வாமை ஏற்படுகின்றது.2

சாமி ஆடுதல், குறிசொல்லுதல், மனிதனிடம் பீடித்திருக்கும் பூதம், பேய், பிசாசு ஆகியவைகளை மனிதனை கொண்டே அடித்தல், மந்திரித்தல், பில்லி, சூனியம் செய்து மக்களுக்குத் துன்பம், சாவு முதலியவைகளை உண்டாக்குதல். குட்டிச்சாத்தான், கருப்பு முதலியவைகளைக் கொண்டு சித்து விளையாடுதல், வசியம் செய்து மக்களை பலவீனப்படுத்தி, முன்ஜென்மம், பின்ஜென்மம் உண்டு என நம்பவைத்து தங்கள் வாழ்க்கையில் ஜோதிடம் என்ற ஒன்றைத் திணித்து பணத்தையும் நேரத்தையும் மக்கள் செலவு செய்து வருகிறார்கள்.2

“மூடநம்பிக்கைகள் சமுதாயத்தின் முடைநாற்றம்” எனத் தமிழகத்தில் மூடநம்பிக்கைக்கு எதிராகத் தந்தை பெரியார் போராடினார். பெண்களுக்கு நல்ல அறிவையும் பழக்க வழக்கங் களையும் அளிக்க வேண்டும். அவர்களின் மூடநம்பிக்கையை அகற்றவேண்டும் என்றும் பகுத்தறிவுக்கு மாறானதும் மூடநம்பிக்கையை வளர்ப்பதுமான எந்தச் செய்தியும் கல்வியில் பாடமாகக் கற்பிக்கக் கூடாது என்றும் கூறுகின்றார். அறியாமையின் தொடர்சங்கிலி மூடநம்பிக்கைகள் மனிதனுக்கு பொருள் விரயத்தையும் கால விரயத்தையும் ஏற்படுத்தி அறிவியல் மனப்பாங்கை அழித்து சமூக வளர்ச்சிப்பாதையை தடுக்கின்றது.

**“பேதமை யகற்று”**

**பொருள் :** அறியாமையை நீக்கிவிடு.

“மனந்தடு மாறேல்”

மனக்குழப்பம் அடையாதே.

– ஆத்திச்சூடி, ஔவையார் பாடல் 83

மேலும் மூடநம்பிக்கைகள் குறித்து

**“நாளும் கிழமையும் நலிந்தோர்க்கில்லை”**

– வெற்றிவேற்கை, ஆசிரியர்:
அதிவீரராம பாண்டியன்.

நாம் செய்யும் பிரச்சாரத்தை மக்கள் ஏற்க வேண்டுமென்றால் முதலில் மக்கள் மனதில் முள்செடியாக படர்ந்துள்ள மூடநம்பிக்கைகளை ஒழிக்க வேண்டுமென எண்ணிய பெரியார், மதுரை திருமண நிகழ்வு ஒன்றில் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடு ஒன்று நடத்த வேண்டுமென தனது தொண்டர்களிடம் கூறினார். உடனே தொண்டர்கள் மாநாட்டிற்கான

நன்கொடையை அப்பொழுதே அளிக்கின்றனர். நன்கொடை வசூல் செய்த வேகத்தில் அப்படியே திருப்பி அளிக்க சொல்கின்றார். அதற்கான காரணத்தையும் சொல்கின்றார். நீங்கள் அளித்த நன்கொடை ரூ.101, ரூ.201 இப்படியாக உள்ளது. ஏன் ரூ.100, ரூ.200 ஆக கொடுக்கலாம் அல்லவா? ஒற்றைப் படை எண்ணை மனதளவில் ராசி எண்ணாக கருதுவதே மூடநம்பிக்கைதான் எனக் கூறுகின்றார். 1969இல் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டினை காரைக்குடியில் நடத்தினார். பெரியார் சிறந்த கொள்கையாளராக வாழ்ந்தார் என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

**பகுத்தறிவுப் பாடல்கள்:**

பழங்கால மக்கள் அறியாமையால் அவதிப்பட்ட காலத்தில் திரை இசைப் பாடல்களில்கூட கவிஞர்கள் பாடல்கள் மூலம் மூடநம்பிக்கைக்கு எதிராக பகுத்தறிவுப் பாடல்களை இயற்றி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். சான்றாக,

**குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும்**
**குருட்டு உலகமடா** – என்ற பாடலில் இருக்கும்.

**அறிவை மடமை மூடிய இருட்டு உலகமடா**
(படம்: மகாதேவி) என்றும்

**தாயித்தோ.... தாயித்து – பலர்**
**சந்தேகம் தீர்ந்து விட**
– என்றும் (படம்: மகாதேவி)

**வேப்பமர உச்சியிலே பேயொன்று ஆடுதுன்னு**
**விளையாட போகும் உன்னிடம் சொல்லி**
**வைப்பாங்க – உன்**
**வீரத்தை கொழுந்திலேயே கிள்ளி வைப்பாங்க**
**வேலையற்ற வீணர்களின் மூளையற்ற**
**வார்த்தைகளை**
**வேடிக்கையாகக்கூட நம்பிவிடாதே.**
(படம்: அரசிளங்குமரி)

**குட்டுகளைச் சொல்லணுமா**
**கூடையிலே அள்ளணுமா?** – என்ற பாடலில்,

**இங்கே – தலைவலியும் நோயும் வந்தா**
**சாமிகளை சுத்துவீங்க**
**இன்னும் – ஜாதகத்தை பார்த்துப்புட்டு**
**ஆடு கோழி வெட்டுவீங்க**
**பலவித வைத்தியமும்**
**படித்திருக்கும் டாக்டரிடம் உடல்நிலையைச்**
**சொல்லமாட்டீங்க**
**மூச்சு நின்னுபோனா ... கத்துவீங்க – அந்த**
**குட்டுகளை சொல்லணுமா?**
**கூடையிலே அள்ளணுமா?**
(படம்: கல்யாணிக்கு கல்யாணம்)

என்று **மக்கள் கவிஞர்** பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள்மூலம் மூடநம்பிக்கை குறித்த கருத்துக்களை விளக்கியுள்ளார்.

**மனிதனின் ஆயுள் வளர**

மூடநம்பிக்கை என்பது தெளிவும் விளக்கமும் இல்லாமல் ஒரு கருத்தை ஏற்றுக்கொள்வதும் நம்புவதுமாகும். மூடநம்பிக்கை என்பது மனிதச் சமுதாய வாழ்வுக்கு இன்றியமையாததாக ஆகிவிட்டது. ஏனெனில் சமுதாய அமைப்பு என்பது இயற்கைக்கு மாறுபட்ட தன்மையில் அமைக்கப்பெற்றிருப்பதாகும்.3

தனது புத்திக்கும், அனுபவத்திற்கும் தோன்றுவதை நம்பாமல் எவனோ ஒருவன் எப்போதோ சொன்னதை நம்பி வாழ்வை நடத்துபவன் பெரிய மூடன்.

மனிதனின் ஆயுள் குறைவிற்குக் காரணம் அவனது மூடநம்பிக்கையே ஆகும். மனிதன் கடவுள் பெயரால், தலைவிதியின் பெயரால் வைத்திருந்த மூடநம்பிக்கை குறைந்து வைத்தியரையும், டாக்டரையும் நாடுவதால் மனிதனின் ஆயுள் வளர ஆரம்பித்துவிட்டது. கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்கிற எவரும் தங்களுக்கு நோய் வந்தால் கடவுளை நம்பி சும்மா இருந்து விடுவதில்லை. சிறுநோய் ஏற்பட்டாலும் டாக்டரை தேடிச் செல்கின்றனர்.

**இடைக்காலத்தில் தோன்றிய மூடநம்பிக்கை நிகழ்வுகள்**

மூடநம்பிக்கை மக்களிடம் மலிந்து காணப்பட்டாலும் இடைக்காலத்தில் அதிகமாக வளர்ந்தது என்பதை பின்வரும் நிகழ்வின் மூலம் அறியலாம்.

1. கைரேகை பார்த்தல்
2. சோதிடம் பார்த்தல், அதை நம்புதல்
3. பிறந்த நேரம் கொண்டு சாதகப் பொருத்தம் பார்த்தல்.
4. சகுணம் பார்த்தல் அதற்குப் பலன் கணித்தல்.
5. நல்லநேரம், நல்ல நாள், நல்ல கிழமை, நல்ல மாதம் என்பவைகளைப் பார்த்தல்.
6. பறவை (பட்சி) வைத்து சாத்திரம் பார்த்தல்.
7. ராகு காலம், குளிகை காலம், எமகண்டம் முதலியன பார்த்தல்.
8. நல்ல நட்சத்திரம், கெட்ட நட்சத்திரம், நல்ல லக்கனம், கெட்ட லக்கனம் பார்த்தல்.
9. பல்லி கத்துவது குறித்து பலன் பார்த்தல்.
10. பூனை குறுக்கே போவதற்குப் பலன் பார்த்தல்.
11. ஒற்றைப் பார்ப்பான் எதிரில் வருதல்;.
12. விதவைப் பெண்கள் எதிரே வருதல்.
13. தழைகளைக் (வேப்பிலை) கொண்டு நோயை குணப்படுத்துதல் (அ) பேய் விரட்டுதல்.
14. வாக்கு கேட்டல் (பூசாரியிடம்)
15. பேய் ஆடுதல்
16. பேய் ஓட்டுதல்.
17. வலது கால், இடது கால், வலது கை, இடது கை உயர்வு தாழ்வு பார்த்தல்.
18. கண் திருஷ்டிப் படுதல், திருஷ்டி கழித்தல்.
19. சாமி ஆடுதல்.
20. மந்திரம் செபித்தல்.
21. எண்களில் நல்ல எண்கள் கெட்ட எண்கள் என கருதுதல் (3,13,8,18 இவை கெட்ட எண்கள் எனக் கருதுதல்).
22. தூங்கி எழுந்தவுடன் பார்க்கத்தகுந்த வாஸ்துகள் (கடவுள் படங்கள்) இவ்வகையில் இடைக்காலத்தில் மூடநம்பிக்கை நிகழ்வுகள் தொடர்ச்சியாக இருந்துள்ளது.

**மூடநம்பிக்கை (Supersition):**

இயற்கைக்கு மேற்பட்ட சக்திகள் பற்றிய புரிதலின்மை குருட்டு நம்பிக்கை. பகுத்தறிவுக்கு வேலை கொடாது, கண்ணை மூடிக்கொண்டு மிகுந்த அச்சத்தோடு பல்வேறு இயற்கை நிகழ்வுகளை எண்ணி கலங்கி வாழும் நம்பிக்கை யற்றவர்களாக மனிதர்கள் இருந்தனர்.

சடங்குகள், சம்பிரதாயங்கள், ஏன்? எதற்கென்று சிந்திக்காமல் பயத்தினால் அதிசயங்களாகப் பார்த்து அவைகளைக் கெட்டியாக வழிவழியாகப் பிடித்துக்கொண்டு அதிலிருந்து மாற மறுக்கும் பிடிவாதம் காரண காரிய விளக்கத்திற்கோ ஆய்வுக்கோ இடம் தராத ஒரு கண்மூடி வழக்கம் - இதுதான் மூடநம்பிக்கை.

இந்த குருட்டு மூடநம்பிக்கைக்கும் மதங்களுக்கும், கடவுள்களுக்கும் மிக நெருங்கிய உறவு எளிதில் பிரிக்கப்பட முடியாத உறவு உண்டு. அறிவியலின் உரசலால்தான் வெகு காலத்திற்குப் பிறகு இந்த மூடநம்பிக்கைகள் கெல்லி எறியப்படுதல் மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக நடைபெற்றது.

**மூடநம்பிக்கைகள் நிலைப்பதற்கு அடிப்படை:**

1. பயம்
2. குருட்டு நம்பிக்கை
3. பகுத்தறிவுப்படி ஆராயாமை
4. பகுத்தறிவுக்கு நேர்மாறான முரண்பட்ட மனப்போக்கு; (Attitude)

இதற்கு நேர்மாறானதும் மனிதகுலம் முன்னேற வெளிச்சம் தர உதவிடுவது உந்துவது அறிவியல் ; (Science) ஆகும்.

**அறிவியல் என்பது:**

1. முறைப்படுத்தப்பட்ட ஆதாரங்களையும், சான்றுகளையும் அனுபவப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட அறிவும் அனுபவமும்
2. காரண காரிய விளக்கத்தின் வெளிப்பாடு.
3. முடிந்த முடிவு என்ற இறுதி இல்லை.
4. மாற்றங்களை எப்போதும் வரவேற்றக் காத்திருக்கும் திறந்த மனப்பான்மை

**மூடநம்பிக்கை திறந்த மனப்போக்கிற்கு எப்போதும் எதிரி:**

1. அறிவியலின் முக்கிய அம்சமே திறந்த மனப்பான்மை.
2. வெறும் நம்பிக்கை, பழக்கம் பிறகு வழக்கம் என்ற அடிப்படையிலேயே நம்பி விடாமற் பிடித்தொழுகுதல். அறிவியலோ, நேற்றைய

கண்டுபிடிப்பு இறுதியானதல்ல. இதோ இன்றைய ஆய்வு அதை மாற்றி மேலும் புதியதோர் வெளிச்சத்தைப் பாய்ச்சுவதாக உள்ள ஒன்று!

**மூடநம்பிக்கை - அறியாமை பெற்றெடுத்தக் குழந்தை!**

அறிவியலோ - அக்குழந்தையை அந்த அறியாமை நோயிலிருந்து விடுதலை செய்து புத்தறிவு புகட்டி புதுமையை ஊட்டி புத்தாக்கத்தினைத் தரும் ஒன்று.

மூடநம்பிக்கை - இருள்

அறிவியல் - வெளிச்சம்.6

**தற்காலத்தில் மூடநம்பிக்கைகள்:**

தற்போது பேருந்துகள், சரக்கு வாகனங்களின் முகப்புப் பகுதியில் வேப்பிலைக்கொத்து கட்டப்படுகின்றது. ரேடியேட்டர், பிரேக் ஆயில், கிளச், இன்ஜின் ஆயில் டயர் செக்கப் போன்றவை சரிவர கவனிக்காமல் வேப்பிலையைக் கட்டினால் வாகனங்கள் பாதுகாப்பாக நீண்ட தொலைவு செல்லுமா? வியாபாரம் செய்கின்றவர்கள் தங்களின் கடை வாசலில் அல்லது புதிதாக வீடு கட்டி புதுமனைப் புகுவிழா நடத்துகின்றவர்கள், வாகனங்கள் செல்லுகின்ற சாலையில் பூசணிக்காய்களை உடைப்பது வாகன விபத்தினை ஏற்படுத்துகின்றன. புதுவீடு கட்டப்படுகின்ற போது திருஷ்டி பொம்மை மாட்டப்படுகின்றது இது மூடநம்பிக்கை சார்ந்த செயலாகும்.

அட்சய திருதியை அன்று ஒரு குறிப்பிட்ட நாளினைக் கூறி அந்த நாளில் நகை வாங்கினால் வாங்குபவரது இல்லத்தில் செல்வம் கொழிக்கும் என்று கூறுவது மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி கொண்டு வேப்பிலை மரங்களில் மஞ்சள் பாவாடையைக் கட்டி அம்மன் எழுந்தருளுவதாகக் கூறி கிராமங்களில் கழுதைக்கும், கழுதைக்கும் திருமணம் செய்து வைக்கப்படுவது மற்றும் அய்யோ கொடும்பாவி, ஆகாத சக்களத்தி, சட்டியிலே மாவு கரைத்து, சந்தியிலே கோலமிட்டு, கோலம் கரையிலையே, கோடி மழை பெய்யலையே என ஒப்பாரி வைத்து கிராமங்களில் தெரு முழுவதும் கொடும்பாவி கட்டி இழுத்து செல்லுதல் மணற்பாங்கான நிலப்பகுதியிலுள்ள மரங்கள் சில நேரங்களில் அதன் வேர்கள் அதிகமான நீரை உறிஞ்சும் மரத்தின் தண்டுப் பகுதியான சைலம், புளோயம் குழாய்கள் வழியாக செல்கின்ற நீர் சுவை மாறி உவர்ப்புத் தன்மையுடன் நிண நீராகக் காணப்படும். மேற்கண்ட குழாய்கள் சிதைவடைகின்ற போது பால் போன்ற நுரையுடன் உவர்ப்புத் தன்மையுடன் வெளியேறும். இதனை மரத்தில் பால் வடிகின்றது, தெய்வச்செயல் எனக் கூறுவது, நேர்த்திக் கடனாகத் தலையில் தேங்காய் உடைப்பது, பார்ப்பனர்கள் சாப்பிட்ட எச்சில் இலையில் பிற ஜாதியினர் படுத்து உருளுதல் (மடேஸ்நானா), அதிர்ஷ்டக் கற்கள் விற்பனை, ஆலமரத்திற்கும் அரசமரத்திற்கும் திருமணம் செய்வது, பெரியவர்கள், இளைஞர்கள் கைகள், கழுத்து மற்றும் கால்களில் கயிறுகளை கட்டிக்கொள்ளுதல், கோவில் கும்பாபிஷேக நிகழ்வில் யாகம் வளர்க்கின்ற போது அதில் புதிய பட்டுப்புடவையை கொளுத்துதல் இவ்வாறாக எண்ணற்ற மூடநம்பிக்கை நிகழ்வுகள் தற்போது நடக்கின்றன. இவை மட்டுமல்லாமல் தமிழகத்தில் பிள்ளையார் பால் குடிக்கின்றார் என்ற மூடநம்பிக்கை உச்சக்கட்டம் அடைந்தபோது பகுத்தறிவுத் தோழர்களால் பொய்யானது என்று நிரூபனத்துடன் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், பகுத்தறிவுச் சிந்தனையால் இறந்தவர்களுக்கு எந்தவித மதச்சடங்குகளும் செய்யாமல் பெண்களே பாடையைச் சுமந்து சுடுகாடு (மயானம்) வரை வந்து புதைக்கும் அல்லது எரிக்கும் பழக்கம் தற்போது நிகழ்கின்றது. தாலி அணியாமல் சடங்குகள் அற்ற சுயமரியாதைத் திருமணம், புதுமனைப் புகுவிழாவில் மூடநம்பிக்கைகள் நிறைந்த சடங்குகளைத் தவிர்த்து பகுத்தறிவு மேலாதிக்கம் பெற்றுள்ளதை அறியலாம்.

**ஆடி, மார்கழி மாதங்கள்**

நமது மக்களில் பலர் திருமணங்களை தமிழ் மாதங்களான ஆடி, மார்கழியில் வைப்பதில்லை. காரணம் ஆடி மாதம் பீடை மாதம் என்று சொல்லப்படுகின்றது. வீடுகளில் வாடகைக்கு குடியேறுபவர்கள் ஆடி மாதம் என்றால் நடுங்கிப் போவார்கள். “ஆடிப் பட்டம் தேடி விதை” என்பதுதானே பழமொழி.

"மாதங்களில் அவள் மார்கழி" என்று கவிஞர் கண்ணதாசன் எழுதியுள்ளார். "மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில்" என்று திருப்பாவை பாடப்படுகின்றன. பிறகு எப்படி மார்கழி மாதம் பீடை மாதமாகும்.

**முடிவுரை :**

சமூக அமைப்பில் எண்ணற்ற மூடப்பழக்கங்கள் முற்காலத்தில் முன்னோர்கள் சொன்னார்கள் பின்பற்றி வந்தார்கள். அதை இக்காலத்தில் செய்யவில்லை என்றால் நாம் பெரும் துயரினைச் சந்திக்க நேரிடும் என்ற அச்சத்தின் காரணமாக மூடப்பழக்கவழக்கங்களை மேற்கொள்கின்றனர்.

மூடநம்பிக்கை ஒழிப்பு ஒன்றே, மனித நேயத்தை வளர்க்கும். நம்மை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லும். அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் சுயமரியாதை இயக்கம், இந்த மகத்தான பணியைச் செய்து வருகின்றது.

**துணை நூல்கள்:**


1. ஆசிரியர்: நாவலர் இரா.நெடுஞ்செழியன் - நான்காம் பதிப்பு ஏப்ரல் 2012 - மதமும் மூடநம்பிக்கையும் வெளிவந்த பதிப்புவரிசை: ஏப்ரல் 2012.

   திராவிடர் கழக வெளியீடு - பெரியார் திடல், 84-1 (50) ஈ.வே.கி. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை-7. பக்கம்: 31, 32.

2. ஆசிரியர்: தந்தை பெரியார் - முதற்பதிப்பு 1987 - சோதிட ஆராய்ச்சி - சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு - பெரியார் திடல். 84/1 (50) ஈ.வெ.கி. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை - 7. பக்கம்: 1.

3. மா.நன்னன் - பெரியாரைக் கேளுங்கள் - மூடநம்பிக்கை - முதற்பதிப்பு சூலை. 2008 - ஏகம் பதிப்பகம் - சென்னை. பக்கம்: 23.

4. ஆசிரியர் கி.வீரமணி - உண்மை மாத இதழ் - ஜனவரி 16-31, பக்கம் 16-17 (மூடநம்பிக்கையிலிருந்து விடுதலை வெளிச்சம்)

   தொகுப்பாசிரியர்: மி.இ. பாலகிருஷ்ணன் - முதற்பதிப்பு மே 1965 - மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள் - வெளிவந்த பதிப்பு வரிசை - பத்தொன்பதாம் பதிப்பு - செப்டம்பர் 2017.

   நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். பி, சிட்கோ இன்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 98. பக்கம்: 51, 246, 293.

6. தீக்கதிர் அ.குமரேசன் - முதற்பதிப்பு: டிசம்பர் 2018 - நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும் - கருஞ்சட்டைப் பதிப்பகம்.

   122-130 என்.டி.ஆர் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை-24. 044-42047162

7. கி.வீரமணி - முதற்பதிப்பு 1998 - மூடநம்பிக்கைகள் - பதிப்பு வரிசை 1, ஏழாம் பதிப்பு 2012, திராவிடர் கழக வெளியீடு, சென்னை - 7, பக்கம் : 9.

8. ஆசிரியர் தே.ப.சின்னசாமி, முதற்பதிப்பு ஆகஸ்ட் 2001, அவ்வையாரின் நீதிநூல்கள், பதிப்பு வரிசை மூன்றாம் பதிப்பு அக்டோபர் 2005, நாச்சியார் பதிப்பகம், 31-6, கங்கை அம்மன் கோவில்தெரு, சென்னை - 24, பக்.16.


**ஆசிரியர் குறிப்பு :**


*நாகப்பட்டினம் மாவட்டம்,திருக்குவளை வட்டம்,மணக்குடி கிராமத்தில் சுந்தரம்-பார்வதி தம்பதியனருக்கு மூத்த மகனாப் பிறந்தவர் சு.ஆறுமுகம் அவர்கள். நன்னிலம் அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி, 2022-ல் பணி நிறைவு பெற்றவர். இவரது கட்டுரைகள்,கவிதைகள் விடுதலை நாளிதழ்,புதிய ஆசிரியர்(மாத இதழ்) உள்ளிட்ட பல்வேறு இதழ்களில் வெளிவந்துள்ளன.*

தமிழ்ப் பண்டிதர்களே,

வணக்கம்.

இன்று பெரியார் அவர்கள் தொடுத்துள்ளது புராண இதிகாசப் போரைக் கண்டு தமிழ்க்கலை அழியலாமா? தமிழிலக்கியம், மறையலாமா? என்றெல்லாம் கூப்பாடு போடுகின்றீர்கள். தமிழ்க் கலையை தமிழிலக்கியத்தை இழந்துவிட, தமிழர் நலத்திற் கருத்திழந்தாரேயன்றி, மற்றையோர் எப்படி ஒப்ப முடியும்? பெரியார் கூட்டத்தார், தமிழர் நலத்தில் கருத்திழந்தவர் என்று யாராவது சொல்ல முடியுமா? தமிழர் முன்னேற்றத்திற்கென அல்லும் பகலும் ஓயாது உழைக்கும் ஒரு கூட்டத்தினர், தமிழ்க்கலைகளை ஒழிக்க முனைகின்றனர் என்றால், அது வியப்பாகவன்றோ இருக்கிறது! தமிழ்க்கலைகளை ஒழிக்க எங்களுக்கென்ன பயித்தியமா? தமிழர் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளவைகளைத் தமிழ்க்கலை என்பது எவ்வாறு பொருந்தும்? என்று அவர்கள் கேட்கின்றார்கள். ஆம் உண்மையே. தமிழர்க்குத் தமிழ்க் கலை என்பது சந்தேகமறத் தெரியாவிட்டால், அவற்றைக் காக்கவோ, அவசியம் நேரின் அவற்றிற்கென உயிர் கொடுக்கவோ எப்படி முடியும்?.

**அறிஞர் அண்ணா,** தமிழ்ப் பண்டிதர்கட்கு என்னும் கட்டுரையில்..8.8.1943.

# *Book Review*

## The Cambridge Companion to Periyar

Edited by A. R. Venkatachalapathy and Karthick Ram Manoharan



Dr. B.R. Veeramani, Professor
Department of Languages
PMIST (Deemed to be University)
Vallam – 613503, Thanjavur.



**Abstract :**

*The Cambridge Companion to Periyar, edited by A.R. Venkatachalapathy and Karthick Ram Manoharan, marks a significant milestone in the scholarly recognition of E. V. Ramasamy "Periyar" as a major intellectual figure of global importance. This review examines how the volume situates Periyar's ideas within wider debates on social justice, political philosophy, feminism, secularism, and postcolonial thought. By bringing together interdisciplinary contributions, the Companion highlights the enduring relevance of Periyar's critique of caste hierarchy, Brahminical dominance, patriarchy, and religious orthodoxy. The review argues that the inclusion of Periyar in the Cambridge Companion series represents an important step in expanding the global intellectual canon beyond Eurocentric frameworks. It further evaluates the editors' success in presenting Periyar not only as a regional social reformer but also as a thinker whose ideas engage with universal questions of equality, rationalism, and human emancipation. Serving both as an accessible introduction for students and a valuable resource for scholars, the volume offers fresh perspectives on Periyar's intellectual legacy and its contemporary significance.*

## Introduction

The Cambridge Companion to Periyar, edited by A. R. Venkatachalapathy and Karthick Ram Manoharan, represents a landmark in the global recognition of E. V. Ramasamy "Periyar" (1879–1973). Periyar, the radical social reformer and founder of the Self-Respect Movement, remains one of the most influential figures in modern Indian intellectual history. His critique of caste hierarchy, Brahminical orthodoxy, patriarchy, and religious dogma shaped the Dravidian movement and continues to resonate in contemporary debates on social justice, secularism, and feminism.

The decision of Cambridge University Press to include Periyar in its prestigious Companion series signals his entry into the canon of global intellectual figures, placing him alongside thinkers such as Marx, Foucault, and Fanon.

This volume is not merely a collection of essays but a scholarly intervention that

seeks to situate Periyar within broader discourses of political philosophy, postcolonial studies, and feminist theory. The editors, both distinguished scholars of South Asian intellectual history, have curated contributions that reflect the interdisciplinary richness of Periyar's thought. The Companion thus serves both as an introduction for students and as a critical resource for advanced researchers.

## Structure and Content

The Companion is organized into thematic sections that collectively map the intellectual terrain of Periyar's life and legacy. The editors provide a lucid introduction that frames Periyar as a radical rationalist whose ideas challenged not only the structures of caste and religion but also the epistemological foundations of Indian nationalism.

The then dominant Cambridge school, led by David Washbrook and Christopher Baker , characterised the Dravidian Movement not as a genuine ideological or social revolution , but as a product of elite   this reading was endorsed by rationalists both from congress and the Indian Left. (The Hindu, Sunday Magazine P 3)

E. V. Ramasamy "Periyar" remains one of the most uncompromising voices in modern Indian intellectual and political history. His radical critique of caste, religion, patriarchy, and economic inequality continues to reverberate across South Asia and beyond. This Companion brings together leading scholars to examine his life, thought, and legacy in a comprehensive manner. Organized into five thematic parts, the volume offers a multidimensional portrait of Periyar as a social reformer, political strategist, cultural critic, and global thinker.

Most Anglo- American scholarship on the subject relied on anti- colonial narratives produced by nationalists. Both bodies of writing were conspicuously silent on larger questions , such as self-respect and the quest for dignity , and validated the entrenched , vertical social hierarchy that refused to imagine a horizontal social impact.  (Sunday Magazine, March 1 2026)

## Structure and Scope

The book's architecture is both deliberate and effective.

**Part I, "Events That Made Periyar,"** situates him within formative struggles such as the Vaikom Satyagraha and the Poona Pact, highlighting his solidarity with Ambedkar and his uncompromising stance against Brahminical dominance.

One of the first things that Dravida Munnetra Kazhagam (DMK)  leader M.K. Stalin did on assuming office as Chief Minister of Tamil Nadu in 2021 was to declare Periyar's birth anniversary (17 September) as 'Social Justice Day' – underscoring his reputation as a

crusader for social justice. (P 1)

**Part II, "The Politics of Periyar,"** explores his ideological strategies and organizational challenges. Essays on non-Brahmin cosmopolitanism, Tamil solidarity, and the split with C. N. Annadurai reveal the dynamism and tensions within the Dravidian movement, underscoring Periyar's ability to combine radical critique with pragmatic politics.

He had an unusual relationship with electoral politics, where he wanted to stay away from it but appreciated its role in cementing and furthering ideas of self-respect and social justice in the public sphere. (Geetha, 2019) "p 82

**Part III, "Religion, Caste, and Identity,"** highlights his philosophical interventions. His advocacy of rationalism, critique of Aryan hegemony, and transnational resonance—particularly in places such as Singapore—demonstrate how his ideas transcended local contexts and connected with global currents of decolonization and liberation.

> Periyar's views on religion were rooted in his personal experience of growing up in a religious household. Born into a rich merchant family, he was exposed to religion at a very early age. Sanyasis, Bhagavatas, Puranics, and scholars of religion thronged his home. (p 114)

**Part IV, "Women and Culture,"** is particularly significant. Essays on Periyar's engagement with the "women's question" and his relationship with Maniammai foreground his feminist commitments. Contributions on literature, art, and cinema expand the scope of his influence, showing how his rationalist critique permeated cultural production and reshaped Tamil cultural identity.

> Periyar saw the Aryan and non-Aryan conflict as stretching over two millennia. The Aryans came from outside and imposed the caste system on the native Tamils or Dravidians and thus rules over them. (P 136)

**Part V, "Labour and Dignity,"** explores Periyar's understanding of economic power within caste society and his insistence on dignity as a radical cultural psychology. These essays remind us that Periyar's critique was holistic, targeting not only religion and caste but also the economic structures that sustained inequality.

## Strengths of the Volume

The greatest strength of The Cambridge Companion to Periyar lies in its plurality of voices and themes. By including essays on politics, religion, culture, and labour, the editors ensure that Periyar is presented as a thinker whose interventions were wide-ranging and interconnected. The inclusion of feminist and cultural perspectives in Part IV, and economic analyses in Part V, enriches the narrative and prevents the reduction of Periyar to a single dimension.

Another strength is the balance between historical detail and theoretical reflection. While some essays are firmly rooted in archival and historical analysis, others engage with contemporary theoretical frameworks such as cosmopolitanism, cultural psychology, and decolonization. This dual approach makes the volume relevant both to historians and to scholars of political theory, cultural studies, and gender studies.

### 1. Interdisciplinary Reach

The essays collectively demonstrate the breadth of Periyar's intellectual interventions. By drawing on history, philosophy, and cultural studies, the volume avoids reducing Periyar to a regional political leader and instead presents him as a thinker of global relevance.

### 2. Accessibility for International Readers

One of the challenges in Periyar studies has been the linguistic barrier, as much of his writing is in Tamil. The Companion succeeds in making his thought accessible to non-Tamil audiences through translations, contextual explanations, and comparative frameworks.

### 3. Critical Engagement with Feminism

The essays on gender are particularly noteworthy. They highlight Periyar's radical critique of patriarchy, his advocacy for women's education, and his rejection of oppressive institutions such as arranged marriage and dowry. These contributions situate Periyar within global feminist discourse.

### 4. Editorial Vision

Venkatachalapathy and Manoharan's editorial framing is both rigorous and imaginative. They resist hagiography and instead encourage critical engagement with Periyar's contradictions and limitations, making the Companion a scholarly rather than celebratory volume.

## Scholarly Contributions

The Companion makes several significant contributions:

**1. Canonization of Periyar**

By including Periyar in the Cambridge Companion series, the editors and contributors effectively position him as a global intellectual figure, moving Periyar studies beyond regional confines.

**2. Pedagogical Utility**

The volume is well suited for classroom use. Its accessible essays, bibliographic resources, and thematic organization make it valuable for courses in South Asian studies, postcolonial theory, and feminist philosophy.

**3. Advancing Feminist and Subaltern Studies**

The Companion situates Periyar within feminist and subaltern frameworks,

expanding the scope of these fields. His critique of caste and patriarchy anticipates contemporary intersectional approaches.

### 4. Global Relevance

By drawing parallels between Periyar and other radical thinkers, the volume demonstrates his relevance to global struggles against oppression and situates him within broader debates on justice and equality.

## Historiographical Context

The limitations of earlier interpretations—particularly those associated with the Cambridge School, which often reduced the Dravidian movement to elite politics—were challenged by M. S. S. Pandian in his pioneering essay, *"Beyond Colonial Crumbs: Cambridge School, Identity Politics and Dravidian Movement(s)" (1995).*

Over the last three decades, the historiography of Tamil Nadu has undergone a significant shift, with rhetoric giving way to evidence-based analysis. *The Cambridge Companion to Periyar* is part of this broader academic course correction. The editors are to be commended for presenting a rich repository of contemporary Tamil history while making it accessible to a wider, non-Tamil readership.

The opening essay, "Introducing an Iconoclast," is particularly noteworthy. Rather than offering a simple biographical sketch, it traces Periyar's political and social journey across multiple strands, highlighting both convergence and divergence with other ideological traditions. The concise treatment of key concepts such as *suyamariyadhai* (self-respect) and *samadharmam* (equality) signals that the Companion is intended as a reader rather than an encyclopaedia.

## Limitations

Despite its many strengths, the volume has certain limitations. The density of the academic style may restrict accessibility for general readers, as several essays assume prior knowledge of Tamil politics and the Dravidian movement.

Additionally, while the book covers a wide range of themes, certain areas—such as Periyar's influence on contemporary feminist movements and his reception in present-day Dalit activism—could have been explored further. A concluding synthesis tying together the five parts would also have strengthened the overall coherence of the volume.

## Conclusion

Despite these limitations, The Cambridge Companion to Periyar is a landmark contribution to Periyar studies. It not only documents the historical trajectory of his activism but also situates his thought within broader intellectual

and cultural currents. For scholars, it offers a rich resource; for activists, it serves as a reminder of the radical possibilities Periyar envisioned—a society free from caste, patriarchy, superstition, and economic exploitation.

By extending the discussion to women, culture, and labour, the editors ensure that Periyar's legacy is understood in its full breadth. His critique was never partial but holistic, targeting every axis of hierarchy and domination. This volume succeeds in presenting that vision, establishing Periyar not merely as a figure of the past but as a thinker whose ideas remain vital for imagining egalitarian futures.

ஹிந்தி ஆரிய தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது ஆரிய தர்மம் வர்ணாஸ்ரம தர்மத்தை, சாதி வேறுபாடுகளை, சாதி உயர்வு தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்டது .தமிழர் கலாச்சாரமோ இதற்கு முற்றிலும் மாறுபாடானது.

அப்படியிருக்க ஜாதி வேற்றுமைகளையே அடிப்படையாகக் கொண்ட ஹிந்தி மொழியைத் தமிழ்நாட்டில் புகுத்துவதுவென்றால் இங்கு கொஞ்சம் கொஞ்சமாக ஏற்பட்டு வரும் ஒற்றுமை மனப்பான்மையைக் கெடுக்க ஆரியர்களால் செய்யப்படும் சூழ்ச்சி இது என்றுதானே கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் இந்தி வேண்டாம் என்றால் சமஸ்கிருதம் படியுங்கள் என்று கூறுவதன் கருத்து இதுதானே! இரண்டும் மக்களுக்குள் வேற்றுமை உணர்ச்சியை வளர்க்கும் மொழிகள் என்பதுதான் இதற்குக் காரணம். தமிழர்களிடையே தோன்றியுள்ள புத்துணர்ச்சியை, பகுத்தறிவு உணர்ச்சியைக் கெடுக்க, நாசமாக்க தம்மாலியன்ற எல்லா வகையாலும் தொல்லை கொடுக்க முற்பட்டு விட்டனர் என்பதன் அறிகுறி தான் இது.

**(17.1.1948ல் சென்னையில் நடைபெற்ற மாகாண இந்தி எதிர்ப்பு மாநாட்டுக்குத் தலைமை வகித்து மறைமலை அடிகளார் ஆற்றிய உரையில் ஒரு பகுதி- தமிழுக்கு என்ன செய்தார் பெரியார்? நூலில் பக்கம் 28)**

# திராவிடப்பொழில் இதழ் – இணைய வழி ஆய்வரங்கக் கூட்டம்:

பெரியார் பன்னாட்டமைப்பு,அமெரிக்கா சார்பாகத் திராவிடப்பொழில்(ஏப்ரல்–ஜூன் 2025) இதழின் இணைய வழி ஆய்வரங்கம், கடந்த மே 17,2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 (தமிழ் நாட்டு நேரம்) மணிக்கு நடைபெற்றது. நிகழ்வினை மருத்துவர் சோம.இளங்கோவன் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றினார். அவர் தனது உரையில்,

“அருமைத் தமிழ் நெஞ்சங்களே, உலகெங்கும் வாழும் திராவிடப் பற்றாளர்களே, உங்கள் அனைவருக்கும் அன்பான வணக்கம். இன்று திராவிடப் பொழில் என்ற அரசியல் சார்பற்ற ,திராவிடப் பண்பாட்டை, கோட்பாடுகளை விளக்கும் ஆராய்ச்சிப் பதிப்பாக மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும் ஏடாக நான்காண்டுகளாக நடத்தி வருகின்றார்கள் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தினர். இது அரசியல் சார்பற்றது. திராவிடச் சித்தாந்தத்தை, பண்பாட்டு அடிப்படையை விளக்கும் ஆராய்ச்சி மதிப்பீடுகள், இதில் பலர் பலவிதமான கட்டுரைகளை எழுதி இருக்கிறார்கள். நாங்கள் ஒவ்வொரு இதழில் இருந்தும் இரண்டு கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து அதை ஆராய்ந்து எழுதியவர்கள், அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லுமாறு வேண்டிக் கொண்டு இந்த நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம். இதன் தேவை என்னவென்றால் இன்று திராவிடம் என்றால் என்னவென்று புரியாதவர்கள் பலர் இருக்கிறார்கள். திராவிடக் கோட்பாடுகளை அறியாதவர்கள் இருக்கிறார்கள் இந்தியா என்றால் அவர்கள் கீதை என்பதைச் சொல்கிறார்களே தவிர, திருக்குறளை யாரும் சொல்வதில்லை. கீதை ஒரு கொலைகார நூல். ஒருவன் தன்னுடைய உறவினர்களைக் கொல்ல மறுக்கின்றான். போர் நடக்கின்ற இடத்திலே, அவன் ஏன் கொலை செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு பெரிய நூல். அதில் ஆயிரம் கருத்துக்கள். அதனை உலகிலே பெரிய இந்தியப் பண்பாடு என்று சொல்லி பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உலகெங்கும் வாழும் அனைவருக்கும் பொதுவானத் திருக்குறளை எடுத்துச் சொல்ல மறுக்கிறார்கள். திராவிடப் பண்பாட்டை எடுத்துச் சொல்ல மறுக்கிறார்கள். அதற்காகத்தான் இந்த இதழ் தொடங்கப்பட்டது. அதனை நாம் தொடர்ந்து ஆராய்ச்சி செய்வோம் இன்றைய நிகழ்விலே இரண்டு கட்டுரைகள் ஆராய்ச்சி செய்யப்பட இருக்கின்றன முதல் கட்டுரையை எழுதியவரை அறிமுகப்படுத்தி நிகழ்வுகளைத் தொடங்குமாறு பகுத்தறி எழுத்தாளர் மன்றத்தின் தலைவர் திராவிடப்பொழில் ஆசிரியர்களில் ஒருவரான நேருவை அழைக்கின்றேன். என்று குறிப்பிட்டார்.

**முனைவர் வா. நேரு**

திராவிடப் பொழில் இதழ் என்பது பெரியார் மணியம்மை நிகர் நிலைப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் அய்யா ஆசிரியர் அவர்களால் முன்மொழியப்பட்டு 4 ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கித் தொடர்ச்சியாக இதழ்கள் என்பது வெளிவந்து கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு இதழும் வெளிவந்து அது மற்றவர்களால் வாசிக்கப்படுகிற பொழுது, நமது பெரியார் பன்னாட்டு அமைப்பு, அமெரிக்கா சார்பாக இதழ் குறித்துத் தொடர்ச்சியாக ஆய்வரங்கக் கூட்டங்கள் என்பது நடந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு ஏப்ரல் முதல் ஜூன் 2025 திராவிடப் பொழில் இதழை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த நிகழ்வுக்கு அடிப்படையாக அய்யா மருத்துவர் சோம.இளங்கோவன் அவர்கள் இருக்கிறார்கள். ஓர் இளைஞரைப் போல மிக உற்சாகமாகத் தொடர்ச்சியாக இந்தத் திராவிடப்பொழில் இதழ் வெளிவருவதற்கும், கட்டுரைகள் வருவதற்கும் அவர் அடிப்படைக் காரணமாக இருக்கிறார். அந்த வகையில் திராவிடப்பொழில் இதழின் ஆசிரியர் குழுவின் சார்பாகப் பெரியார் பன்னாட்டு அமைப்பு அமெரிக்காவிற்கு எங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த இதழில் இரண்டு கட்டுரைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். முதல் கட்டுரையாக முனைவர் அழகுசெல்வம் அவர்கள் எழுதிய ‘மனித மாண்புகள் வளர்க்கும் மரபுக் கலைகள்’ என்ற கட்டுரையை எடுத்து இருக்கிறோம் இதனைப் பற்றிப் பேச இருப்பவர் பகுத்தறிவு கலைத்துறை மாநிலச் செயலாளர் தோழர் மாரி கருணாநிதி அவர்கள்.அவர் ஆசிரியராகப் பணியாற்றக் கூடியவர். என்று அவரைப் பற்றி அறிமுகம் செய்து . அவர் இப்போது மதிப்புரை வழங்குவார் எனக் கூறி அவரைப் பேச நேரு அழைத்தார்.

**மாரி. கருணாநிதி** அவர்கள்

அனைவருக்கும் வணக்கம். பெரியார் பன்னாட்டு அமைப்பு அமெரிக்கா நடத்தக்கூடிய திராவிடப்பொழில் இதழ் ஆய்வு நிகழ்வில் இன்றைக்கு ஒரு கட்டுரையை ஆய்வு செய்யும் வாய்ப்பினை எனக்கு வழங்கி இருக்கிறார்கள். நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மிகுந்த நன்றிப்பெருக்கோடு இந்த ஆய்வுக் கட்டுரையை ஆய்வு செய்கிறேன்.

கற்பித்தல் முறைகள் என்று இந்த உலகம் பல்வேறு முறைகளை வைத்திருக்கிறது விளக்கம் சொல்லி நடத்தக் கூடிய முறை, விரிவுரை முறை தொடங்கி இன்று பல்வேறு விதமான கற்பித்தல் முறைகள் வந்துவிட்டன. குறிப்பாகச் செயல்வழிக் கற்றல் ஸ்மார்ட் வகுப்பறை உருவாக்கப்பட்டுக் கற்பித்தல் என்பது ஒரு தொழிலாக இன்னும் குறிப்பாக நவீன தொழில்நுட்பத்தில் அறிவியல் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்திக் கற்பிக்கும் முறையாக இன்றைக்கு மாறி சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. அப்படி நடக்கக்கூடிய இந்தக் கற்பித்தல் முறையில் ஆசிரியர் மையக் கல்வியாக இருந்த கல்வி முறை இன்று மாணவர் மையக் கல்வி முறையாக மாறிவிட்டது. மாணவர் மையக் கல்வி முறை என்பதை விடக் குழந்தைகள் மையக் கல்வி முறையாக இன்றைக்கு மாறிவிட்டது.

மாணவர்களை மையப்படுத்திக் கற்பிக்கக் கூடிய இந்தச் சூழலில் எத்தனையோ கோட்பாடுகள் இன்றைக்குக் கல்வியில் இருக்கிறது, நடத்தை இயல் கோட்பாடு, ஆக்க நிலையுறுத்தல் கோட்பாடு, முயன்று தவறி கற்றல் கோட்பாடு. முழுக் காட்சிக் கொள்கைக் கோட்பாடு என்று இப்படி நிறைய அடுக்கிக் கொண்டே போகலாம். பல்வேறு கருத்துக்கள், கோட்பாடுகள் இருக்கின்றன. கற்றல் முறை இருக்கிறது. கற்பித்தல் முறை இருக்கிறது. கற்பித்தல் கோட்பாடு இருக்கிறது. இத்தனை கோட்பாடுகளும் இதற்கான ஏற்பாடுகளும் எதை நோக்கிப் பயணிக்கிறது? கல்வி என்பது மனிதரை மனிதனாக்குவது என்று சொல்கிறார்கள் அப்படி மனிதனை மனிதனாக்கும் கல்வியை நாம் இன்றைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோமா? நாம் கொடுத்த கல்வி உண்மையிலேயே அவர்களை

மனிதர்களாக மாற்றி இருக்கிறதா? இந்தக் கல்வி மனிதநேயக் கல்வியாக இருக்கிறதா? மனிதநேயக் கோட்பாடாக மாறி இருக்கிறதா? என்று பல்வேறு சந்தேகங்கள் நமக்குள் எழுகின்றன.

எதை நாம் கற்றுக் கொடுத்தோமோ, அதைக் கற்றுக்கொண்டு, ஏற்றுக் கொண்டு இன்றைக்கு மாணவர்கள் எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கிறார்களா என்கின்ற அடிப்படைக் கேள்வி இருக்கிறது. அப்படி நாம் கற்பித்ததை மாணவர்கள் ஏற்றுக்கொண்டு நடக்கவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன? பகுத்தறிவை, பண்பாட்டை, அறிவியல் நெறிமுறைகளைக் கற்றுக் கொடுத்த பிறகும் நாம் எதைக் கற்பித்தோமோ எதை அவர்கள் கற்றுக் கொண்டார்களோ அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல் வழி வழியாகப் பாரம்பரியமாகச் சொல்லப்படக்கூடிய அல்லது இதுதான் சரி என்று நம்பக்கூடிய அறிவியலுக்குப் புறம்பான ஜாதியை மதத்தை ஏற்றுக் கொண்டு தான் கற்ற கல்வியை அறிவியலை புறம் தள்ளக்கூடிய ஒரு சமூகத்தை நாம் உருவாக்கி வைத்திருக்கிற போது அப்படி நாம் எதைத் தவறவிட்டோம்? அப்படித் தவறவிட்டது எது? நாம் தவறவிட்டதை எப்படி நாம் மறு கட்டமைப்புச் செய்வது என்கின்ற அடிப்படையில் இந்த ஆய்வுக் கட்டுரை அமைந்திருப்பதாக நான் கருதுகிறேன்.

10 பக்கங்கள். 10 பக்கங்களும் நம்மைப் பற்ற வைக்கும் பக்கங்களாக இந்த ஆய்வுக் கட்டுரை அமைந்திருக்கிறது. . அடுக்கடுக்கான நெறிமுறைகளைக் கொடுத்து, அழகிய வழிமுறைகளைச் சொல்லி இந்தக் கட்டுரை ஒரு புதிய தளத்தை நோக்கி நம்மை நகர்த்துகிறது குறிப்பாக, மதிப்பு மிக்க மாணவர்களை உருவாக்குவது எப்படி என்ற கேள்வியோடு இந்தக் கட்டுரை தொடங்குகிறது.

ஒரு மனிதன் கற்பதற்கு அவனுடைய உடல் செயல்பாடும் அவனுடைய மனச் செயல்பாடும் அடிப்படையாக அமைகிறது. அதில் கற்பித்தல் என்பது ஒரு மாற்றம். அந்த மாற்றம் என்பது பண்பாட்டு நடவடிக்கையாக அமைகிறது. கற்றலில் இருந்து பெறக்கூடிய வரலாற்றுச் செயல்பாட்டின் அடிப்படையில் அமைந்த சமூகம் என்பது மதிப்புமிக்க மாணவர்களை உருவாக்கத்தை நோக்கி நகர வேண்டும் என்ற ஆவலை இந்தக் கட்டுரை நமக்குத் தருகிறது

நான் இந்தப் பத்துப் பக்கங்களை 10 பகுதிகளாகப் பிரித்துப் பார்க்கிறேன்.மதிப்பு மிக்க மாணவர்களை எப்படி உருவாக்குவது என்ற கேள்வியை எழுப்பக்கூடிய முன்னுரை முதலில். பள்ளிக்கூடப் பண்பாட்டுச் சூழலில் மரபுக் கலைகளின் தேவை என்ன?. மரபுக் கலைகளைப் பற்றி இந்தக் கட்டுரை விரிவாகப் பேசவில்லை என்றாலும் தேவையான அளவு பேசியிருக்கிறது. குறிப்பாக உடல் மனம் செம்மைப்படுவதற்கு மரபுக் கலைகள் ஏன் தேவை, ஒரு மனிதனுடைய உடல் நலமாக இருக்க வேண்டும் பலமாக இருக்க வேண்டும், அவனுடைய மனமும் நலமாக இருக்க வேண்டும் பலமாக இருக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு எப்படிப்பட்ட பண்பாட்டுச் சூழலை நாம் உருவாக்க வேண்டும். அந்தப் பண்பாட்டுச் சூழல் எப்படி மரபுக் கலைகளை நோக்கி நகர வேண்டும் என்ற செய்தியை இந்தக் கட்டுரை பதிவு செய்திருக்கிறது.

மிக முக்கியமாக எல்லோரும் விரும்பக் கூடிய கற்றலில் எளிமை. மாணவர்கள் பலருக்கும் கற்றல் என்பது ஒரு தேவையற்ற நடைமுறை என்ற எண்ணம் இருக்கிறது. கேள்வி என்பதும் கற்றல் என்பதும் மாணவர்களுக்கு ஒரு மிகப்பெரிய எதிர்வினை ஆற்றக்கூடிய ஒரு செயலாக இன்றைக்கு இருக்கிறது. கற்றுக் கொள்வதைப் பயன்படுத்திக் கொள்வதற்கோ அதையும் தாண்டி தேர்வு எழுதி வெற்றி பெறுவதற்றோ மாணவர்கள் தயாராக இல்லை. இது இயல்பாக இருக்கிறது. தேர்வைப்

பார்த்து பயமில்லை. தேர்வே கூடாது என்ற நிலையைத்தான் இன்றைக்கு மாணவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். தேர்வு மிக மிக எளிமையாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

அப்படி இருக்கக்கூடிய ஒரு சூழலில் சமூகம், பெற்றோர், மாணவர், ஆசிரியர் என்கிற உறவுகளைக் கொண்டு மரபுக் கலைகள் வழியாகக் கற்றுக் கொடுத்தல் என்பது சாத்தியமா?. கற்றல் இனிமையை எப்படிக் கொண்டு வருவது? நிகழ்த்துக் கலைகள் மூலமாக நம்மால் கற்றலில் இனிமையைக் கொண்டு வர முடிந்தால் அது சிறப்பாக இருக்குமா என்ற கேள்வியைக் கற்பதில் முன் வைக்கிறது. கற்றல் என்பது, சமூகத்தில் இருந்து தொடங்கி, பெற்றோர் வழியாக வளர்ந்து, கல்வியில் நிலை பெற்று வாழ்நாள் முழுவதும் தொடரக்கூடிய ஒரு பொருளாக நாம் அறிகிறோம். அப்படிக் கற்கின்ற பொழுது அந்தக் கற்றல் செயல் வழியாக ஒருங்கிணைந்திருக்கிறதா? செயல் வழி ஒருங்கிணைந்து கற்றல் என்பது எப்படிப்பட்ட மனப்பான்மையை உருவாக்குகிறது?. குழு மனப்பான்மை, ஈடுபாடு, கடமை உணர்வு, படைப்பாக்கம் இப்படிப் பல்வேறு விழுமியங்களைக் கற்றல் மாணவர்கள் மனதில் பதிந்து இருக்க வேண்டுமே ஆனால் நடக்கவில்லையே.

மொழி, சமூகம், வரலாறு, பண்பாடு எனப் பாய்ந்து பரிணமித்து இயற்கை, வாழ்க்கை, கலைகள் எனக் கொடுக்கல் வாங்கல் தன்மையில் கற்றல் கொண்டிருக்க வேண்டும் என்பது அறிவியல் பார்வை. அதுதான் மிக முக்கியம் அறிவியல் பார்வையை இன்றைக்கு நாம் முன் வைக்க வேண்டிய அவசியத்தை, காலத்தின் கட்டாயத்தை இந்தக் கட்டுரையில் நான் பார்க்கின்றேன். கற்றல் எப்போது ஆழமாக இருக்கும் என்று சொன்னால் கலைகளைக் கற்கும் பொழுது, தான் கலைகளைக் கற்றுக் கொள்வதுடன் நில்லாமல் அதில் உள்ள அரசியலைப் புரிந்து கொண்டு நாம் கற்க வேண்டும். அந்த அரசியலைப் புரிந்து கொண்டு கலைகளைப் பயன்படுத்தி மாணவர்களை வார்த்தெடுக்க வேண்டும் என்பதுதான் இன்றையத் தேவையாக இருக்கிறது.

அதைவிட ஒரு மாய மரபு இருக்கிறது. என்ன மாய மரபு என்றால் மேலோர் மரபு . அதாவது உயர்ந்த மரபு மக்களுக்கானது அல்ல, ஒரு குறிப்பிட்ட மக்களுக்கானது என்ற அந்த அறமற்ற நிலைப்பாடு இருக்கிறதே அந்த நிலைப்பாட்டை நாம் ஒழித்தாக வேண்டும். முற்றிலுமாக ஒழித்தாக வேண்டும். வேரோடும் வேரோடி மண்ணோடும் பின்னிப் பிணைந்து இருக்கின்ற கலைகள் மனிதனின் உடலையும் மனத்தையும் வாழ்க்கையையும் அழகாக மாற்றுகிறது. அப்படிப்பட்டக் கலைகள் ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மட்டுமா என்றால் இல்லை இது அனைவருக்கும் ஆனது. அனைவருக்கும் ஆன கலைகளை நாம் எப்படி வார்த்தெடுப்பது என்கின்ற செய்தியை, அந்தச் சிந்தனையை நமக்குள்ளே இந்தக் கட்டுரை கொடுக்கிறது.

இரண்டாவது பகுதியாகத் தமிழும் அதனுடைய சிறப்பும். தமிழ் என்றாலே பலருக்கும் வராத சிறப்பு ழகரம். அந்த உச்சரிப்பு என்பது நமக்கு இன்னும் சரியாக வரவில்லை, கற்பிக்கப்படவில்லை என்கிற செய்தியைச் சுட்டிக் காட்டுவதோடு தமிழுக்கே இருக்கக் கூடிய சிறப்பான சங்க இலக்கியங்கள் பற்றி இந்தக் கட்டுரை பேசுகிறது. முதல் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற கவிதை முறை, இயல், இசை நாடகம் என்ற முத்தமிழ். நீதி இலக்கியங்கள், காப்பியங்கள், சமய இலக்கியங்கள் என்று விரிந்து பரந்து கிடக்கக்கூடிய தமிழ் இலக்கி யத்தில், அதனுடைய சிறப்பை இன்றைக்கு மாணவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய அளவிற்குக் கற்பிக்கப்படுகிறதா? என்றால் இல்லை.

இன்றைக்குக் கற்பித்தல், தொழிலாக மாறி இருக்கிறது. பலரும் கல்வியை மிக

எளிதாகக் கற்றுக்கொண்டு அதன் மூலம் வருமானத்தைப் பெறக்கூடிய வாய்ப்புப் பெற்றிருக்கிறார்களே ஒழிய, தமிழையும் அதன் சிறப்பையும் சிறப்பாகக் கற்பிக்கக்கூடிய, மாணவர்களைச் சிந்திக்க வைக்கக்கூடிய மரபை உருவாக்குகிறதா என்ற கேள்வியை இந்தக் கட்டுரை எழுப்புகிறது. தமிழ் எப்போதுமே சிந்தனை மரபாகத்தான் இருக்கிறது. நாம் இன்றைக்குச் சாதி இல்லை, மதம் இல்லை, பகுத்தறிவு வேண்டுமென்று பேசுகிறோமே அந்தப் பேச்சுக்கு, அந்த வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்திருப்பது இலக்கியங்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்கின்ற செய்தி எல்லாம் இலக்கியங்கள் சொல்லுவதுதான்.

அதை மாணவர்கள் புரிந்து கொண்டார்களா, அதைக் கற்றுக் கொண்டார்களா, அறிவியல் மரபை உருவாக்கிய நம்முடைய மொழி, தத்துவ மரபை உருவாக்கிய நமது மொழி, நம்முடைய வாழ்வியலை நமது வாழ்க்கையை நாம் எப்படி வாழ வேண்டும் என்றும் அதை எப்படிச் சரியாக வாழ வேண்டும் என்ற செய்தியை கற்பிக்கக்கூடிய தத்துவ மரபை கொண்டது நமது தமிழ் மொழி. இந்த மொழி உணர்வு எப்படிக் கடத்தப்பட வேண்டும், நம்முடைய தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு மிக லாகவமாகக் கடத்தப்பட வேண்டும். மொழியின் மூலமாக ஓர் இனம் தனது பண்பாட்டை, அதனுடைய தத்துவத்தை, அறிவியல் பார்வையைக் கொண்டு சென்றிருக்க வேண்டும். கொண்டு சென்றிருக்கிறோமா என்ற கேள்வியை ஆய்வு செய்ய வேண்டிய தருணம் இது என்று இந்தக் கட்டுரை நமக்கு வலியுறுத்துகிறது.

மூன்றாவதாக இசைத்தமிழைப் பற்றி இந்தக் கட்டுரையைப் படித்தால் பல பேருக்கும் இசைத்தமிழ் எளிதாகப் புரியும். தொல்காப்பியம் தொட்டு இன்றைய காலம் வரை இசை என்பது தனியாக எதுவும் இல்லை. ஓர் எழுத்து நீண்டு ஒலித்தால் அது இசையாக மாறுகிறது என்ற செய்தியை மிக அழகாக இந்தக் கட்டுரை சொல்லி இருக்கிறது. சொல், பொருள், யாப்பு ,அணி என்று இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு அசையில் தொடங்கி இசையாய் வளர்கிறது என்பதைச் சொல்கிறது.

மக்கள் இசை எப்படித் தோன்றியது, அது கழனிப் பாட்டாக, உழவர் பாட்டாக, ஏற்றப்பாட்டாக நடவுப் பாட்டாக, நெற்களப்பாட்டு, போர்க்களப்பாட்டு, வெற்றிப் பாட்டு எனப் பாடல்கள் பல வகை இருக்கிறது. அந்தப் பாடல்கள் எல்லாம் எப்படி வந்தது என்பதைப் பள்ளு என்று சொல்லக்கூடிய பள்ளத்து வழி வந்தவை என்ற செய்தி இதில் அழகாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதையெல்லாம் கடந்து கதை வடிவிலான, நாடக வடிவலான கற்பித்தல் முறைகள் பற்றிக் கட்டுரையாளர் பதிவு செய்திருக்கிறார்.

நான்காவது பகுதியாக 'பண்ணத்தி' என்ற சொல்லை மட்டும் ஆய்வு செய்து இருக்கிறார். அந்தச்சொல் இசையை, தாளத்தை(ராகத்தை) குறிப்பதாக இதில் சொல்லப்பட்டுள்ளது. அங்கே குறில், நெடில் எழுத்துக்கள் எப்படி ஒலிக்கின்றன, எப்படி இசையாக எழுத்து மாறுகிறது என்கின்ற செய்தி தக்க முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அசை என்பது எப்படி ஓசைகளாக மாறி செப்பலோசை, துள்ளலோசை, அகவல் ஓசை என்று எப்படிப் பாடப்படுகிறது என்பதை மிக எளிமையாக இந்தக் கட்டுரை விளக்குகிறது.

கணிதத்துக்கும் இசைக்குமுள்ளத் தொடர்பை இந்தக் கட்டுரை அழகாகச் சுட்டிக் காட்டுகிறது. தமிழ் இசைக்கருவிகள் பற்றியும், இயற்கையில் இருந்து இசையையும், இசைக்கருவிகளையும் பெற்ற நாம், தமிழிசையை, நம் மரபு சார்ந்து இருக்கக்கூடிய மொழியை, அறிவியல்

முறை கொண்டு முறையாகப் பயன்படுத்திக் கொள்கிறோமா என்ற கேள்வியைக் கேட்கிறார். இந்த நிகழ்த்துக் கலையை, இசைக்கலையை, பறையடித்தால் ஆடாத ஒரு குழந்தையை நாம் பார்க்க முடியுமா? எந்த இசையை இசைத்தாலும் குழந்தை ஆடுகிறது. எந்தப் பாட்டைப் பாடினாலும் குழந்தைகள் பாடுகின்றன. ஒரு நான்கு அடி இருக்கக் கூடிய ஆங்கிலப் பாடலை படிக்க முடியாமல் குழந்தை திணறுகிறது. அதே ஆங்கிலப் பாட்டை இசையோடு சொல்லிக் கொடுத்தால் 10 வரிகள் 15 வரிகள் கூட அதனால் படிக்க முடிகிறது. சினிமாப் பாடல்களைக் குழந்தைகள் மிக எளிமையாகக் கேட்டுத் திரும்பப் பாடிவிடுகிறார்கள். எனவே எழுத்து என்பதும், பாட்டு என்பதும், இசை என்பதும், கலை என்பதும் அது மக்களுக்காக இருக்கிறதா?. மக்களுக்கான கலையை நாம் கற்றுக் கொடுக்கிறோமோ, மக்களுக்கான கல்வியை நாம் கொடுத்து இருக்கிறோமா?. அதை மரபுக் கலைகள் வழியாகக் கொடுத்தால், இசை வழியாகக் கொடுத்தால், நாடக வடிவில் கொடுத்தால், கலை வடிவில் கொடுத்தால் நிச்சயம் கற்பித்தல் என்பது சிறப்பாக இருக்கும்.

நிகழ்கால அரசியலையும் நிகழ்காலச் சமூகத்தையும் புரிந்து கொள்வதற்கு ரசிக மாயையில் இல்லாமல் இந்த வாழ்க்கையை, இயற்கையான வாழ்க்கையை உண்மையான வாழ்க்கையை வாழ முடியும் என்ற செய்தியை இக்கட்டுரை நமக்குப் புரிய வைக்கிறது. நம்முடைய கடந்த காலத்தை நினைவூட்டி, கற்பித்த ஆசிரியர்களை, கற்பித்தலைப் புரிந்து கொள்ளச் செய்து எதிர்காலத்தில் நடக்கக்கூடிய கற்பித்தலுக்காகச் சில கேள்விகளை முன்வைக்கிறது. கலைகள் மூலமாகக் கற்போம், கலைகள் வழிக் கற்போம், கலைகள் வழிக் கற்பிப்போம் என்ற செய்தியை மிக ஆழமாக இந்தக் கட்டுரை சொல்கிறது. எனவே மனிதனை மனிதனாக்கும் கல்வியை, மரபுக் கலைகள் வழியாகத் தருவதற்கு வழிகாட்டும் இது ஒரு கொள்கைக் கட்டுரை. இந்தக் கட்டுரை மேலும் விரிவுபடுத்தப்பட்டு ஒரு புத்தகமாக வரவேண்டும். அப்படி வருமானால் அதையும் ஆய்வு செய்வோம். மரபு சார்ந்த, மரபுக் கலைகள் சார்ந்த மனிதநேயத்தை வலியுறுத்தக்கூடிய ஒரு கல்வி முறை வருவதற்கு அடிப்படையாக அந்தப் புத்தகம் அமையும். " என்று உரையாற்றினார்.

**பேரா முனைவர் அழகுச்செல்வம் :**

அனைவருக்கும் வணக்கம் இந்தக் கட்டுரையைத் திராவிடப்பொழில் இதழில் வெளியிட்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்த திராவிடப் பொழில் ஆசிரியர் குழுவிற்கும், அய்யா மருத்துவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தையும் நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கட்டுரையைப் பற்றிப் பேசிய தோழர் மாரி கருணாநிதி அவர்கள் மிக அற்புதமாக அவருடைய பார்வையின் வழியாக ஆய்வு செய்தார்.

கடந்த 15, 20 ஆண்டுகளாக இந்தப் பயிற்சியை நான் மேற்கொண்ட பொழுது கிடைத்த அனுபவங்களின் வாயிலாகத்தான் இந்தக் கட்டுரையை நான் எழுதி இருக்கிறேன் .ஆய்வாளர் சொன்னது போலக் கிட்டத்தட்ட ஒரு ஏழு எட்டுத் தலைப்புகளின் கீழே தமிழ் மரபு, தமிழ் இசை, தமிழ் கலைகள், கற்றல், கற்பித்தல், தொழில்நுட்ப ரீதியாகக் கற்றல், கற்பித்தலை எப்படிக் கொண்டு செல்வது என்பது மாதிரி பிரித்துக் கொண்டுதான் இந்தக் கட்டுரையை நான் எழுதினேன் ஆனால் ஒவ்வொரு கட்டுரையின் தலைப்பும் ஒரு சிறு நூலாக ஆக்குவதற்கு உரிய தலைப்புகள் அதனை அழகாக ஆய்வாளர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கட்டுரையை மீண்டும் இந்த ஆய்வாளர் வழியாகக் கேட்கிற பொழுது நிறைய விஷயங்களை அவர் முன்மொழிந்திருக்கிறார். குறிப்பாக இந்த இயற்கை, சமூகம், கற்றல்

கற்பித்தல் மீண்டும் இயற்கை, சமூகம் என்கிற அந்தச் செல் நெறியை ஓர் அறிவியல் பூர்வமான பார்வையாக இப்பொழுது எடுக்க வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கிறோம் இது ரொம்ப முக்கியமான விடயமாக எனக்குத் தெரிகிறது இந்த அறிவியல் பார்வை தான் இப்போது நமது குழந்தைகளுக்குத் தேவை. இன்றைக்கு இருக்கக்கூடிய வெகுஜன சமூக ஊடகங்கள், சோசியல் மீடியா என்று சொல்லக்கூடிய சமூக ஊடகங்களின் வழியாகக் கிட்டத்தட்ட உலகமே அதற்குள் வந்துவிட்டது. ஊடகங்கள் வழியாகத்தான் இந்த உலகம் இயங்குகிறது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை .

நினைவுபடுத்துவதற்காகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், தமிழக அரசியல் சூழலில் இந்த ஊடகங்கள் ஆற்றிய பங்கு மிகப் பெரியது. இது நேர்மறையாகவோ எதிர்மறையாகவோ ஒரு மாற்றத்தை கொடுத்திருக்கிறது. என்னுடைய தனிப்பட்ட முறையில் அல்லது ஓர் ஆய்வாளராக, ஒரு சமூக ஆய்வாளனாக, மொழி குறித்து, கலை குறித்து , பண்பாடு குறித்து, வாழ்வியல் குறித்து யோசிக்கக் கூடிய ஒருவனாக இந்த மாற்றம் என்பது ஓர் எதிர்மறை என்றுதான் நான் பார்க்கிறேன். ஏனென்று சொன்னால் அறிவியல் பூர்வமாக இயங்குவதற்குப் பதிலாக உணர்வுபூர்வமாக இந்தச் சமூகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. உணர்வுப்பூர்வமாக இயங்குவது என்பதைக் கலைகள்தான் சொல்லும். ஆனால் கலைகள் உணர்வுப்பூர்வமாகக் கற்றுக்கொண்டு அல்லது புரிந்து கொண்டு அல்லது அறிந்து கொண்டு தெரிந்து கொண்டு அறிவியல் நிலைக்குப் போவதற்கு உதவும். கடந்த ஒரு பத்து ஆண்டுகளாகக் குறிப்பாக உலகம் முழுக்க இந்தக் கற்றல் கற்பித்தல் புத்தகங்களில் இருந்தும், கரும்பலகைகளில் இருந்தும் வெளியேறி வந்துவிட்டது. அதாவது மாணவர்கள் குறிப்பெடுத்துக் கொண்டு படிக்கிற முறையில் இருந்து வெளியே வந்து விட்டார்கள். கரும்பலகையில் எழுதி, ஆசிரியர் சொல்கிற நிலையில் இருந்து மாறிவிட்டது.

உலகம் முழுக்க ஒரு பாதிப்பை ஏற்படுத்திய கொரோனா காலகட்டத்தில் இவர்கள் எல்லாம் கல்லூரி மாணவர்களாக இருந்தவர்கள். அவர்களுக்கு வழங்கப்பட்ட கைபேசி வழியாக அவர்கள் காட்சியைக் கண்டு, அந்தக் காட்சியைக் கண்டு கொண்டதன் வழியாக அவர்கள் உணர்வு வயப்பட்டவர்களாக மாறி இருக்கிறார்கள் . அதனுடைய விளைவாகத்தான் இந்த அரசியல் மாற்றம் நிகழ்ந்திருப்பதாக நான் பார்க்கிறேன். எனவே இந்தக் கட்டுரை மாணவர்களை அல்லது குழந்தைகளை நேரடியாகக் கற்றுக் கொள்வதற்கான ஒரு விடயத்தைத் தர வேண்டும் என்று வலியுறுத்துகிறது. என்னுடைய அமெரிக்கப் பயணமாக இருக்கட்டும் அல்லது சிங்கப்பூர் பயணமாக இருக்கட்டும், மலேசியப் பயணமாக இருக்கட்டும் அல்லது இலங்கைப் பயணமாக இருக்கட்டும் நானே குழந்தைகளோடு விளையாடுவதைத் தொடங்கி வைத்திருக்கிறேன். அதன் வழியாக நான் கற்றுக் கொள்கிறேன், கற்றுக் கொடுக்கிறேன்.

ஒரே ஒரு எடுத்துக்காட்டு சொல்ல விரும்புகிறேன். தட்டாங்கல் விளையாட்டு. தட்டாங்கல் விளையாடுகிற போது ஒரு கல் எடுத்தால் ஒரு சொல், இரண்டு கல் எடுத்தால் இரண்டு சொல். ஒரு சின்ன மடைமாற்றத்தை உருவாக்குகிறேன். ஒரு கல்லுக்கு ஒரு சொல். முதல் கல்லுக்கு அம்மா என்று சொல்கிறார்கள் என்று எடுத்துக் கொள்ளுங்கள். இரண்டாவது கல் எடுக்கிற போது அப்பா என்று சொல்லக்கூடாது, அண்ணன் என்று சொல்லக்கூடாது. உறவு முறையைச் சொல்லாமல் வேறு ஒன்றைச் சொல்ல வேண்டும். முதல் கல்லுக்கு அம்மா அல்லது அப்பா என்று சொன்னால் இரண்டு

கல்லை எடுக்கிறபோது சோறு ,தோட்டம் என்று சொல்ல வேண்டும். மூன்று கல்லை எடுக்கிற போது அவர்கள் இயல், இசை, நாடகம் என்று சொல்வார்கள் இப்படிச் சொற்களை நாம் நீடித்துக் கொண்டே போகின்றபொழுது சொற்களஞ்சியம் உருவாகிறது. அந்தச் சொற்களுக்கான பொருளை நாம் சொல்லித் தர வேண்டும்.விளையாட்டு வழியாகச் சொல்லுகிற போது குழந்தைகள் ஈடுபாட்டோடு கற்றுக் கொள்கிறார்கள், மகிழ்ச்சியாகக் கற்றுக் கொள்கிறார்கள். பொழுதுபோக்கு வழியாகக் கற்றுக் கொள்கிற ஒரு விடயமாக, அறிவுத்தளத்திலே வேலை செய்வதாக மாறுகிறது என்று நான் கருதுகிறேன். எனவே அந்தப் பயிற்சியை நான் அமைக்கிறேன்.

அதுபோல ஒத்தையா, ரெட்டையா விளையாட்டு. அதை நாம் தமிழில் சொல்கிற பொழுது அவர்கள் ஆங்கிலத்தில் அதனை மாற்றிக் கொள்கிறார்கள். இருந்தாலும் நான் தமிழில்தான் சொல்வேன். அப்படிச் சொல்கிறபோது அதில் விளையாட்டு இருக்கிறது, கணிதம் இருக்கிறது, அறிவியல் இருக்கிறது., அதில் பண்பாடு இருக்கிறது .இவற்றையெல்லாம் ஒருங்கிணைக்கக் கூடிய மொழி அங்கே இருக்கிறது. இப்படித்தான் இந்த விளையாட்டைக் குறிப்பாகப் புலம்பெயர்ந்து வாழக்கூடிய பெற்றோரின் குழந்தைகள், அந்தக் குழந்தைகளுக்கு, ஓரளவு இளைஞர்களுக்கு, பெற்றோர்களுக்குக் கூடக் கற்றுக்கொடுத்தோம். ஆனால் இது அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் நடத்த முடிகிறது.

தமிழ்நாட்டின் அரசுப் பள்ளிகள் பின்னடைவை கண்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் ஏறத்தாழ 12,500 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அதே அளவு அரசுப் பள்ளிகள் இருக்கின்றன. இந்தப் புள்ளி விவரங்களோடு தான், நான் ஆய்வினைத் தொடங்கி இருக்கிறேன். ஒரு பள்ளியிலே மாலையிலே விளையாடுவதற்காக, இந்த விளையாட்டு என்பது தமிழகத்தில் இருக்கிறது. விளையாண்டு கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் இதை அறிவு ஊக்கத்துக்கான விடயமாக மாற்றுவதற்குத் தடை செய்வது செல்லிடை பேசி வழியாக வந்த சமூக ஊடக முறைமைகள்தான். இந்தச் சமூக ஊடக முறைமைகள் அதாவது சோசியல் மீடியா அது வேறொரு உலகத்திற்குக் குழந்தைகளை அழைத்துச் செல்கிறது, வேறொரு நிலையிலே நிறுத்திவிட்டது. சோசியல் மீடியாவிலே வரக்கூடிய ஒரு விளையாட்டு என்பது அதில் எத்தனை விளையாட்டுக்கள் நாம் வைத்திருக்கிறோமோ அதைத்தான் அது காட்டுகிறது. 100 விளையாட்டுகள் வைத்திருக்கிறோம் என்றால் 100 விளையாட்டுக்கள் மட்டும்தான் விளையாட முடியும். விளையாட்டை அதுவாக, தானாகக் கணினி தராது. ஆனால் நேரடியாகக் குழந்தைகள் விளையாடுகிற போது 100, 200 ஆக மாறும். 200 என்பது 1000மாக 10000மாக மாறும். புதியப் புதிய விளையாட்டுகளை அவர்கள் கண்டடைவார்கள், உருவாக்குவார்கள், இந்தப் படைப்பு ஊக்கம், படைப்பாற்றல் என்பது சமூக ஊடக முறைமைகளில் அடிபட்டுப் போகிறது.

இன்றைக்குச் சமூக ஊடக முறை வழியாகத் தான் அரசுப் பள்ளிகளும் நடத்தப்படுகின்றன. தனியார் பள்ளிகளில் ஸ்மார்ட் கிளாஸ் ரூம் என்பது இருக்கிறது. இந்த முறைமை என்பது, சிஸ்டம் என்பது இயற்கையை, பண்பாட்டை, மொழியைப் புரிந்து கொள்வதைத் தடை செய்வதாக மாறி இருக்கிறது. இப்படி இருப்பதை மீட்டெடுக்க வேண்டும் என்றால் இது போன்ற பயிற்சிகள் அல்லது இதுபோலக் கற்றல் முறைகளைச் செய்ய வேண்டும்

என்பதற்கான ஓர் அறிவு நிலையில் இந்தக் கட்டுரை உருவாக்கப்பட்டது.

இசை என்று சொன்னால் இப்போது அவர்கள் கர்நாடக இசையைத்தான் சொல்கிறார்கள். தமிழ் மரபிசைச் சொற்களைக் குறிப்பாகத் தமிழ் நாதசுவரம், உருமி, பம்பை, தாளம் என்ற தமிழ் அடிப்படை மரபு இசையைப் பற்றி எல்லாம் யாரும் பேசுவது இல்லை . இந்த மரபு இசைகளை இசைக்கின்ற மரபு பற்றி அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சொல்லி இருக்கிறார்கள் ஆனால் இசையைக் குறித்தச் சொல்லாடல்கள், நிறையச் சொற்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அவற்றைத் தொகுப்பது இசைச் சொல் மரபு அகராதி, மரபிசைச் சொல் அகராதியை உருவாக்குவது, தமிழ் மரபும் பண்பாடும் சார்ந்த வாழ்வியல் கலைகளைக் கற்றல், கற்பித்தலுக்குப் பயன்படுத்துவது என்பது குறித்த ஒரு நூலை உருவாக்குவது. இந்தச் சமூக ஊடக முறைமைகளுக்கு எதிராக அல்லது இந்தச் சமூக ஊடக முறைமைகளின் வழியாகக் கூடத் தமிழ் மரபுக் கலைகளை, தமிழ் மரபு இசையை, மரபு வழிக் கற்றல் கற்பித்தல்களைக் கொண்டு வர வேண்டும் என்ற இந்த மூன்று பெரும் முயற்சிகளை, ஆய்வுகளை நான் செய்து கொண்டிருக்கிறேன்.

அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன். அதற்கான நிதியைத் திரட்டுவது பற்றிக் கூட நான் பேசிக் கொண்டிருக்கிறேன். அதற்கான வேலையைச் செய்ய வேண்டும் ஏனென்றால் நூல் ஆக்குகிற பொழுது நூலாக நின்று விடாமல் குறிப்பாக ஆசிரியர்களும் பெற்றோர்களும் பயிற்றுநர்களாக மாற வேண்டும். அதுதான் என்னுடைய முக்கியமான குறிப்பாக நான் சொல்ல விரும்புகிறேன்'' என்று குறிப்பிட்டு ஏற்புரை ஆற்றினார். பறை பற்றியும் இசை பற்றியும் தொல்காப்பியம் பற்றியும் குறிப்பிட்டு உடல் வலுவாக இருக்கும்பொழுதுதான் மனம் வளமாகும். அதற்கு விளையாட்டு அவசியம் என்று குறிப்பிட்டு தனக்கு ஒரு கனவு இருக்கிறது என விளக்கி, சிறப்பாக ஏற்புரையைப் பேரா முனைவர் அழகு செல்வம் ஆற்றினார்.

**மருத்துவர் சோம இளங்கோவன்** அவர்கள்

திராவிடப்பொழில் ஓர் ஆராய்ச்சி இதழாக நாம் ஒவ்வொருவரும் எப்படிச் செயல்பட முடியும் என்பதை ஆக்கபூர்வமாகச் செயல்படுத்த உதவும் ஒரு கருவியாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். இந்தப் படம் உங்களுக்கு எல்லாம் தெரியும், வள்ளுவர் கோட்டம். வள்ளுவரை எப்படி எல்லாம் உலகிற்கு அறிமுகப்படுத்த முடியும் என்ற சிந்தனையின் வெளிப்பாடாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் உண்டாக்கியது இந்த வள்ளுவர் கோட்டம். இந்த அரங்கிலே பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இதனுள் பல கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. இதே போல் கன்னியாகுமரியில் வள்ளுவர் சிலை வைத்து, உலகமே போற்றும் படி வள்ளுவரை உலகம் அறிந்து கொள்ளும் ஆர்வத்திலே உண்டாக்கப்பட்டது வள்ளுவர் சிலை.

திராவிடப் பொழில் இதழிலே ஒவ்வொரு அட்டையும் எப்படிச் சிறப்பாக இருக்கிறது என்பதற்கு இதனை இங்கு நான் காட்டினேன். ஓர் இதழ் பல கருத்துக்களைச் சொல்ல வேண்டும். பலரை ஊக்குவிக்க வேண்டும். அவர்களைச் செயல்படத் தூண்ட வேண்டும். இங்கே மரபுக் கலையைப் பற்றித் தோழர்கள் பேசினார்கள். பல்லாங்குழி விளையாண்டோம்,பம்பரம் விளையாண்டோம், எத்தனை விளையாட்டுகள் நாம் விளையாண்டோம். இன்றைய குழந்தைகள் கையில் செல்பேசி வைத்துக்கொண்டு உட்கார்ந்து இருக்கின்றன. சாப்பிடும்போது கூட நாங்கள் ஊட்டி விடுகிறோம்,ஆனால் பேத்தியின் கையில் செல்போன் இருக்கிறது. இந்த மாதிரியான செல்பேசி பரம்பரை வளர்ந்திருக்கிறது. அய்யா

சொன்னார்கள். அதை மாற்ற வேண்டும். அப்படி மாற்றும் கருவியாகத் திராவிடப்பொழில் இதழ் இருக்க வேண்டும். என்று நினைக்கின்றோம். இன்று இரண்டு கட்டுரைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.ஆய்வு ஒன்றைப் பார்த்து விட்டோம்.

இன்னொரு கட்டுரை திருவள்ளுவர் பற்றியது.'Valluvar's ten commandments for Good Governance' என்னும் கட்டுரை. இதனை எழுதியிருப்பவர் மிகச்சிறந்த ஆளுமையான அய்யா பிரபாகரன் அவர்கள். முனைவர் பிரபாகரன் அவருடைய தந்தையாரின் வழிகாட்டுதலில்; மிக அருமையாகப் படித்தவர். ஓர் அண்ணன் போர்ப்படையிலும், இன்னொரு அண்ணன் ஐ.ஏ.எஸ்.ஆக, பெரிய அதிகாரியாகப் பணியில் இருந்தவர். இவருடைய படிப்பு வேறு, படித்ததெல்லாம் கணக்கு மற்றவைகள். ஆனால் ஆராய்ச்சி எல்லாம் திருவள்ளுவர், சங்க இலக்கியம் அந்த மாதிரி தான். அமெரிக்க அரசு, நாசா இவற்றில் எல்லாம் பணியாற்றியவர். திருக்குறள் மாநாடு நடத்தியவர். புறநானூறு மாநாடு நடத்தியவர். திருக்குறளைப் பற்றிப் படமாக எடுத்து ஆங்கிலத்தில் அது வெளியானது. அது இப்பொழுது மற்ற மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டுப் படமாக காண்பிக்கப்பட்டு வருகின்றது.தனது வாழ்நாளை தமிழுக்காகவும் தமிழ் இலக்கியங்களைப் பரப்புவதற்காகவும் அர்ப்பணித்தவர். அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஏராளமாக எழுதி இருக்கிறார். உலகெங்கும் உள்ள தமிழர்கள், எந்த நாட்டில் தமிழர்கள் வாழ்ந்தாலும் பிரபாகரன் கட்டுரையைப் படிக்கிறார்கள். பிரபாகரனுடைய வெப்சைட்டைப் பார்த்தால் தெரியும், எங்கெல்லாம் தமிழர்கள் இருக்கிறார்கள் என்று.

அருமையான கட்டுரை. இன்றைக்குத் தேவையான கட்டுரை. இன்றைக்கு அரசுகள் எப்படி நடக்கின்றன?. திருக்குறள் படித்து அதன்படி அரசை நடத்த ஆரம்பித்தால் மக்கள் எவ்வாறு மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பது தான் கட்டுரையின் கருத்து. மிகவும் அழகாக எழுதியிருக்கிறார்.ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் போது மிகவும் அருமையாக உள்ளது. அருமையாக மொழி பெயர்த்து இருக்கிறார் என்பதுதான் சிறப்பு. ஓர் அரசு எப்படி இருக்க வேண்டும், 2000 ஆண்டுகளுக்கு முன்பு மன்னர் ஆட்சி நடந்து கொண்டிருந்த பொழுது எழுதிய கருத்துக்கள் இன்று மக்களாட்சி நடக்கும்போது ஒத்து வருகிறது என்பதைப் பார்க்கின்ற பொழுது நம்மால் வியப்படையாமல் இருக்க முடியாது.

அரசு எப்படி நடைபெறவெண்டும் என்பதைப் பற்றித் திருவள்ளுவர் எப்படி எல்லாம் சொல்லி இருக்கிறார் என்றால், ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும் என்பதற்குத் திருவள்ளுவர் ரொம்ப அழகாகச் சொல்லுகிறார்.

**உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு**

இதையெல்லாம் யார் செய்ய முடியும்?. அந்தக் காலத்தில் மன்னர் ஆட்சி. இந்தக் காலத்தில் மக்களாட்சி. மூன்று பிரிவுகள். legislative, judicial, and executive. அந்தக் காலத்தில் இந்த மாதிரி இருந்ததா?. திருவள்ளுவர் சும்மா எழுதி வைத்துவிட்டுப் போகவில்லை வாழ்க்கை முறையை எழுதி வைத்திருக்கிறார். தனி மனிதனுக்கு, அரசாக இருந்தாலும் சரி, இல்லற வாழ்க்கையாக இருந்தாலும் சரி எப்படி இருக்க வேண்டும் என்ற வாழும் முறையைத்தான் திருவள்ளுவர் எழுதி வைத்திருக்கிறார. ஆகவே இது எக்காலத்திற்கும் பொருந்துவது. இன்றைய காலத்திற்கும் பொருந்தி வருகிறது. அதுதான் முக்கியம். ஆள்பவன் எப்படி இருக்க வேண்டும் அதற்கு என்னென்ன எல்லாம் இருக்க வேண்டும் என்பதையெல்லாம் மிக

நன்றாகச் சொல்லி இருக்கிறார் நான் சில எடுத்துக்காட்டுகளோடு சொல்கிறேன், புரிந்து கொள்ள வேண்டும்.

கருத்துச் சொல்வதற்குப் பெரிய எம்.ஏ.,பி.ஏ. படித்திருக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. மக்களிடம் கேட்கவேண்டும். ஒரு சிறுவனை, ஏன் பள்ளிக்கூடம் போகவில்லை என்று காமராசர் கேட்கிறார். பள்ளிக்கூடம் போனால் நீ சோறு போடுவாயா? என்று அந்தப் பையன் எதிர்த்துக் கேட்கிறான். உடனே காமராசர் என்ன செய்தார், 'நான் சோறு போடுறேன் நீ பள்ளிக்கூடம் போறியா' அப்படீன்னு கேட்டார். அப்படித்தான் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார் காமராசர். அந்த மாதிரி யார் சொல்கிறார்கள் என்பது முக்கியமல்ல, கருத்து தான் முக்கியம்.

**அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு**

இந்த நான்கும் நான் நினைத்துப் பார்த்தேன், இது உண்மையா பொய்யா என்று. இப்படி இருந்தது யார் என்று பார்த்தேன். அறிஞர் அண்ணாதான் இப்படி இருந்தவர். காங்கிரஸ் அன்றைக்குப் பெரிய இமயமலை. தகர்ப்போம் என்று கிளம்பினார். தன்னைத் திட்டியவர் களுக்குக் கூடப் பெருமை செய்து, எல்லாருக்கும் பாராட்டுக்கள் செய்து பெருமைப்படுத்தினார். அவர் எம்.ஏ.பொருளாதாரத்தில் தங்கப் பதக்கம் பெற்றவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில், விடை திருத்தும்போது ஒரு பேராசிரியர் மிகவும் ஈர்க்கப்பட்டார் . அப்படி ஒரு மகிழ்ச்சி அந்தப் பேராசிரியர் அடைந்தார் என்று சொல்வார்கள். அண்ணா தன்னுடைய முதல் ஆட்சியில் முதல் பட்ஜெட். அதைத் தாக்கல் பண்ணும்போது அவரு சொல்றாரு, நான் அந்தக் காலத்தில் பொருளாதாரம் படித்தது இப்போது எனக்கு உதவியாக இருக்கிறது என்று. அந்தப் பட்ஜெட் பேச்சே அதை அடிப்படையாக வைத்துத்தான் பேசுகிறார். அருமையான பேச்சு என்று சொல்வார்கள்.

**இன்னொரு குறள்.**
**தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு**

இந்தக் குறளுக்கு நான் நினைத்துப் பார்த்தேன். முத்தமிழறிஞர் கலைஞர் வந்து எவ்வளவு உழைப்பு. உழைப்பு என்றால் ஒரு மனிதத் தன்மைக்கு மேலே உழைப்பு. கணினி ஆகட்டும். தமிழ்நாடு முன்னேற வேண்டும் என்பதற்காக டாக்டர் கலைஞர் அவர்கள் அந்தக் காலத்தில் தோற்றுவித்த டைட்டில் பார்க்கும் மற்ற நிறுவனங்களும் தான். இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால் உலகத்தில் பெரிய பெரிய நாடுகள் இருக்கின்றன. அமெரிக்காவில் ஜான் எஃப் கென்னடி நிலவுக்கே போகவேண்டும் என்று சொல்லி, நிலாவுக்குப் போக வைத்தார். ஆனால் சின்ன நாடு கியூபாவிடம் தோற்றார். அவருக்குச் சரியான ஆலோசகர்கள் இல்லை.

அந்தக் காலத்தில் பெரிய பெரிய கட்டுமானங்கள், கட்டிடங்கள் இல்லை என்றாலும் கூடப் பெரிய பெரிய அறிஞர்களை வைத்து அவர்கள் போய் மன்னனிடம் அறிவுரை சொல்லி ஆட்சியை நடத்தி இருக்கிறார்கள். இந்த அறிவுரை என்பதைத் திருவள்ளுவர் மிக நன்றாகச் சொல்லி இருக்கிறார்.அதை பிரபாகரன் மிக அழகாக எழுதியிருக்கிறார். ஓர் அரசை ஆள்பவன் நல்ல அறிவார்ந்த அறிஞர்களை வைத்துக் கொள்ள வேண்டும். அந்த மாதிரி அறிவு உள்ளவர்களும் அரசாங்கத்திற்குப் பயன்படக்கூடியவர்களாக இருக்க வேண்டும். சும்மா படிச்சு பெரிய நோபல் பரிசு வாங்கி எல்லாம் பயன் இல்லை. ஒருவருடைய அறிவு மக்களுக்குப் பயன்படவேண்டும்

சாதாரணக் குடும்பத்திலே பிறந்து வாழ்க்கையை எளிமையாக ஆரம்பித்தவர்

அய்யா ஆசிரியர் கி.வீரமணி அவர்கள். தந்தை பெரியாரின் மாணவராக மாறினார். அந்தக் காலத்தில் பெரியார் சொல்லித்தான் காமராசர் பள்ளிக்கூடங்களைத் திறந்தார். கல்வியிலே நாமெல்லாம் முன்னே வந்ததற்குக் காரணம் தந்தை பெரியார் அவர்கள். ஆனால் ஆசிரியர் வீரமணி அவர்கள் கருத்து வேறுபாடுகள் இருந்த அரசாங்கங்கள் இருந்தபோதும் சமூக நீதிச்சட்டங்களை அமுல்படுத்த வைத்தவர். எம்.ஜி.ஆர். 9000 ரூபாய் வருமான வரம்புச் சட்டம் கொண்டுவந்தபொழுது எதிர்த்துப்போராடினார்.வெற்றி பெற்றார். பின்பு திருத்தம் செய்யக் காரணமாக இருந்தார். அதேபோல ஜெயலலிதா அம்மையார் முதல்வராக இருந்தபொழுது 69 சதவீதம் இடஒதுக்கீட்டை ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்க 31சி என்னும் சட்டம் தந்தார். ஆனால் மிக எளிமையாக இருப்பார். பேரறிஞர் அண்ணா அவர்கள், சுயமரியாதைத் திருமணச் சட்ட வரைவை எழுதினார். அந்தச் சட்ட வரைவை அய்யா ஆசிரியர் வீரமணி அவர்களிடம் கொடுத்து தந்தை பெரியாரிடம் காட்டி ஏதாவது மாற்றம் செய்யவேண்டுமா என்று கேட்டு வரச்சொன்னார்.அன்றைக்கு இருந்த அதிகாரிகள் எல்லாம் இதற்காக முணங்கினார்கள். பெரியாரிடம் சென்று வருவதற்கு நாளாகும்,சீக்கிரம் நிறைவேற்றவேண்டும் என்றார்கள். இருந்தாலும் தந்தை பெரியாரிடம் கேட்டு வரச்சொன்னார் அண்ணா.அதே மாதிரி ஆசிரியர் அவர்கள் கொண்டு சென்று காண்பித்தார். தாலி கட்டி, மணமாலை மாற்றித் திருமணம் செய்து கொள்ளலாம் என்று இருந்ததைத் தாலி கட்டி அல்லது மணமாலை மாற்றித் திருமணம் செய்துகொள்ளலாம் என்று பெரியார் நுட்பமாகக் கண்டுபிடித்து திருத்தம் செய்தார்.And என்பதற்குப் பதிலாக or என்று மாற்றியது எவ்வளவு பெரிய மாற்றம் என்பதை அண்ணா உணர்ந்து, ஆசிரியர் அவர்களிடம் சொல்லி பெரியார் என்றால் பெரியார்தான் என்று தந்தை பெரியாரின் நுண்ணறிவை அண்ணா வியந்தார் என்பது வரலாறு. அந்த மாதிரி ஆள்பவர்களுக்கு அறிவுடையவர்கள் சொல்வதைக் கேட்கும் தன்மை இருக்கவேண்டும்.

அந்த வகையில் இன்றைக்கும் திருக்குறள் பொருத்தமாக இருக்கிறது என்பதைக் கட்டுரை ஆசிரியர் மிக நன்றாகச் சொல்லி இருக்கிறார். நாம் எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்க விரும்புகிறோம்.எல்லோரும் விரும்புகிறார்கள். தாமஸ் சபர்சன் என்பவர் பெரிய அறிஞர். ஒரு நாடு நன்றாக இருக்கிறதா என்பதற்கு அளவுகோல் மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா? என்பது என்றார். மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு அரசு உதவி செய்கிறதா என்பதும் முக்கியம்.

**அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
**திறனறிந்து தேர்ந்து கொளல்.**

இதனை ஆங்கிலத்தில் மிக அழகாக மொழிபெயர்த்து இருக்கிறார். ஆங்கில மொழிபெயர்ப்பு மிக அருமையாக இருக்கிறது. அந்தக் காலத்தில் யார் யாரோ கட்டளைகள் கொடுத்தார்கள் என்று எழுதினார்கள். கடவுள் எழுதிக் கொடுத்தார் என்றெல்லாம் சொல்லுவார்கள். அதெல்லாம் கட்டளைகள் கிடையாது. ஒரு மனிதர் எழுதி வைத்ததுதான் உண்மையான கட்டளைகளாக இன்றைக்கும் பயன்படுகிறது.

அந்தப் பத்துக் கட்டளைகள்

1. Let virtue guide all your actions and decisions. 2. Continuously seek knowledge by learning and listening to wise individuals. 3. When making

important decisions or enacting laws, consult ethical and wise advisors. 4. In judging crimes, consider all relevant factors, remain impartial, and, when needed, consult legal experts before using your authority to deliver justice. 5. Investigate the nature of each crime thoroughly and assign punishments that match the severity of the offense while also deterring future wrongdoing. 6. While administering justice, appear firm but ensure the final punishment is measured and fair. 7. Safeguard the well-being of your citizens by ensuring they are healthy, free from hunger and disease, and able to pursue a fulfilling life. 8. Acquire, develop, protect, and wisely manage resources for the benefit of the people. 9. Promote agricultural prosperity and ensure the safety and security of citizens from both internal disorder and external threats. 10. Always remember: no matter how prosperous a nation may be, it is meaningless without good governance.

இன்றும் இந்தக் கட்டளைகள் அரசுக்குத் தேவையாக இருக்கிறது. ஒரு நாடு பத்தி அப்பவே சொன்னேன். “உறுபசியும்…” என்று. அந்தக் காலத்தில் யானையை வைத்து போர் அடித்தார்கள் என்று சொல்கிறார்கள். யானையைப் பரிசாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மாதிரி எல்லாம் இருந்த நாடு, தமிழ்நாடு. ஐந்து ஆண்டுகள் மிகச் சிறப்பாக ஆட்சி இருந்தது. இப்போது அய்யா சொன்னது மாதிரி உணர்ச்சி வயப்பட்டு மக்கள் வாக்களித்து இருக்கிறார்கள். பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும், அவர் யாரைத் துணை கொண்டு ஆட்சி புரியப் போகிறார் என்பதைப் பொறுத்து தான் ஆட்சி இருக்கப் போகிறது.

**‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின் செல்பவர்’ என்றார்**
**வள்ளுவர்.**

பல எடுத்துக்காட்டுகள் உண்டு. வெனிசுலா, வடகொரியா, நைஜீரியா போன்ற பல நாடுகள். நல்ல வளம் நிறைந்த நாடுகள். கொள்ளையடிக்கப்படுகிறது. மக்கள் பட்டினியால் சாகிறார்கள். இன்று உலகத்திலே பசி பட்டினிக் கொடுமை குழந்தைகளை மிகவும் பாதிக்கிறது. மூன்று லட்சம் தமிழர்கள் ஒரே மாதத்தில் இலங்கையில் கொல்லப்பட்டார்கள் ஒரு மதவெறியனால். இன்றைக்குக் காசாவில் நடந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும் பொழுது நாம் செய்ய வேண்டிய கடமை திருக்குறளைப் பரப்பவேண்டும்.பல மொழிகளிலும் கொண்டு செல்லவேண்டும். படமெடுத்துக் காண்பித்து அய்யா பிரபாகரன் எழுதுவதை நாம் பரப்ப வேண்டும். தமிழர் அல்லாத மற்ற நண்பர்களுக்கு நாம் சொல்ல வேண்டும். அவர்கள் மூலமாக இந்த மனித குலம் வளம் பெற வேண்டும். மகிழ்ச்சி வர வேண்டும். திருக்குறள் என்பது ஒரு வழிமுறை வாழ்வியல் முறை நூல் மட்டும் அல்ல. ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளை மிகவும் சிறப்பாகச் சொல்லி இருக்கக்கூடிய நூல். இவ்வளவு சிறப்பான கட்டுரையைக் கொடுத்திருக்கும் அய்யா பிரபாகரன் அவர்களை இப்போது அன்புடன் அழைத்து ஏற்புரை தர வேண்டிக்கொள்கிறேன்” என்று குறிப்பிட்டு உரையாற்றினார்.

**பிரபாகரன் அவர்கள்** :

வணக்கம் என்னுடைய கட்டுரையை ஆய்வு செய்து அருமையான ஓர் ஆய்வு உரையை வழங்கிய மருத்துவர் இளங்கோவன்

அவர்களுக்கு நன்றி. திராவிடப்பொழில் ஆசிரியர் குழுவிற்கும் நன்றி. கட்டுரையில் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் வள்ளுவருடைய கருத்துக்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்னால் அவர் எழுதியிருந்தாலும் அது என்றைக்கும் பொருந்தும். எல்லா நாட்டிற்கும் பொருந்தும்.

பல காலமாகவே உலகத்தில் பசி பட்டினி வன்முறை எல்லாம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உலக வரலாற்றில் பார்த்தால் ஓர் 50 ஆண்டுகள் போர் இல்லாமல் இல்லை. அதற்கு முக்கியமான காரணம் ஆட்சி செய்தவர்கள்தான் காரணம். ஆட்சி ஒழுங்காக இருந்தால் நாடு ஒழுங்காக இருக்கும். ஓர் ஆட்சி என்றால் எப்படி இருக்க வேண்டும் என்றால் legislative, judicial, and executive பிரிவுகள் வேண்டும். குடியாட்சியாக இருந்தாலும் அதில் மூன்று பிரிவுகள் உண்டு. இந்த லெஜிஸ்லேடிவ் பிரான்ச் அந்தக் காலத்தில் கிடையாது. முடி ஆட்சிக் காலத்தில் இல்லை. இந்த மூன்று துறைகளுக்கும் மன்னர்தான் தலைவன். இந்தக் காலத்தில் மக்களாட்சி வளர்ச்சியில் முக்கியமாகப் பார்க்க வேண்டியது லெஜிஸ்லேடிவ் பிரான்ச் அது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது. மக்கள் தங்களை ஆள சரியான ஒருவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மக்கள் சரியான ஒருவனைத் தேர்ந்தெடுக்காவிட்டால் அந்த ஆட்சி நிலையாகச் சரியாக இருக்காது. இருக்க முடியாது. அதைத்தான் பிளாட்டோ சொல்லுகின்ற பொழுது யார் ஒருவன் அரசனாக இருக்க வேண்டும் என்றால் தத்துவவாதி அரசனாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்.

வள்ளுவர் தத்துவவாதி அரசனாக இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் ஓர் அரசன் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்று சொல்கிறார். கல்வியைத்தான் முக்கியமாகச் சொல்கிறார். மன்னர் அக்பர் போன்றவர்கள் எல்லாம் 13 வயதிலேயே அரசப் பதவிக்கு வந்தவர். அக்பருக்குக் கல்வி அறிவெல்லாம் கிடையாது. ஆனால் அவருக்கு நவரத்தினக் குழு என்ற ஒரு குழு இருந்தது. அந்தக் குழுவில் இருக்கும் பெரியவர்கள் சொல்வதைக் கேட்டு, அவர்களின் துணை கொண்டுதான் ஆட்சி நடந்தது. அதுபோல இன்றைக்கும் தமிழ்நாட்டிலே ஏதோ ஓர் உணர்ச்சிவசப்பட்டு அரசியல் மாற்றங்கள் நடந்திருக்கிறது. ஆனாலும் ஆட்சி ஒழுங்காக நடைபெற வேண்டும் என்றால், பெரியவர்களை – எப்படி ஆட்சி நடத்த வேண்டும் என்பதைத் தெரிந்தவர்களை, எப்படி முந்தைய ஆட்சிகள் ஒழுங்காக நடைபெற்றது என்பதைத் தெரிந்து அதன்படி நடக்க வேண்டும். அதைப் பின்பற்றி நடக்க வேண்டும். கல்வி முக்கியம். ஆட்சி என்றாலே அதனுடைய அடிப்படையான கொள்கை மக்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். மக்களுக்குத் தேவையான கல்வி வேண்டும். அவர்களுக்கு வேண்டிய மருத்துவம், செல்வம் இவையெல்லாம் துணை இருக்க வேண்டும் .

செல்வத்தைப் பற்றிச் சொல்லுகின்ற பொழுது வள்ளுவர் சொல்லுகின்றார், ஒரு மன்னன் அல்லது ஆட்சியில் இருப்பவன் செல்வத்தை உருவாக்க வேண்டும். நல்ல அறிஞர்கள் வாழும் நாட்டிலே செல்வத்தை உருவாக்க வேண்டும். எப்படிச் செல்வத்தை உருவாக்க வேண்டும் என்றால், இன்றைக்குத் தொழில் முனைவோர்கள் இருந்தால்தான் செல்வத்தை உருவாக்க முடியும். அதனால்தான் முன்னால் முதல்வர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் பல இடங்களுக்குச் சென்று, பல தொழில் முனைவோர்களைக் கொண்டு வந்து தமிழ்நாட்டில் பல புதிய தொழில் தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

அதுபோல மக்களுக்குக் கல்வி, மக்களுக்கு மருத்துவம் என எல்லாவற்றிலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் பல முன்னேற்றங்கள் நடைபெற்று இருந்தன. இதுபோன்ற முன்னேற்றங்கள் தொடர்ந்து நடைபெற வேண்டும். அதைப்போல நல்ல ஆட்சி என்றால் ஊழல் இல்லாமல் இருக்க வேண்டும். ஊழல் தான் எல்லாவற்றையும் கெடுக்கிறது. ஊழல் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நல்ல ஆட்சி அமைவது என்பது மக்களைப் பொருத்தது, மக்களுக்கும் தொடர்ந்து நாம் பரப்பரை செய்ய வேண்டும். எப்படிப்பட்ட ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது மக்களுக்குச் சென்றடைய வேண்டும். உணர்ச்சிவசப்பட்டுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கக்கூடாது. அதுபோல மக்களும் ஒருவர் கொடுக்கக்கூடிய பரிசுகளுக்காகவோ, பணத்திற்காகவோ வாக்கு அளிக்கக் கூடாது என்பதை எல்லாம் மக்களுக்கு நாம் சொல்ல வேண்டும். மக்கள் கையில் தான் அதிகாரம் இருக்கிறது. சரியாக அதிகாரத்தைப் பயன்படுத்தா விட்டால் சரியான தலைவர்களைத் தேர்ந்தெடுக்க முடியாது. முக்கியமான ஒரு குறளில் வள்ளுவர் சொல்லுகிறார்.

**ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே**
**வேந்தமை வில்லாத நாடு**

மருத்துவர் இளங்கோவன் சொன்னதைப் போலப் பல நாடுகளில் வேந்தமை நன்றாக இல்லாத நாடுகளில்தான் பிரச்சனை. இந்தியாவிலும் அப்படித்தான். அதற்காகத்தான் வள்ளுவருடைய இந்தப் பத்துக் கட்டளைகள், விதிமுறைகள் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். பலரும் படிக்க வேண்டும். வள்ளுவருடைய கருத்துக்கள் என்றைக்கும் பொருந்தும். எந்த நாட்டுக்கும் பொருந்தும். இந்த ஏற்புரையை வழங்க வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி” என்று குறிப்பிட்டு உரையாற்றினார்.

நிகழ்வின் முடிவில் திராவிடப்பொழில் ஆசிரியர் குழு உறுப்பினரான முனைவர் வா. நேரு அனைவருக்கும் நன்றி கூறினார்.

**தொகுப்பு : முனைவர் வா. நேரு**

### Self-Respect As Resistance : A Periyarist Analysis Of Contemporary Women's Experiences

**- D. Anitha**

This paper examines how the ideas of Periyar contribute to women's emancipation. Particular attention is given to the themes of self-respect, education and social autonomy in understanding the position of women within Tamil society. The paper concludes that Periyar's thought remains relevant today for understanding and interpreting women's empowerment in contemporary society.

### புதிய நோக்கில் மதச்சார்பின்மையின் தேடலில் மதமும், அரசியலும்

**– ச. உஷா**

புதிய நோக்கில் மதச்சார்பின்மையின் தேடலில் மதமும், அரசியலும் – மதத்தைத் தாண்டிய மானுடம் பறைசாற்றும் மறுமலர்ச்சிக் குரலாக சூர்யா சேவியரின் திருப்பரங்குன்றம் முழு வரலாற்று ஆய்வு என்ற இக்கட்டுரை திருப்பரங்குன்றத்தின் வரலாற்றை மதச்சார்பின்மை, அரசியல் ஆகியவற்றின் வழியாக ஆய்ந்து, மனிதத் தன்மையின் முக்கியத்துவத்தைப் பேசுகிறது.

### திருக்குறளும் திராவிடக் கருத்தியலும்

– எழுத்தாளர் **ந.முருகேசபாண்டியன்**

இன்று உலகமெங்கும் வாழ்கின்ற தமிழரின் அடையாளமாகக் கருதப்படுவது திருக்குறள். திராவிட இயக்கத்தினர் கடந்து நூறாண்டுகளுக்கும் மேலாகத் திருக்குறளைப் பரப்பும் பணியை மேற்கொண்டதையும் அதில் குறிப்பாகப் பெரியாரின் பங்களிப்பையும் இந்தக் கட்டுரை விவரிக்கிறது. பெரியார் எப்படித் திருக்குறளின் சில கருத்துகளைக் கட்டுடைக்கிறார் என்பதையும் சுவைபட விளக்குகிறது.

### தந்தை பெரியாரின் மூட நம்பிக்கை ஒழிப்பில் பகுத்தறிவுச் சிந்தனை ஓர் ஆய்வு

– எழுத்தாளர் **சு.ஆறுமுகம்**

இந்தக் கட்டுரை, எளிய மக்கள் எப்படி அறியாமையால் மூட நம்பிக்கைக்கு ஆட்படுகிறார்கள் என்பதை விளக்குகிறது. வரலாற்றின் அடிப்படையில் விவரிக்கிறது. தந்தை பெரியாரின் கருத்துகள் அடிப்படையில் மூட நம்பிக்கைகளை எதிர்த்துப் போராடுவதைப் பற்றியும் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

### Book Review : The Cambridge Companion to Periyar

**- Dr. B. R. Veeramani**

The Cambridge Companion to Periyar, edited by A. R. Venkatachalapathy and Karthick Ram Manoharan, marks a significant milestone in the scholarly recognition of E. V. Ramasamy "Periyar" as a major intellectual figure of global importance. This review examines how the volume situates Periyar's ideas within wider debates on social justice, political philosophy, feminism, secularism, and postcolonial thought.


PERIYAR MANIAMMAI INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY (Deemed to be University)
Established Under Sec. 3 of UGC Act, 1956 • NAAC Accredited
think • innovate • transform
Periyar Nagar, Vallam, Thanjavur - 613 403. Tamil Nadu, India.

dravidapozhil.pmu.edu